
அபூர்வமான
கலா சிருஷ்டிக்கு
அமோகமான
ஆதரவு....
ஜூபிடரின்
கன்னியின்
காதலி
வார்த்தைகளின் வர்ணஜாலத்தால்
வனிதையை மயக்கும் சங்கீதம்...
"கலைவாணியே......"
"வானத்து முழு மதியோ....."
ராம்நாத்-சேகர்
தயாரிப்பு
டைரக்ஷன்-ராம்நாத்
வசனம்-எஸ்.டி.சுந்தரம்
ஸ்டூடியோ-சென்ட்ரல்......
......ராஜதானி பூராவும் நடைபெறுகிறது



எப்போதும் தயார்தான் அவனது க்ளாக்ஸோ ஆகாரத்திற்கு...... பரிசுத்தமான பால் உணவு......மாந்தமும் சோகையும் வராமல் தடுக்க வைடமின் D-யும் இரும்பு சத்தும் அளந்து கணக்காகக் கலந்தது. கைபடாமல் தயாரிக்கப் பட்டது க்ளாக்ஸோ.
Glaxo
கிளாக்ஸோ
குழந்தை ஆகாரம்
எச். ஜே. பாஸ்டர் & கம்பெனி லிட்., பம்பாய், கல்கத்தா, மதராஸ்



ஏற்பட்டிருக்கும் புகழிலிருந்தே ஒரு கடியாரத்தை மதிப்பிடுங்கள்

எந்த அம்சத்தையும்விட ஒரு கடியாரத்தின் புகழ் தான் முன்னே நிற்கிறது. ஊகத்தின்மேல் ஒரு கடியாரம் வாங்குவது தகாது. அதனால்தான் தயாரிப்போரின் புகழை அனுசரித்து அந்த நீதிபதி ஒரு "வெஸ்ட் என்டு" கெடியாரத்தை வாங்குகிறார்.

கடந்த முக்கால் நூற்றாண்டுக்குமேல், நம்பிக்கையான அழகிய கை கெடியாரங்களை சப்ளை செய்வதில் எங்களுக்கு ஏற்பட்டிருக்கும் நல்ல பெயரைக் குறித்துப் பெருமித மடைகிறோம். நீங்கள் ஒரு "வெஸ்ட் என்ட் கைகெடியாரத்தை வாங்கும் போது. என்ன விலையானாலும் பாதகமில்லை. கடிகாரங்களிலே சிறந்ததைத்தான் வாங்குகிறீர்கள் என்று திடமாக இருக்கலாம்.



பிரேஜா-ரெக்ஸ்: எவர்பிரைட் ஸ்டீல், ரூ. 200/-
18 காரட் தங்கம் ரூ. 420/-

West End Watch Co.

BOMBAY
CALCUTTA

வெஸ்ட் எண்ட் வாட்ச் கோ., பம்பாய் & கல்கத்தா

2-வது வெற்றிகரமான வாரம்





ஆகஸ்ட் 19ஊ முதல்
பாஸ்கர் பிக்சர்ஸ்
நாட்டியராணி
பி. எஸ். ஸரோஜா ☆ வசுந்தரா ☆ ஜெயம்மா ☆ ராஜாமணி
பி. எஸ். ராஜா அய்யங்கார் • பாலையா • சார்லி • லலிதா, பத்மினி நடித்தது....
சென்னை ஸ்ரீ கிரௌனிலும்
மற்றும்
பெங்களூர் ... சாரதா
பெங்களூர் ...
பெங்களூர் ... நியூ ஓபேரா
மதுரை ... ஸ்ரீதேவி
கோயமுத்தூர் ...
திருநெல்வேலி ... பேலஸ்
காஞ்சிபுரம் ... கண்ணன்
வேலூர் ... டாஜ்
ராஜபாளையம் ... தனலக்ஷ்மி
சென்னையில்
தினசரி மூன்று காட்சிகள்
3, 6-15, 9-30 மணிக்கு
டைரக்ஷன்: பி. என். ராவ்
ஸ்டூடியோ ஜெமினி
பாட்டுகள்
நடனம் வி. மாதவன்

கல்கி பொருளடக்கம்

மலர் 9 | ஆகஸ்டு 21 | விரோதி ஆவணி 5உ
இதழ் 3

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்களும் சம்பவங்களும் கற்பனையே.


ருஷ்யாவுக்கு எதிராக மேற்கு ஐரோப்பிய நாடுகள் ஒன்று சேர வேண்டும் என்று சர்ச்சில் தூபம் போட ஆரம்பித்திருக்கிறார். அவரது உபதேசம் எதில் வந்து முடியுமோ!
மேற்கு ஐரோப்பா


பம்பாயிலே சர்தார் பட்டேல் டாக்டர்களின் கண்காணிப்பில் இருந்து வருகிறார். எனவே, பிரிட்டிஷ் ஆட்சியின் போது தாம் சிறைச்சாலையில் ஓய்வு எடுத்துக்கொண்ட ஞாபகம் அவருக்கு உண்டாகலாம்!
பிர்லா மாளிகை பம்பாய்
டாக்டர்
டாக்டர்

கல்கி

மலர் 9 | தமிழ்த் திருநாடு தன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் | இதழ்

என்ன சேதி?

ஆஸ்தான கவிஞர்

நாளது ஆகஸ்டு மாதம் 14ந் தேதி மாலை சென்னை ராஜாஜி மண்டபத்தில் ஒரு இனிய திருவிழா நடைபெற்றது. சென்னை மாகாணத்து ஆஸ்தான கவிஞர்களை அரசாங்கத்தார் அன்று அழைத்து மரியாதை செய்தார்கள். கவர்னர் பவநகர் மகாராஜா விழாவுக்குத் தலைமை வகித்தார். வெல்வெட் உறையிட்ட பட்டாக்கத்தி சகிதமாக பவநகர் மகாராஜா சிம்மாசனத்தில் வீற்றிருந்தது பழைய காலத்து ராஜ தர்பார்களை நினைவூட்டியது. பவநகர் மகாராஜாவுக்கு அருகில் பவநகர் மகாராணியும் வீற்றிருந்தார். சென்னை மாகாண மந்திரிமார்கள் புடை சூழ்ந்து விளங்கினார்கள். கல்வி மந்திரி மாதவ மேனன் சென்னை சர்க்கார் கல்விக்காகவும் கலைக்காகவும் செய்திருக்கும் காரியங்களைக் கச்சிதமாக எடுத்துச் சொல்லி ஆஸ்தான கவிஞர்களை அன்புடன் வரவேற்றார். அரசாங்கப் பிரதம காரியதரிசி ஸ்ரீ ராமுண்ணி மேனன் ஆஸ்தான கவிஞர் ஒவ்வொருவரையும் பற்றிய வரலாறுகளைக் கட்டியம் கூறும் முறையில் எடுத்துச் சொன்னார். ஆஸ்தான கவிஞர் என்னும் பட்டம் பொறித்த பதக்கத்தைக் கவர்னர் ஒவ்வொரு கவிஞரின் கழுத்திலும் சூட்டி அழகிய சால்வையும் போர்த்தினார். ஆயிரம் ரூபாய் செக் அடங்கிய உறையை ஒவ்வொரு கவிஞர் கையிலும் பிரதமர் குமாரசாமி ராஜா வழங்கினார். பின்னர் கவிகள் உரை நடையிலும், பா நடையிலும் மறுமொழி கூறினார்கள். நாட்டில் தர்மத்தையும் ஒழுக்கத்தையும் நிலைநாட்டுவது அரசாங்கத்தின் முதன்மையான கடமை என்பதை நினைவூட்டி நாமக்கல் கவிஞர் அழகாகப் பேசினார். காந்தி மகாத்மாவுக்குப் பாமாலை சூட்டிய காரணத்தினாலேயே தமக்கு இந்த ஆஸ்தான கவிப்பட்டம் கிடைத்தது என்று சொல்வதாகக் குறிப்பிட்டு மகாத்மாவுக்குத் தமது வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்து வாழ்த்தி வணங்கினார்.

ஐந்து வருஷம் ஏன்?

ஆஸ்தான கவிஞர்களாக நியமிக்கப்படுகிறவர்கள் ஐந்து வருஷத்துக்கு மட்டும் அந்தப் பதவியில் இருப்பார்களாம். பிறகு சர்க்கார் இஷ்டப்பட்டால் மாற்றிக் கொள்ளலாமாம். ஆஸ்தான கவிஞர் பட்டம் ஜில்லா போர்டு அக்கிராசனர் பதவி அல்லது முனிசிபல் சேர்மன் பதவி போன்றது அல்ல என்பதை நாம் குறிப்பிட வேண்டியதாயிருக்கிறது. ஆஸ்தான கவிஞர் ஆகிறவர் அவருடைய ஆயுட்காலம் வரையில் ஆஸ்தான கவிஞராயிருப்பதுதான் உலகமெங்கும் வழங்கும் மரபு. நமது சென்னை மாகாணத்தில் மட்டும் அதற்கு மாறாக ஆஸ்தான கவிஞர் பதவி எதற்காக அற்பாயுள் பெற வேண்டும் என்பது தெரியவில்லை. இந்த மாகாணத்தில் மந்திரிகள் அடிக்கடி மாறுவது இயல்பாயிருப்பதால் ஆஸ்தான கவிகளையும் மாற்ற வேண்டும் என்று எண்ணினார்கள் போலும். கல்விக்கும் கவித்திறமைக்கும் அளிக்கப்படும் பட்டங்களையும் மரியாதைகளையும் தற்காலிகமாகக் கொடுப்பது பெரும் அபத்தம். ஒருவர் 'மகாமகோபாத்தியாய' என்ற பட்டம் பெற்றால் தொண்ணூறு வயது வாழ்ந்தாலும் அந்தப் பட்டம் அவருக்கு நிலைத்து நிற்கும். ஒரு தடவை 'சங்கீத கலாநிதி' ஆனவர் என்றைக்கும் சங்கீத கலாநிதிதான்! முதன் முதலில் நமது மாகாணத்தில் ஆஸ்தான கவிஞராகியிருப்பவர்களை ஐந்து வருஷக் கவிஞர்களாக வைக்காமல் ஆயுள் கவிஞர்களாக மாற்றுவது மிகவும் அவசியம்.

காலி நாற்காலிகள்

நாற்காலி என்பது நாலு காலில் நிற்பதனால் அந்தப் பெயர் அடைந்தது. ஒருவேளை 'காலியாக இருக்கவேண்டியது நாற்காலி' என்ற பொருளும் சொல்லலாமோ என்னும் சந்தேகம் ஆஸ்தான கவிஞர் விழாவுக்குச் சென்றவர்களின் மனதில் தோன்றியிருக்கும். மேடைக்கு எதிரில் பல வரிசை நாற்காலிகள் ஆள் இன்றிக் காலியாக இருந்தன. மற்ற அரசியல் சம்பந்தமான தர்பார்களுக்கு எப்படியோ அழைப்பு அனுப்பிக் கொண்டு போகட்டும். ஆஸ்தான கவிஞர்களுக்கு மரியாதை செய்யும் சபைக்கு இலக்கியப் பற்றுடையவர்கள், அந்தந்த தேச பாஷையில் ஆர்வம் உடையவர்கள், வித்வான்கள், புலவர்கள், நூலாசிரியர்கள், எழுத்தாளர்கள், பொது ஜனப் பிரதிநிதிகளான எம். எல். ஏ.க்கள், பிரபல காங்கிரஸ் வாதிகள், அரசியல் பிரமுகர்கள் முதலியோரை அழைக்க வேண்டாமா? ஹைகோர்ட் ஜட்ஜுகள், ஐ. சி. எஸ். காரர்கள் முதலியோர்களை அழைத்தால் போதுமா? அப்படித்தான் அழைத்தார்களே? அழைத்தவர்கள் எல்லாரும் வந்திருந்தார்களா? வந்திருந்தால் நாற்காலிகள் ஏன் காலியாயிருக்க வேண்டும்? அன்று ராஜாஜி மண்டபத்திற்கு விஜயம் செய்தவர்களில் பாதிப் பேருக்கு மேலே ஆஸ்தான கவிகளைப் பற்றியோ அவர்களுடைய கவிதைகளைப் பற்றியோ அறியாதவர்கள் என்று நிச்சயமாகக் கூறலாம். "தெரியாதவர்களுக்குத்தானே தெரியப்படுத்த வேணும்? தெரிந்தவர்களுக்குத் தெரியப் படுத்துவானேன்?" என்று திருப்பிக் கேட்கலாம். ரொம்ப நல்லது; அப்படியானால் அடுத்த தடவை இம்மாதிரி இலக்கிய மகாசபைகள் நடத்தும்போது எழுதப் படிக்கத் தெரியாதவர்களை மட்டும் கூட்டி வைத்து நடத்துங்கள்!

மந்திரிகளைப் போலவா?

திருநெல்வேலியில் தமிழ் நாட்டுக் காங்கிரஸ் கமிட்டி தலைவர் ஸ்ரீ காமராஜ் அவர்கள் பேசியபோது, "தெருவில் போகிற யாரை வேணுமானாலும் பிடித்து மந்திரியாகச் செய்து விடலாம். ஆனால் டாக்டர்களையும் என்ஜினியர்களையும் அப்படித் திடீரென்று உற்பத்தி செய்து விட முடியாது!" என்று கூறியதாகத் தினப் பத்திரிகைகளில் வெளியாகியிருந்தது. இது நம் மந்திரிகளுக்கு அவ்வளவு பெருமை தரும் பாராட்டுரை என்று சொல்ல முடியாது. ஆனால் டாக்டர்களையும் என்ஜினியர்களையும் பற்றி ஸ்ரீ காமராஜ் கூறியது பரிபூரண உண்மை. இதனால்தான் இம்மாகாணத்தில் சிலர் "என்ஜினியரிங் வைத்திய கல்லூரிகளுக்குச் சாதிவாரியாக மாணாக்கர்களை எடுக்கக்கூடாது. தகுதி பார்த்து எடுக்க வேண்டும்" என்று முறையிட்டு வருகிறார்கள். குறிப்பிட்ட சாதியைச் சேர்ந்தவர் என்பதற்காக ஒருவரை என்ஜினியராக்கி அவர் கட்டிய பாலம் அடுத்த வருஷம் வெள்ளத்தில் போய்விட்டால் அதனால் கஷ்டப்படுவது யார்? பொதுமக்கள் அல்லவா? அதுபோலவே சாதிக்காக ஒருவரைப் படித்து டாக்டர் பட்டம் கொடுத்து வைத்தியம் பண்ணச் சொன்னால் அவர் 'அரை வைத்தியர்' ஆவதற்காகக் கொல்லும் ஆயிரம் பேருக்கும் யார் ஜவாப்தாரி?

தகுதியைப் பார்த்தே மாணாக்கர்களைச் சேர்ப்பது என்றால், தகுதியை எப்படி நிர்ணயிப்பது? பரீட்சை மார்க்கை மட்டும் பார்த்தால் போதுமா? பரீட்சையில் மார்க்குக் கிடைப்பது அதிர்ஷ்டச் சீட்டுப் போடுவதை ஒத்தது. அதிலும் பரீட்சைப் பேப்பர்கள் 'அவுட்' ஆவது சர்வ சாதாரணமாயிருக்கும் நிலையில், எப்படி மார்க்கைக் கொண்டு தகுதியை நிர்ணயிப்பது?

இந்தச் சிக்கலான பிரச்னையில் நடப்பு வருஷத்தில் ஓரளவு அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறதென்று அறிந்து மிக்க மகிழ்ச்சி அடைகிறோம். சாதி விகிதாசாரத்தையும் வைத்துக் கொண்டு அதற்குள்ளே மார்க்கு மூலம் ஏற்படும் தகுதியையும் மற்றத் தகுதிகளையும் ஓரளவு பார்த்து என்ஜினியரிங், வைத்தியக் கல்லூரிகளுக்கு மாணாக்கர்களைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். ஸ்தானங்கள் ஒதுக்கப்பட்ட ஒரு வகுப்பாரில் அபேட்சகர்கள் வராவிட்டால், அந்த ஸ்தானங்களைத் தகுதியை மட்டும் பார்த்தே கொடுத்திருக்கிறார்கள். இது ஓரளவு அபிவிருத்திதான் என்பதில் சந்தேகமில்லை. "நியாயமான காரியம்; அவசியத்தினால் செய்ய வேண்டியிருக்கிறது" என்று எவரும் ஒப்புக்கொள்ள வேண்டிய ஒரு திட்டத்தை நடத்திவைப்பதில் சத்யாக்கிரஹ இயக்கத்தில் காட்ட வேண்டிய உறுதியும் பிடிவாதமும் காட்ட வேண்டிய அவசியம் இல்லை. தர்ம சங்கடமான பிரச்னைகளில் கூடியவரையில் சமரசப்படுத்தி எந்தக் கூட்டத்துக்கும் அதிருப்தி அதிகமாகாதபடி பார்த்துக் கொள்வதுதான் ஜனநாயக மந்திரிகளின் கடமையாகும். சென்னை மந்திரி சபையார் இந்த வருஷத்தில் அத்தகைய முறையைக் கையாண்டிருப்பதை அறிந்து மகிழ்ச்சி அடைகிறோம்.



ஒரு நாளும் இராதவாறு சென்ற திங்கட்கிழமை சூரியன் அதிக சோபையுடன் உதயமானான்!

அன்று இந்திய மகா ஜனங்களின் குதூகலம் சொல்லி முடியாது.

மக்களின் மட்டற்ற மகிழ்ச்சி சூரியனுக்கு அதிகப் பிரகாசத்தைக் கொடுத்ததா, அல்லது சூரியனின் அதிக சோபை ஜனங்களின் சந்தோஷத்துக்குக் காரணமாக இருந்ததா என்பதை யாரால் சொல்ல முடியும்?

ஜனங்களின் ஆனந்த ஆரவாரம் விந்தியத்தையும் இமயத்தையும் முட்டி எதிரொலித்தது; கங்கை, யமுனை, காவேரி முதலிய ஜீவ நதிகளின் பிரவாகத்துடன் கலந்தது; ஏழு கடல்களையும் பெரு அலைகளையும் கடந்து சென்று உலக ஜனங்களின் கவனத்தை ஆகர்ஷித்தது.

எந்தக் கொடிக்காக இந்தியர்கள் எல்லையில்லாத் தியாகமும் செய்தார்களோ—எந்தக் கொடி கம்பீரமாக வானளாவ அசைந்து ஆடவேண்டும் என்பதற்காகத் தேசிய வீரர்களும் தலைவர் திலகங்களும் தலை முறை தலை முறையாகப் போர் அரங்கங்களிலும் சிறைச் சாலைகளிலும் தவம் கிடந்தார்களோ, அந்த பாரதத் தாயின் மணிக்கொடி அன்று உலக மெங்கும் பட்டொளி வீசிப் பறந்தது.

அமெரிக்கா பிரிட்டன் போன்ற பல தேசங்களிலும் அன்று சுதந்திர இந்தியாவின் கொடி காற்றினிலே வரும் கீதத்தின் ஒலியோடு கம்பீரமாகப் பறந்து இந்தியாவின் பெருமையை உலகத்துக்கு வலியுறுத்தியது.

பாரத நாட்டில் வருஷா வருஷம் எத்தனையோ உற்சவங்களும், விழாக்களும், வைபவங்களும், கொண்டாட்டங்களும் நடைபெறுகின்றன.

ஒவ்வொரு ஜாதி சமய மதத்தினரும் குறிப்பிட்ட விழாக்களை மாத்திரமே அனுஷ்டிக்கிறார்கள்.

எனினும், சர்க்காரும் ஜனங்களும் சகல மதத்தினரும் கொண்டாடும் சர்வ மத சம்மதமான திருவிழா ஒன்றே ஒன்றுதான் உண்டு.

எல்லாருக்கும் சொந்தமான அந்த சுதந்திரத் திருவிழாவை அன்று இமயம் முதல் குமரி வரையிலும், பம்பாயிலிருந்து பர்மா வரையிலும், சான் பிரான்ஸிஸ்கோவிலிருந்து சிங்கப்பூர் வரையிலும் எல்லா இந்தியர்களும் கொண்டாடினார்கள்.

அந்த வைபவங்களில் வெளி நாட்டு சர்க்கார் பிரதிநிதிகளும் கலந்து கொண்டு சுதந்திர இந்தியாவுக்கு மரியாதை செய்தார்கள்.

அமெரிக்க ஜனாதிபதி முதல் சகல வல்லரசுத் தலைவர்களும் வாழ்த்துக் கூறினார்கள்.

"சரித்திரப் பிரசித்தமான இந்த வைபவத்தில் உலகம் முழுதும் கலந்து கொள்கிறது. இந்தியாவின் கலாசாரங்கள் உலகமே போற்றும் பொக்கிஷங்கள். இந்திய ஜனங்களின் அரசியல், பொருளாதார சுதந்திரம் மனித வர்க்க முன்னேற்றப் பாதையில் ஒரு மைல் கல்" என்று ஐக்கிய நாடுகள் சபைப் பிரதிநிதி குறிப்பிட்டார்.

மற்றும் உலக நாடுகளின் சர்க்கார் தலைவர்களும் பிரமுகர்களும் வாழ்த்துச் செய்திகள் அனுப்பினார்கள்.

கிடைப்பதற்கரிய அந்தச் சுபதினத்திலே பிரஞ்சு சர்க்கார் சந்திர நாகூரின் நிர்வாகத்தை இந்தியாவிடம் ஒப்புவித்துத் தங்களுக்குப் பெருமையைத் தேடிக் கொண்டார்கள்.

அன்றைய தினத்திலிருந்து சந்திர நாகூரில் இந்திய தேசியக் கொடி பறப்பதுபோல், மற்றப் பிரஞ்சிந்தியப் பிரதேசங்களிலும் நமது தேசியக் கொடி பறக்கும் நன்னாள் அதிக தூரத்தில் இல்லை என்பதற்கு அதுவே நல்ல சகுனம் அல்லவா?

• • •

சுதந்திர சூரியோதயத்தைக் கொண்டாடிய அந்தச் சுதினத்திலே நமது மாபெரும் தலைவர்கள் தேச மக்களுக்கு ஆசி கூறி அன்புச் செய்தி விடுத்

தார்கள். எதிர்கால க்ஷேமத்தை உத்தேசித்து ஜனங்கள் செய்ய வேண்டிய கடமையைத் தெளிவாக எடுத்துக் கூறினார்கள்.

"நாம் நன்னம்பிக்கையுடன் இன்னும் அதிக முயற்சி செய்வோம். பரஸ்பரம் நம்பிக்கை வைப்போம். நமது மகத்தான தேசத்தின் எதிர்கால விதியிலும் தளரா நம்பிக்கை கொண்டு முன் செல்வோம்" என்று கவர்னர் ஜெனரல் ராஜாஜி கூறி, கட்சிப் பிணக்குகளினாலும் உணவுக் கஷ்டத்தினாலும் சோர்வுற்றிருக்கும் ஜனங்களுக்கு நம்பிக்கையும் உற்சாகமும் ஊட்டினார்.

இந்தியா இன்னும் சில மாதங்களில் குடியரசு இந்தியாவாக விளங்கப் போகிறது என்ற நற்செய்தியைப் பிரதம மந்திரி பண்டித ஜவாஹர்லால் நேரு வெளியிட்டார்.

"சுதந்திர இந்தியாவின் மூன்றாவது வருஷம் முடிவதற்குள் இந்தியக் குடியரசு ஜனனமாகப் போகிறது. அதன் ஜனன தினத்திலிருந்து நமது தேசத்தின் வாழ்க்கையில் ஒரு புது அத்தியாயம் ஆரம்பமாகும்.

"இந்தியா குடியரசாக விளங்க வேண்டும் என்பதற்காகவே நம் நாட்டில் பலரும் வாழ்க்கையை அர்ப்பணம் செய்து அரும் பெரும் தொண்டு புரிந்தார்கள்.

"இன்று பாரத அன்னை தன் புதல்வர்களிடமிருந்து கோருவது தளராத நம்பிக்கையும் சலியாத உழைப்புமேயன்றி வெறும் பேச்சு அல்ல.

"தேச நலனுக்காக உழைக்காமல் குற்றம் குறைகளை மாத்திரம் கிளறிக் கொண்டிருப்பதால் யாருக்கும் எவ்வித நன்மையும் ஏற்படாது.

"எனவே, தேசத்தின் தந்தையான மகாத்மா காந்தியின் உபதேசங்களை மனதில் வைத்து ஜனநாயகக் கொள்கைகளைக் கிரியாம்சையில் கொண்டு வர முற்படுவோம். சரித்திரப் பிரசித்தி பெற்ற இத் தினத்தில் காந்தி மகானையும் அவரது சீரிய உபதேசங்களையும் பயபக்தியுடன் நினைவு கூர்வோம். அந்த மகானின் அடிச்சுவடுகளைப் பின்பற்றுவோம்" என்று ஜவாஹர்லால்ஜி கூறினார்.

கடல் கடந்து வசிக்கும் இந்திய சகோதர சகோதரிகளுக்கு அன்பையும் ஆதரவையும் தெரிவித்து வாழ்த்துச் செய்தி அனுப்பினார்.

உடல் நலம் குன்றி பம்பாயில் ஓய்வு எடுத்துக் கொண்டு வரும் வீர சர்தார் பட்டேல், தமது சரீர பலம் குறைந்தாலும் மனோ பலம் அணுவளவும் குன்றவில்லை என்பதைத் தாம் அனுப்பியுள்ள செய்தியின் மூலம் உலகத்துக்குக் காட்டினார்.

"இந்தியா பிளக்கப்பட்ட பின் ஏற்பட்ட மலை போன்ற கஷ்ட நஷ்டங்களே சுதந்திர இந்தியாவின் அஸ்திவாரத்தை அசைக்க முடியவில்லையெனில், இனி அதை அசைக்கக் கூடிய சக்தி இந்த உலகத்திலே வேறு எதுவும் இல்லை" என்று சர்தார் வல்லபாய் பட்டேல் கூறி, இந்தியாவின் சக்தியில் எல்லோருக்கும் உறுதியான நம்பிக்கை ஏற்படும்படி செய்துள்ளார்.

• • •

சூரியனைக் கிரஹணம் பிடிப்பது போல் இந்தியாவின் சுதந்திரத்தை அன்னியர் ஆதிக்கமாகிற கிரஹணம் பிடித்திருந்தது.

ஆனால், அந்தக் கிரஹணம் அகன்று இரண்டு ஆண்டுகள் கடந்துவிட்டன.

அன்னியர் ஆதிக்கத்துடன் ஒப்பிடும்போது இப்போது இந்தியாவை எதிர்நோக்கி நிற்கும் பிரச்னைகள் அற்பமான விஷயங்களாகும். அவை தாற்காலிகமாகச் சூரியனை மறைக்கும் மேக மண்டலங்கள் போன்றவை.

பல நூறு ஆண்டுகளாக பாரத நாட்டைப் பரிதவிக்கும்படி செய்து வந்த அன்னியர் ஆதிக்கத்தை ஒழித்து, சுதந்திர சூரியனைக் காட்டிய நமது மாபெரும் தலைவர்களுக்கு, நீர்க்குமிழி போல் தோன்றி மறையும் மேக மண்டலங்களை அகற்றுவது பிரமாதமான காரியமல்ல.

மேக மண்டலங்கள் முற்றிலும் மறைந்து பாரத நாட்டில் சுதந்திர சூரியன் ஜகஜ்ஜோதியாகப் பிரகாசிக்கும் காலம் தூரத்தில் இல்லை என உறுதி கொள்வோம்.

நம்முடைய தலைவர்கள்மீது சளைமற்ற நம்பிக்கை வைப்போம்.

அவர்களுடைய பொன் மொழிகளைப் பக்தியுடன் பின்பற்றுவோம்.

கட்சிப் பிணக்குகளையும் துவேஷ மாற்சரியங்களையும் ஒழிப்போம்.


பெறுதற்கரிய சுதந்திரத்தை என்றென்றும் இழக்க மாட்டோம் என்று பிரதிக்ஞை செய்து கொள்வோம்.

சுதந்திர இந்தியாவின் சிற்பி காந்தி மகானுக்குத் தலை வணங்குவோம்.

இன்னல்கள் ஒழிந்து இந்தியா இன்புற்றிருக்க எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தனை செய்வோம்.

ஆஸ்தான கவிக்கு அரசாங்க மரியாதை





ஆகஸ்டு மாதம் 14-ந் தேதி ராஜாஜி மண்டபத்தில் ஆஸ்தான கவிஞருக்கு அரசாங்க உபசரிப்பு விழா நடைபெற்றது. கவர்னர் பவநகர் மகாராஜா மேடையில் நடுநாயகமாக வீற்றிருப்பதைக் காணலாம்.

●

ஆஸ்தான கவிஞர் 1. ஸ்ரீ வள்ளத்தோள். (மலையாளம்) 2. ஸ்ரீ கோவிந்தபாய் (கன்னடம்) 3. மகாமகோபாத்தியாய கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள் (சம்ஸ்கிருதம்) 4 ஸ்ரீ நாமக்கல் ராமலிங்கம் பிள்ளை (தமிழ்)



நமது பிரதமர்

பொறுத்தார் பூமி ஆள்வார் என்பது தமிழ்ப் பழமொழி. பொறுமையைக் கடைப்பிடித்துப் பூமியை ஆண்டவருக்கு உதாரணம் வேண்டும் என்றால் நமது பிரதமர் கனம் பி. எஸ். குமாரஸ்வாமி ராஜா அவர்களை உடனே சுட்டிக் காட்டலாம். ஆந்திர கேசரி ஸ்ரீ டி. பிரகாசம் அவர்கள் சென்னை மாகாணத்தில் அமைத்த முதலாவது மந்திரி சபையில் ஸ்ரீ பி. எஸ். குமாரஸ்வாமி ராஜா ஒரு மந்திரியாக விளங்கினார். ஸ்ரீ பிரகாசம் மந்திரி சபை கவிழ்ந்தது; ஓமந்தூர் மந்திரி சபை வந்தது. ஸ்ரீ ஓமந்தூர் ராமசாமி ரெட்டியாரின் சிறந்த நண்பர்களில் ஒருவர் ஸ்ரீ குமாரஸ்வாமி ராஜா என்பது பிரசித்தமான விஷயம். ஆகையால் ஓமந்தூர் மந்திரி சபையில் ஸ்ரீ குமாரஸ்வாமி ராஜாவின் பெயரைச் சேர்க்காமல் விட்டது பற்றி அரசியல்வாதிகள் பலர் அதிசயப் பட்டார்கள். ஸ்ரீ குமாரஸ்வாமி ராஜாவுக்கு அது அதிசயம் அளித்ததோ என்னமோ, தெரியாது. அதிசயம் அவர் மனதில் இருந்தாலும் வெளியில் காட்டிக் கொள்ளவில்லை. அவர் கோபமோ ஆத்திரமோ அடைந்ததாகவும் தெரியவில்லை. தம்மை விட்டுவிட்டது பற்றிக் குறைகூறவில்லை; புது மந்திரி சபையைக் கண்டனம் செய்யவில்லை. பொறுமையாகவும் இருந்தார்; மௌனமாகவும் இருந்து வந்தார். அந்த மௌனப் பொறுமையின் பயன் இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு தெரிந்தது. ஸ்ரீ ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் பதவியிலிருந்து விலக வேண்டும் என்று ஏற்பட்ட போது அவரே தம்முடைய ஸ்தானத்துக்கு ஸ்ரீ பி. எஸ். குமாரஸ்வாமி ராஜாவின் பெயரைப் பிரரேபித்தார். மற்றும் பலரும் ஒப்புக்கொண்டார்கள். எனவே, இரண்டு வருஷத்துக்கு முன்னால் மந்திரி சபையிலிருந்து விடப்பட்டவர் இந்த வருஷத்தில் பிரதம மந்திரி ஆனார்.

தமிழ்நாட்டில் உள்ள ஊர்களில் இராஜபாளையம் ஒரு பெயர் பெற்ற ஊர். அந்த ஊரில் பெரும்பாலோர் ஆந்திர தேசத்திலிருந்து நெடுங் காலத்துக்கு முன்பு வந்து குடியேறிய ராஜுக்கள். அவர்கள் வீட்டுக்குள்ளே தங்கள் பாஷையையும் பழைய வழக்க பழக்கங்களையும் கண்டிப்பாக அனுசரித்து வருகிறார்கள். வீட்டுக்கு வெளியில் சமூக வாழ்க்கையில் தமிழர்களோடு தமிழர்களாகப் பேதமின்றிக் கலந்து ஒன்றாகி விட்டவர்கள்.

இராஜபாளையம் தேச பக்தர்களுக்குப் பெயர் போனது; நாணயத்துக்குப் பெயர் போனது; தியாகத்துக்குப் பெயர் போனது; மெல்லிய கதர்த் துணிக்குப் பெயர் போனது; விவசாயத் திறமைக்குப் பெயர் போனது. கடைசியாக, ரோமமுள்ள கருகருப்பான வேட்டை நாய்களுக்கு மிகவும் பெயர் போனது.

தமிழ் நாட்டில் நடைபெற்றிருக்கும் மாகாண காங்கிரஸ் மகாநாடுகளில் இராஜ பாளையத்தில் நடந்த மகாநாட்டைப் போல் சிறப்பாக நடந்தது வேறில்லை யென்று சொல்லலாம்.

அத்தகைய இராஜ பாளையத்து ராஜாக்களுக்குள்ளே ஒரு தனிப்பெரும் ராஜாவாக விளங்கி வருகிறவர் நமது பிரதமர். இராஜபாளையத்தில் நடைபெறும் எந்தப் பொதுக்காரியமும் ஸ்ரீ குமாரஸ்வாமி ராஜாவை முன்னிட்டுக் கொண்டுதான் நடைபெறுவது வழக்கம். இப்போது அத்தகைய பெருமை சென்னை மாகாணத்துக்கே கிடைத்திருக்கிறது. தேசிய வைபவங்கள், சமூக மகாநாடுகள், கலைக் கொண்டாட்டங்கள், இலக்கிய விழாக்கள்,— எல்லாவற்றுக்கும் பிரதமர் குமாரஸ்வாமி ராஜாவை விரும்பி அழைக்கிறார்கள். அவரும் தடை சொல்லாமல் மனமுவந்து ஒப்புக்கொள்கிறார்.

புதுத் தமிழ் இலக்கியத்தில் கனம் குமாரஸ்வாமி ராஜா விசேஷ சிரத்தை கொண்டவர். பாரதியார் பாடல்களில் அளவில்லாத ஆர்வம் உடையவர். எட்டயபுரம் பாரதி மண்டபத் திருப்பணியில் கனம் குமாரஸ்வாமி ராஜாவின் கைங்கர்யமும் சேர்ந்திருக்கிறது. பாரதியார் சங்கத்திலும், பாரதி சங்கத்து நிர்வாக சபையிலும் ஸ்ரீ குமாரசாமி ராஜா பிரதமர் ஆவதற்கு முன்பே அங்கத்தினர் ஆனவர். இந்த ஆண்டு எட்டயபுரத்தில் ஆஸ்தான கவிஞர் நாமக்கல் ராமலிங்கம் பிள்ளையின் தலைமையில் நடைபெறும் பாரதியார் விழாவைக் கனம் பிரதமர் ஆரம்பித்து வைப்பது மிக்க மகிழ்ச்சி தருவதாகும்.

கனம் ராஜாவின் ஆட்சி சென்னை மாகாணத்தில் நிலைத்திருக்க வேண்டுமென்றும் அவருடைய ஆட்சியில் இந்த மாகாணம் பல துறைகளிலும் முன்னேற வேண்டுமென்றும் நாம் விரும்புகிறோம்.

★ ★ ★ கவர்னர் ஜெனரல் ராஜாஜி "ஆரம்பப் பாடசாலைகளில் பிள்ளைகளுக்கு வாரத்தில் மூன்று நாள் பள்ளிக்கூடம் போதும்" என்ற யோசனையை வெளியிட்டார். தேசத்தில் கல்வித் துறையில் ஈடுபட்டிருக்கும் பல பிரமுகர்கள் மேற்படி யோசனையை ஆதரித்திருக்கிறார்கள்; சிலர் ஆட்சேபணையும் சொல்லியிருக்கிறார்கள். தென்னிந்திய ஆசிரியர் சங்கத்தின் தலைவரும் ஸெண்ட் கேப்ரியல் ஹைஸ்கூலின் தலைமை ஆசிரியருமான ஸ்ரீ எஸ். நடராஜன் ராஜாஜியின் யோசனையைக் குறித்து எழுதியுள்ள பின்வரும் கட்டுரையை மிக்க மகிழ்ச்சியுடன் வெளியிடுகிறோம். ★ ★ ★

ராஜாஜியின் யோசனை

[எஸ். நடராஜன் பி. ஏ., எல். டி.]

நமது மேன்மை தங்கிய கவர்னர்-ஜெனரல் சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் அவர்கள் சொல்லிய முறையைக் கையாண்டால்தான் சீக்கிரத்தில் நம் நாட்டிலுள்ள பள்ளிக்கூடம் போகும் வயதுள்ள குழந்தைகளையெல்லாம் பள்ளிக்கூடங்களில் சேர்த்துப் பள்ளிப் படிப்பு அளிக்க முடியும் என்று தோன்றுகிறது. நமது மாகாணத்தில் சுமார் 70 லக்ஷம் பாலர்கள் இருக்கிறார்கள். இவர்களில் 37 லக்ஷம் பாலர்கள்தான் தற்சமயம் பள்ளிக்கூடங்களில் படிக்கிறார்கள். மற்றுமுள்ள பாலர்கள் எல்லோரும் பள்ளிக்கூடத்தில் சேர்ந்து படிக்க வேண்டும் என்று கட்டாயப் படுத்துவதானால், இன்னும் 30,000 பள்ளிக்கூடங்களும் ஒரு லக்ஷம் ஆசிரியர்களும் தேவைப்படும். இவ்வளவு பள்ளிக்கூடங்களை ஸ்தாபிப்பதோ, இவ்வளவு ஆசிரியர்கள் தயாரிப்பதோ சமீப காலத்தில் சாத்தியப்படக் கூடிய காரியம் அல்ல. பல திட்டங்கள் வகுத்து வந்த போதிலும் ஒரு திட்டத்தையும் அமுலுக்குச் செவ்வனே கொண்டு வராததற்கு முக்கிய காரணம் அதிக பள்ளிக்கூடங்கள் ஸ்தாபிக்க இயலாததும், போதுமான ஆசிரியர்கள் கிடைக்காததுமே. நமது ஆசிரியர் பயிற்சிப் பள்ளிக்கூடங்களில் வருஷந்தோறும் பயிற்சி யடைந்து வரும் ஆசிரியர்களின் எண்ணிக்கை, ஒவ்வொரு வருஷத்திலும் ரிடையர் ஆகும் ஆசிரியர்களின் எண்ணிக்கைக்குக் குறைவாகவே இருந்து வருகிறது. பள்ளிக்கூடங்கள் ஸ்தாபிக்கப் பணம் இல்லை; ஆசிரியர்கள் இல்லை. எனினும் சுதந்திரம் அடைந்த இந்தியாவில் எழுத்தறியாமையை ஒழித்தல் அவசியம். நமது பாலர்களைச் சரியான ஜனநாயகப் பிரஜைகளாக்க வேண்டியது அவசியம். ஆகவே, இம் மாகாணத்திலுள்ள எல்லா பாலர்களையும் பள்ளியில் சேர்த்து, நல்ல கல்வி பயிற்றுவிப்பதை உடனே செய்யவேண்டிய தொண்டாக அரசாங்கத்தாரும் தலைவர்களும் கருதி அதற்கான திட்டம் வகுக்கவேண்டும்.

இது பிரம்மாண்டமான பிரச்னை என்று திகைத்து வாளாவிருப்பது நாட்டுக்குப் பெரும் தீமையை விளைவிக்கும். இச் சந்தர்ப்பத்தில் நமது தலைவர் ராஜாஜி காட்டியுள்ளார் ஒரு வழி. அதை ஒருவாறு நாம் அனுசரிக்கலாம். வாரத்தில் மூன்று நாட்கள் ஒரு பகுதி மாணவர்களுக்கும், இன்னொரு மூன்று நாட்கள் வேறொரு பகுதி மாணவர்களுக்கும் கல்வி கற்பிக்க ஏற்பாடு செய்தால், இப்பொழுதுள்ள பள்ளிக்கூடங்களைக் கொண்டு அதிக மாணவர்களுக்குக் கல்விப் பயனை அளிக்க முடியும். தவிர, கிராம மக்கள் தங்கள் பிள்ளைகளைத் தங்களுடன் வேலைக்கு அழைத்துச் செல்வதினால் பலர் மூன்றாம் வகுப்புப் படிப்புடன் இப்பொழுது நிறுத்தப்பட்டு விடுகிறார்கள். இந்தப் படிப்பு அம் மாணவர்களுக்கு ஒருவித நன்மையும் அளிப்பதில்லை. அது மட்டுமல்லாமல் அரசாங்கத்திற்கும் வீண் செலவையே உண்டாக்குகிறது. ஆனால், ராஜாஜி கூறிய திட்டத்தின்படி வாரத்தில் மூன்று நாட்கள் பள்ளியில் படித்து, மற்ற மூன்று நாட்கள் பெற்றோர்களின் தொழிலில் அவர்களுக்கு உதவியாயிருந்து அந்தத் தொழிலில் பழகித் தேர்ச்சி பெற்றால் மாணவர்கள் இருவிதத்தில் பயன் அடைவார்கள். பெற்றோர்களும் ஒருவாறு திருப்தி அடைவார்கள். நீடித்துப் பிள்ளைகளைப் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பி வருவார்கள். நாட்டின் கல்வியும் முன்னேறி, பாலர்கள் நாட்டிற்குரிய பொறுப்புள்ள பிரஜைகளாகத் தேர்ச்சி அடைவார்கள்.

ஆனால், இதில் ஒரு விஷயம் கவனிக்க வேண்டியது அவசியம். இப்பொழுது ஆரம்பப் பள்ளிக்கூடங்களில் படிக்கும் பாலர்களில் சுமார் 14 லக்ஷம் மாணவர்கள் கட்டாயக் கல்வி அமுலிலுள்ள நகரங்களில் இருக்கிறார்கள். நகரங்களில் அநேக

மாக 100-க்கு 80 பாலர்களாவது இப்போது ஆரம்பப் பள்ளிக்கூடங்களில் படித்துக் கொண்டிருப்பார்கள். தவிர, நகரங்களில் உள்ள பெற்றோர்கள் தொழிற்சாலைகளிலாவது, ஆபீஸ்களிலாவது வேலை பார்த்து வருகிறவர்கள். அவர்கள் தங்கள் குழந்தைகளுக்கு வாரம் மூன்று நாள் வேலையோ தொழிற் பயிற்சியோ அளிக்க இயலாத நிலைமையிலுள்ளவர்கள். எனவே நகரங்களில் உள்ள பள்ளிக்கூடங்கள் இப்பொழுது போலத்தான் நடைபெற வேண்டும். புதிய முறை நகரங்களில் சரிப்படாது.

நமது கிராமங்களிலோ சுமார் 54 லக்ஷம் எண்ணிக்கையுள்ள பாலர்கள் இருக்கிறார்கள். இவர்களில் 22 லக்ஷம் பேர்தான் இப்பொழுது பள்ளியில் படித்து வருகிறார்கள். இவர்களுக்காக இன்று 22,000 பள்ளிக் கூடங்கள்தான் இருந்து வருகின்றன. அநேக கிராமங்களில் பள்ளிக்கூடங்களே இல்லை. எல்லா பாலர்களும் பள்ளிக் கூடங்களில் சேராததற்கு முக்கிய காரணம் பள்ளிக்கூட வசதிகள் இல்லாமைதான். நமது கிராமங்களில் சாலைகள் எந்த நிலையிலிருக்கின்றன என்பது யாவரும் நன்கு அறிந்ததே. தவிர, கிராமாந்திரங்களில் போக்குவரத்துச் சாதனங்கள் மிகக் குறைவு. தவிரவும் இலவசக் கல்வித் திட்டம் எல்லா இடங்களிலும் இன்னும் அமுலுக்கு வரவில்லை. பிள்ளைகளுக்கு இடைவேளை போஜனம் அளிப்பதுமில்லை. எனவே, இப் புதிய முறையைக் கையாளுவதென்றால், கிராமங்களிலுள்ள பாலர்களைப் பள்ளிக்கூடங்களுக்கு அழைத்துப் போக வசதிகள் செய்ய வேண்டும். இப்பொழுதுள்ள பள்ளிக் கூடங்களில் போதுமான இட வசதி செய்யவேண்டும். இடைவேளையில் பிள்ளைகளுக்கு நல்ல சத்துள்ள உணவு அளிக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

இவ்வளவும் செய்த பிறகு, மாணவர்கள் இக் கல்வியின் மூலம் பயனடைவதற்கு, நல்ல சீரிய நோக்க முள்ள தேர்ச்சி பெற்ற ஆசிரியர்கள் வேண்டும். மூன்று நாள் பள்ளிப்படிப்புக்கும் மூன்று நாள் பெற்றோர் தொழிற் பயிற்சிக்கும் சரியான தொடர்பு காட்டக்கூடிய நல்ல திறமையுடைய ஆசிரியர்கள் வேண்டும். இப்பொழுதுள்ள ஆசிரியர்களின் எண்ணிக்கை போதும் என்று எண்ணுவது தவறாகும். அதிகப்படியான ஆசிரியர்கள் தேவையாகத்தான் இருக்கும். ஆசிரியர்களுக்கும் நல்ல ஊதியம் கொடுக்கவேண்டும். அவர்களுடைய சம்பளத்தை அவர்கள் செய்யும் தொண்டின் முக்கியத்திற்கு ஏற்றவாறு உயர்த்தி அமைக்க வேண்டும். விடுமுறை, ஓய்வு போன்ற வசதிகள் ஆசிரியர்களுக்குப் போதிய அளவு இருக்குமாறு உத்தியோக விதிகள் திருத்தி அமைக்கப்பட வேண்டும்.

கல்வி பயில்வது என்பது பாடங் கேட்பது மாத்திரம் அல்ல. மற்ற மாணுக்கர்களுடன் கூடிப் பழகுவது கல்வியின் ஒரு முக்கிய அம்சம். ஆகையால் பள்ளியில் இருக்கும் காலத்தில் தினம் மாணவர்கள் ஐந்து மணி நேரமாவது கூடிப் பழக வேண்டும். அது போலவே, எந்தத் தொழிற் பயிற்சியிலும் ஒரு தினம் பூராவும் அதில் ஈடுபடுவதினால் பல விஷயங்கள் தெரிந்துகொள்ள முடியும்.



அத்தியாயம் 36

ஜனவரி 31உ

சீதாவின் துர்ப் பாக்கியமானது அவளுடைய கடைசி மனோரதம் நிறைவேறுவதற்கும் குறுக்கிடவே செய்தது. அவர்கள் இரண்டு மூன்று நாளைக்கெல்லாம் பிரயாண வசதி செய்துகொண்டு டில்லிக்குப் புறப்படுவது என்று தீர்மானித்திருந்தார்கள். ஆனால் அதற்குள்ளே — அதாவது ஜனவரிமீ 30உ மாலையில் பேரிடி போன்ற செய்தி ரேடியோவின் மூலம் உலக மெல்லாம் பரவியது போலப் பானிபத் பட்டணத்துக்கும் வந்துவிட்டது. முதலில் யாருக்குமே அந்தச் செய்தியில் நம்பிக்கை பிறக்கவில்லை. உண்மைதானா, உண்மைதானா என்று கேட்டுக் கொண்டேயிருந்தார்கள். "மகாத்மாவையாவது, மனிதனாகப் பிறந்த ஒருவன் சுடவாவது?" என்றார்கள். ரேடியோவில் நேரில் கேட்டவர்கள்கூட அதில் ஏதோ ஒரு பெரிய சூழ்ச்சி இருக்கலாம் என்று சந்தேகித்தார்கள். பாகிஸ்தான் ரேடியோ டில்லி ரேடியோவைப் போல் பாசாங்கு செய்து ஏமாற்றி அந்தப் பயங்கரமான செய்தியை விஷமத்துக்காகப் பரப்பியிருக்கிறது என்று எண்ணினார்கள். இன்னும் சிலர் டில்லி நகரில் உள்ள முஸ்லிம்கள் டில்லி ரேடியோவைக் கைப்பற்றி அவ்விதம் பொய்ச் செய்தியை வெளியிடுவதாகச் சந்தேகித்தார்கள். வேறு சிலர், "அப்படியே மகாத்மாவை ஒரு பாதகன் சுட்டிருந்தாலும் அவ்வளவு சீக்கிரத்தில் அந்த மகானுடைய உயிர் பிரிந்திருக்குமா? ஏதோ அவசரப்பட்டுச் சொல்லி விட்டார்கள். 'பிழைத்து விட்டார்' என்ற சந்தோஷச் செய்தி சீக்கிரத்தில் வந்து விடும்!" என்று நினைத்தார்கள். இரவு 8-30-க்கு எல்லாச் சந்தேகமும் தீர்ந்துவிட்டது. பண்டித ஜவாஹர்லால்ஜியும் சர்தார் படேலும் அவர்களுடைய சொந்தக் குரலில் தெள்ளத் தெளியப் பேசிய பிறகு, தொண்டை அடைக்க விம்மிக் கொண்டே மகாத்மா கொல்லப்பட்ட செய்தியைச் சொன்ன பிறகு, வேறு சந்தேகம் என்ன இருக்க முடியும்?

அகதி முகாமில் அந்தக் கொடூரமான செய்தியைக் கேட்ட சூரியா தன்னுடைய சொந்த ஜாகைக்கு ஓடினான். துரைசாமி ஐயர் அச்சமயம் சீதாவை மூர்ச்சை தெளிவிக்க முயன்று கொண்டிருந்தார். சுமார் ஐந்தரை மணிக்

குச் சீதா 'வில்' என்று கத்தி விட்டு உணர்வை இழந்து விழுந்ததாகத் துரைசாமி ஐயர் சொன்னார். பிறகு சூரியா ரேடியோ மூலம் வந்த கொடிய செய்தியைத் தெரிவித்தான். அதனால் அவர்கள் இருவருக்கும் ஏற்பட்ட மனவேதனை ஒருபுற மிருக்க, சீதா வுக்கு அந்தச் செய்தியைத் தெரிவிப் பதா வேண்டாமா என்றும் யோசிக்க வேண்டியதாயிற்று. தெரிவித்தால் அதனால் அவளுடைய இருதயம் பாதிக் கப்படலாம். ஆனால் தெரிவிக்காமலே இருந்துவிட முடியுமா? வருங்காலத் தில் என்றென்றைக்கும் அவளுடைய மனம் வேதனைப்படாதா? அதைக் காட்டிலும் அவளை அழைத்துப் போய் மகாத்மாவின் புனிதத் திரு மேனியையாவது தரிசனம் செய்து வைப்பது நல்லதல்லவா?

கொஞ்ச நேரத்துக்கெல்லாம் சீதா வுக்கு உணர்வு வந்தது. வழக்கத்தைக் காட்டிலும் அவளுடைய ஆயாசமும் பிரமிப்பும் அதிகமா யிருந்தன. தான் இனி அதிக காலம் பிழைத்திருக்க முடியாது என்றும், ஆகையால் காந்திஜியைத் தரிசிக்க உடனே டில்லி போகவேண்டும் என்றும் அவள் சமிக்ஞையினால் வற்புறுத்திச் சொன் னாள். இதன் பேரில் மற்ற இருவரும் ஒரு முடிவுக்கு வந்தார்கள். காலையில் சூரியா அவளை டில்லிக்கு அழைத்துக் கொண்டு போக வேண்டியதுதான். சமயோசிதம் போல் காந்திஜியின் மரணத்தைப் பற்றி அவன் அவளுக் குத் தெரிவிக்க வேண்டியது. அல்லது அவளே பார்த்துத் தெரிந்து கொள் ளும்படி விட்டுவிட வேண்டியது.

அந்த சந்தர்ப்பத்தில் டில்லிப் பிர யாணம் போய் வருவதற்கு வேண்டிய தெம்பு துரைசாமி ஐயருக்கு இல்லை யாதலால் அவர் வரவில்லை என்று சொல்லி விட்டார். சீதாவைப் பத்திர மாக அழைத்துக் கொண்டுபோய் ஜாக்கிரதையாகத் திருப்பி வரும்படி ஆயிரந் தடவை சூரியாவுக்கு எச்ச ரிக்கை செய்து அனுப்பினார்.

* * *

சீதாவின் வாழ்க்கையில் மறுபடி யும் ஒரு தடவை கனவில் நடப்பவை போன்ற சம்பவங்கள் நடந்தன. பானி பத்திலிருந்து டில்லிக்குப் போகும் சாலையில் அன்று போன ஜனக் கூட் டத்தைப் பார்த்ததும் அவளுக்கு ஏதேதோ சந்தேகங்கள் உதித்தன. சூரியாவோ அவளுடைய கேள்வி ஒன் றுக்கும் பதில் சொல்லாமல் தலையை அசைத்துக் கொண்டு வந்தான்.

கடைசியாக, அவர்கள் டில்லியை அடைந்தார்கள். பழைய டில்லியி லிருந்து ஒரு பெரிய ஜன சமுத்திரம் புது டில்லியை நோக்கிப் போய்க் கொண்டிருப்பதைக் கண்டார்கள். கனவில் நடப்பவளைப் போல் நடந்து சீதாவும் சென்றாள். கூட்டத்தில் தவறிப் போய் விடாமல் சூரியா கண்ணுங் கருத்துமாக அவளைத் தொடர்ந்து போய்க்கொண்டிருந்தான். அவனுடைய நெஞ்சை ஒரு பெரிய பாரம் அமுக்கிக் கொண்டிருந்தது. சீதாவுக்குச் செய்தியைச் சொல்லும் தைரியம் இன்னமும் அவனுக்கு வர வில்லை. இனிமேல் சொல்லவேண்டிய அவசியமும் கிடையாது. சிறிது நேரத்துக்கெல்லாம் சீதாவே காந்தி மகாத்மாவின் திருமேனியைப் பார்த் துத் தெரிந்து கொள்வாள். ஆனால் அவ்விதம் பார்த்த உடனே அவளுக்கு ஏதாவது நேராமல் இருக்க வேண் டுமே? இத்தனை கூட்டத்துக்கு மத்தி யில் அவள் உணர்விழந்து விழாமல் இருக்க வேண்டுமே?......

சூரியாவும் சீதாவும் போய்ச் சேர்ந்த சமயம், மகாத்மா திருமேனியின் இறுதி ஊர்வலம் ஆரம்பமாகும் சமயமா யிருந்தது. எப்படியோ படாத பாடு பட்டு அந்த ஜன சமுத் திரத்துக்குள் இடித்துப் புடைத்துக் கொண்டு அவர்கள் இருவரும் காந்தி மகாத்மாவின் திருமுகத்தைப் பார்க் கக்கூடிய சமீபத்துக்கு வந்து சேர்ந் தார்கள். ஏதோ ஒரு மகத்தான முக்கியமான சம்பவத்தைத் தெரிந்து கொள்ளப் போகிறோம் என்ற பரபரப் போடு சீதாவும் கூட்டத்துக்குள் புகுந்து விரைந்து சென்றாள். புஷ்பங் களைக் கொட்டி அலங்கரித்திருந்த மோட்டார் ரதத்தில் மகாத்மாவின் திருமேனி கிடந்த நிலையையும் அவ ருடைய திருமுகத்தின் தோற்றத்தை யும் பக்கத்திலே மாபெரும் தலை வர்கள் உட்கார்ந்திருந்த காட்சியை யும் சுற்றிலும் நின்ற மக்கள் கூட்டத் தின் சோக முகங்களையும் கண்ணீரை

யும் கம்பலையையும் பார்த்ததும் சீதாவுக்கு விஷயம் விளங்கி விட்டது.

லட்சக்கணக்கான ஜனங்கள் திரண்டிருந்த அந்தக் கூட்டத்தில் காது செவிடுபடும்படியான ஓலம் எழுந்து கொண்டிருந்தது. சீதாவின் காதில் இடைவிடாமல் கேட்டுக் கொண்டிருந்த அலை ஓசையானது ஜன சமுத்திரத்தின் இரைச்சலோடு ஒன்றாகக் கலந்தது. காந்திஜியின் நிலை இன்னதென்று அறிந்ததும் அவளுடைய நெஞ்சு விம்மி எழுந்து தொண்டையை அடைத்தது. பின் கழுத்துக்கு மேலே இரு செவிகளுக்கும் மத்தியில் ஏதோ ஒரு நரம்பு வீணையின் மந்திரத் தந்தி அறுந்தாற் போல் படீரென்று வெடித்து அறுந்தது. அந்த ஓசை மேற்கூறிய இரு வகைப்பட்ட அலை ஓசைகளையும் பிளந்துகொண்டு சென்று அவளுடைய மண்டைக்குள்ளேயே பாய்ந்தது.

சிறிது நேரத்துக்கெல்லாம் பிரமிப்பு நீங்கி மனம் தெளிவுற்றது. சிந்தனா சக்தி திரும்ப வந்தது. ஆகா! இந்த மகா புருஷரைத் தரிசிக்கும் சந்தர்ப்பம் தன்னுடைய வாழ்க்கையில் எத்தனையோ தடவை நெருங்கி யிருந்தும் பல காரணங்களினால் அப்போதெல்லாம் தவறிப்போய் விட்டது. அவருடைய உயிர் பிரிந்த பிறகு நடக்கும் இறுதி ஊர்வலத்தின் போதுதானா காந்திஜியைத் தரிசிக்கும் பாக்கியம் கிடைக்கவேண்டும்? எத்தனை தடவை மகாத்மாவின் ஆசிரமத்துக்கே போய் விடவேண்டும் என்றும் அவருடைய தொண்டுக்கே தன் வாழ்க்கையை அர்ப்பணம் செய்துவிட வேண்டும் என்றும் எண்ணியிருப்பாள்? தன் உடம்பில் அணிந்துள்ள ஆபரணங்களை யெல்லாம் அவரிடம் கழற்றிக் கொடுத்துவிட வேண்டும் என்று எவ்வளவு முறை ஆசைப்பட்டிருப்பாள்? அந்த ஆசை யெல்லாம் இனிமேல் நிறைவேறப் போவதில்லை. சீதா! நீ இந்த உலகத்தில் எதற்காகப் பிறந்தாயடி? உன்னுடைய உள்ளத்தின் ஆசை ஒவ்வொன்றும் இப்படி அவலமாகப் போவதற்குத்தானா பிறந்தாய்? உற்றார் உறவினருக்குக் கஷ்டம் கொடுப்பதற்காகவேயா பிறந்தாய்? இந்த மகாத்மாவிடம் பாவியாகிய நீ பக்தி வைத்திருந்தாயே? அது காரணமாகவே இவருடைய முடிவு இப்படி ஆயிற்றோ? நூற்றிருபத்தைந்து வயது வாழ்வேன் என்று சொல்லிக் கொண்டிருந்தாரே? அவரை உயிரோடு நீ தரிசிக்கக் கூடாது என்பதற்காகவே போய்விட்டாரோ?......

இப்படியெல்லாம் எண்ணமிட்டுக் கொண்டே சீதா ஊர்வலத்தோடு போய்க்கொண்டிருந்தாள். சில சமயம் ஜனக் கூட்டத்தின் நெருக்கமும் வேகமும் அவளை அந்தப் புஷ்ப ரதத்துக்கு வெகு தூரத்துக்கு அப்பால் கொண்டு வந்து தள்ளிவிடும். மறுபடியும் அவள் முண்டியடித்துக் கொண்டு புஷ்ப ரதம் போகும் இடத்தை நோக்கி நெருங்கிச் செல்வாள். காந்திஜியின் திருமேனியை, அவருடைய திருக் கரத்தை அல்லது பாத கமலத்தைத் தொட்டுக் கண்ணில் ஒத்திக்கொள்ள வேண்டும் என்ற ஆசை அவள் மனதில் அடக்க முடியாமல் எழுந்தது. இது காரணமாகவே அவள் புஷ்பரதத்தை நெருங்குவதற்கு அவ்வளவு பெருமுயற்சி செய்தாள். அது சாத்தியமாகவே இல்லை.

இதற்கிடையில் சூரியா அவளைப் பிரிந்து விடும்படி நேர்ந்தது. காந்தி மகானைப் பார்த்த பிறகு சூரியாவைப் பற்றி அவள் ஒரு கணமும் நினைக்கவே யில்லை. சூரியாவோ அவளைப் பிரிந்ததினால் ஏற்பட்ட பீதியுடனும் எப்படியாவது அவளைத் திரும்பக் கண்டு பிடிக்க வேண்டுமென்ற ஆர்வத்துடனும் கூட்டத்தில் அங்கு மிங்கும் அடித்துப் பிடித்துக்கொண்டு அலைந்து திரிந்துகொண்டிருந்தான்.

கடைசியாக, பிற்பகல் சுமார் நாலு மணிக்கு யமுனை நதிக்கரைக்கு வந்து ஊர்வலம் முடிவடைந்தது. சிதையும் அடுக்கப்பட்டது. இறுதிக் கிரியைகள் நடைபெற்றன. அப்போது கூட்டத்தின் வெளி வரம்புக்குச் சீதா வந்திருந்தாள். அவளால் எவ்வளவோ முயன்றும் கூட்டத்தைப் பிளந்து கொண்டு உள்ளே போக முடியவில்லை.

சிதையில் நெருப்பு வைத்தாகி விட்டது! செந்தழலின் கொழுந்து அதோ கிளம்பி வானை எட்டப் பார்த்தது. ஏழு கடல்களும் கொந்தளித்தாற் போன்ற ஒரு பெரும் ஓலக் குரல்

அப்பெருங் கூட்டத்தில் எழுந்தது. அதற்குமேல் சீதாவினால் அங்கே நிற்க முடியவில்லை. எல்லாம் முடிந்து விட்டது; தன்னுடைய வாழ்க்கை முடிந்து விட்டது; உலகமே முடிந்து விட்டது. தன்னுடைய ஆசைகள், மனோரதங்கள் எல்லாம் எரிந்து பொசுங்கி பஸ்மீகரமாகிப் பிடிசாம்பராய் மாறி விட்டன. இனி அங்கே நின்று கொண்டிருப்பதில் என்ன பிரயோஜனம்?

•   •   •

சீதா திரும்பிச் சென்றாள். எங்கே செல்வது என்று தெரியாமல் கால் போன வழியே அவளும் போய்க் கொண்டிருந்தாள். அப்போதும் சூரியாவின் ஞாபகம் அவளுக்கு வரவில்லை. வேறு எந்த ஞாபகமும் அவளுக்கு வரவில்லை. உலகத்துக்கு ஒளி தந்த ஜோதி மறைந்து விட்டது. இனி என்றென்றைக்கும் இந்த உலகத்தில் காரிருள் ஆழ்ந்திருக்கும் என்ற ஒரே எண்ணம் அவள் மனதில் குடிகொண்டிருந்தது. வாழ்க்கையில் இத்தனை துன்பங்களை அநுபவித்த பிறகும் யாரிடம் அடைக்கலம் புகுந்து யாருக்குத் தொண்டு செய்வதன் மூலம் தன்னுடைய வாழ்க்கையைப் பயனுள்ளதாகச் செய்யலாம் என்று இதய அந்தரங்கத்தில் அவள் நம்பிக் கொண்டிருந்தாளோ, அந்த மகான் போய் விட்டார் என்ற நினைவு ஒன்றே மேலோங்கி யிருந்தது. இனி மேல் அவள் எங்கே போனால் என்ன? என்ன செய்தால் என்ன? வருகிற யமன் வந்தே தீருவான்! வரட்டும்! அதைப்பற்றி என்ன கவலை? யாரைப் பற்றித் தான் கவலைப்பட வேண்டும்?

குழந்தை வஸந்தி! ஆம், அவளைப் பற்றி என்ன? அவள் உயிரோடிருக்கிறாளா? இருந்தால் அவளை யார் காப்பாற்றுவார்கள்? ஏன்? கடவுள் காப்பாற்றுகிறார். கடவுள்! கடவுள் என்று ஒருவர் இருந்தால் உலகத்தில் இத்தனை கொடுமைகளையும் துன்பங்களையும் ஏன் பார்த்துக் கொண்டிருக்கிறார்? பார்த்துக் கொண்டிருப்பவர் கடவுள் ஆவாரா? அவரைக் கருணைக் கடல் என்று சொல்ல முடியுமா?— ஆனால் காந்திஜி அத்தகைய கருணைக் கடலான கடவுளைப் பற்றி ஓயாது சொல்லிக் கொண்டிருந்தது ஏன்? அந்த மகானுடைய நம்பிக்கைக்கு ஆதாரம் இல்லாமலா இருக்கும்? இப்படி எண்ணிக் கொண்டே நடந்து, நடந்து, நடந்து, சீதா போய்க் கொண்டிருந்தாள். எங்கே போகிறோம் என்று தெரியாமல் நடந்து போய்க் கொண்டிருந்தாள். கடைசியாக ஓரிடத்துக்கு வந்ததும் கால் ரொம்ப வலிக்கிறதென்று தெரிந்தது. உடம்பு தள்ளாடிற்று. காலையிலிருந்து உணவு இல்லையல்லவா? ஒரு பங்களாவின் வெளி மதில் சுவரைப் பிடித்துக் கொண்டு நின்றாள். வீட்டுக்குள்ளேயிருந்து கீதம் ஒன்று கேட்டது. ரேடியோவில் யாரோ பாடும் கீதம்! மனதை உருக்கிக் கண்ணீர் வருவிக்கும் கீதம்! உயிரை நெகிழச் செய்யும் கீதம்!

"ஹரி! தும் ஹரோ-ஜனகீ பீரு!"

"பகவானே! மக்களின் துன்பத்தைப் போக்குவாயாக!"

ஆகா! இது என்ன? நமக்குக் காது கேட்கிறதே! பாட்டுக் கேட்க முடிகிறதே! அமுத வெள்ளத்தைப் போல் காதில் பாய்கிறதே! இத்தனை நாள் கேட்ட அலை ஓசை எங்கே போயிற்று! அந்த இடை விடாத பயங்கரச் சத்தம் எப்படி மறைந்தது?

காந்தி அடிகளே! கருணாநிதியே! தங்களுடைய மரணத்திலே எனக்கு வாழ்வு அளித்தீர்களோ!

பாட்டு மேலும் மேலும் கேட்டது.

"ஹரி! மக்களின் துன்பத்தை நீ போக்குவாயாக!

"நீ முன்னம் துரோபதியின் ஆடையை வளர்த்து அவள் மானத்தைக் காக்கவில்லையா?

"பாலன் பிரஹ்லாதனுக்குக் கருணை புரிந்து காப்பாற்றவில்லையா?

"கிழவனாகிய கஜ ராஜனுடைய மரண பயத்தைப் போக்கி அருள் புரியவில்லையா?

"துன்பம் எங்கெங்கே இருக்கிறதோ அங்கெல்லாம் எழுந்தருளியிருப்பவன் அல்லவா நீ?

"ஹரி! மக்களின் துன்பத்தைப் போக்குவாயாக!"

பாட்டைக் கேட்டுக் கொண்டு சீதா மெய்மறந்து நின்றாள். பாட்டு நின்றது. நாலா பக்கமும் மோட்டார் ஹாரன்கள் அலறும் ஓசை கேட்டது.

மற்றும் பல சத்தங்கள் கேட்டன. சுற்று முற்றும் பார்த்தாள். நன்றாக இருட்டிவிட்டது. பனி கொட்டிக் கொண்டிருந்தது. பனி மூடிய மரங்கள் சோகமே உருவாக காட்சியளித்தன. ஜனங்கள் காந்திஜி காலமான சம்பவத்தைக் குறித்துப் பற்பல பாஷைகளில் பேசிக்கொண்டு சாலையோடு போய்க் கொண்டிருந்தார்கள்.

சுற்று முற்றும் சீதா பார்த்தபோது தான் பிடித்துக் கொண்டு நின்ற மதிள் சுவரையும் கவனிக்க நேர்ந்தது. ஆகா! இது என்ன! இது யாருடைய வீடு! நம்முடைய வீடு போலிருக்கிறதே! நாம் பல வருஷ காலம் நமக்குச் சொந்தம் என்று எண்ணி வாழ்ந்த வீடுதான் இது! இந்த வீட்டில் இப்போது யார் இருப்பார்கள்? ஏன், அவர்தான் இருக்க வேண்டும். அவர் தான் ரேடியோக் கேட்கிறார்போலிருக்கிறது. கடவுளே நம்மை இந்த இடத்தில் கொண்டு வந்து விட்டிருக்கிறார். உள்ளே போய் ஏன் அவரைப் பார்க்கக் கூடாது? "போனதெல்லாம் போகட்டும்; இனிப் புதிய வாழ்வு தொடங்குவோம் நாம்!" என்று ஏன் சொல்லக் கூடாது? இதையெல்லாம் அவரிடம் என்னால் சொல்ல முடியுமா? காது கேட்கச் செய்த பகவான் பேசும் சக்தியையும் கொடுத்துத்தான் இருப்பார்!—சீதாவின் நாக்கு முன்னெல்லாம் போல் நன்றாகப் புரண்டது போலத் தோன்றியது. நன்றாகப் பேச முடியும் என்று தோன்றியது! மதிள் சுவரின் வாசல் திறந்துதான் இருந்தது. சீதா உள்ளம் நடுங்க, கால் தள்ளாட அந்த பங்களாத் தோட்டத்துக்குள்ளே பிரவேசித்தாள்.

அத்தியாயம் 37

ராகவனும் தாரிணியும்

தோட்டத்துக்குள் பிரவேசித்த சீதா தயங்கித் தயங்கி நடந்து வீட்டு வாசற்படியோரமாக வந்து நின்றாள். உள்ளேயிருந்து கீதம் வருவது நின்று விட்டது. ரேடியோவில் யாரோ பேசுவது கேட்டது. வீட்டுக் கதவு சாத்தியிருந்தது. ஆயினும் உட்புறம் தாளிடவில்லை யென்று தெரிந்தது.

வீட்டுக்குள்ளே அவர்தான் இருக்கிறார்; சந்தேகமில்லை. வாசலில் வேலைக்காரன் யாரும் இல்லை. திடீரென்று கதவைத் திறந்துகொண்டு உள்ளே போய் நின்றால் அவர் என்ன நினைப்பார்? திடுக்கிட்டுப் போவாரோ, என்னமோ? அவர் பேச்சு தன் காதில் விழும். ஆனால் அவருடன் பேசுவதற்குத் தனக்குத் தைரியம் வருமா? பேசும் சக்தி நாக்குக்கு இருக்குமா? நாக்குப் புரண்டாலும், தொண்டை அடைத்துக் கொண்டு விடாதா?

இவ்விதம் சீதா வீட்டு வாசற்படியில் ஒரு காலுடன் தயங்கிக்கொண்டு நின்றபோது, இன்னும் யாரோ வெளி மதிள் கேட்டின் கதவைத் திறக்கும் சத்தம் கேட்டது. தன்னுடைய செவிப் புலனின் சக்தி முன்னைக் காட்டிலும் எவ்வளவு அதிக கூரியதாயிருக்கிறது என்பதைச் சீதா நினைத்து வியந்தாள். ஆனால் வியப்பைத் தொடர்ந்து பயம் வந்தது. யார் வருகிறார்களோ, என்னமோ? தன்னைக் கண்டதும் என்ன சொல்வார்களோ, என்னமோ?—வாசற்படியிலிருந்து உடனே அகன்று சென்று வீட்டுச் சுவருக்கு அப்பால் மறைந்து கொண்டு நின்றாள். வருகிறது யார் என்பதை உன்னிப்பாகக் கவனித்தாள்.

வந்தவள்,—ஆம், வந்தவள் ஸ்திரீதான்,— தலையோடு கால் வரையில் மூடிய முஸ்லிம் பர்தா உடை தரித்துக் கொண்டு வந்தாள். இரண்டு கண்களினாலும் பார்ப்பதற்கு மட்டும் அந்த உடையில் இரண்டு துவாரங்கள் இருந்தன. ஐயோ! இவள் யார்? எதற்காக இந்த நேரத்தில் இங்கே வருகிறாள்? கடவுளே! இந்த வீட்டில் இப்போது யாரோ முஸ்லிம்கள் இருக்கிறார்கள் போலிருக்கிறது. தெரியாத்தனமாக வல்லவா இங்கே வந்து விட்டோம்? நல்லவேளை, வீட்டுக்குள்ளே நுழையாமல் தப்பினோம்! இந்த ஸ்திரீ வீட்டுக்குள்ளே பிரவேசித்ததும் நாம் தப்பி ஓடிப்போய் விடவேண்டும்! தப்பி எங்கே ஓடுவது?



எங்கே? எங்கே? யமுனைக் கரைக்கா? காந்தி மகாத்மாவினுடைய புனிதத் திருமேனி இன்னும் அங்கே எரிந்து கொண்டிருக்குமா? அல்லது எரிந்து அடங்கிச் சாம்பராகியிருக்குமா? அத்தனை கூட்டமும் இதற்குள் கலைந்து போயிருக்குமா? நாம் தனியாக அவ்விடத்தில் பக்கத்தில் சென்று நின்று அந்தச் சாம்பலையாவது தொட்டு நெற்றியில் இட்டுக் கொள்ளலாமா?...

அந்த முஸ்லிம் பர்தா ஸ்திரீ மெள்ள மெள்ளச் சத்தம் கேட்காதபடி அடி எடுத்துவைத்து வீட்டு வாசற்படிக் கருகில் வந்தாள். சீதாவைப் போலவே அவளும் சிறிது நேரம் தயங்கினாள். எதற்காகத் தயங்குகிறாள்? இவள் இந்த வீட்டுக்கு உரியவளானால் ஏன் தயங்கி நிற்கவேண்டும்?

அந்த ஸ்திரீ படிகளில் ஏறித் தாழ்வாரத்தில் நின்றாள். மறுபடியும் தயக்கத்துடன் நடந்து சென்று வீட்டின் வாசற் கதவை நெருங்கி விரல்களின் பின் கணுக்களினால் கதவைத் தட்டினாள். 'டண், டண்' என்று கதவில் விரல் கணுக்கள் தட்டிய சத்தம் சீதாவின் காதில் நன்றாகக் கேட்டது. அதிசயம்! அதிசயம்! கேட்கும் சக்தி எவ்வளவு கூர்மையாகியிருக்கிறது! காந்தி மகாத்மாவினுடைய அருள் தான் இது! சந்தேகமில்லை.

வீட்டுக்குள்ளேயிருந்து ஆங்கில பாஷையில் "கெட் இன்!" (உள்ளே வருக) என்ற குரல் வந்தது. அந்தக் குரலைக் கேட்டதும் சீதாவின் தேகம் சிலிர்த்தது. பன்னிரண்டு வருஷத்துக்கு மேலே அந்தக் குரல் அவளுக்கு எல்லையற்ற இன்பத்தையும் எல்லையற்ற துன்பத்தையும் அளித்திருக்கிறது. சொல்ல முடியாத ஆர்வத்தை அந்தக் குரல் அவள் மனதில் எழுப்பிவிட்ட காலம் உண்டு. அளவில்லாத வெறுப்பையும் கோபத்தையும் எழுப்பிய நாட்களும் உண்டு. அவர்தான்; தன்னைக் கைப் பிடித்து மணந்து கொண்ட மன்னர்தான்; தன் கழுத்தில் தாலி கட்டித் தாரமாக்கிக் கொண்ட மணவாளர்தான். வீட்டுக்குள்ளே இருப்பவர் அவர்தான்.

இந்தப் பர்தா அணிந்த ஸ்திரீக்கு அவரிடம் என்ன வேலை? இவள் யார்? இவளை முன்னாலே அவருக்குத் தெரியுமா? இன்றைக்கு இவள் வருவாள் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தாரா? அதிலும் காந்தி மகாத்மா

வின் உடல் தீக்கிரையான இந்தப் புண்ணிய தினத்திலா? இவளால் அவருக்கு ஏதேனும் தீங்கு வருவதாயின் அதைத் தான் தடுக்க வேண்டாமா?......இப்படி ஆயிரம் எண்ணங்கள் சீதாவின் மனதில் உதித்தன.

அந்தப் பர்தா ஸ்திரீ கதவைத் திறந்து கொண்டு உள்ளே போனதைச் சீதா பார்த்தாள். தானும் உள்ளே போக வேண்டும், போய் என்ன நடக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும் என்ற அசைக்க முடியாத ஆவல் சீதாவைப் பற்றிக் கொண்டது. அவளுடைய உடம்பில் ஒவ்வொரு அணுவிலும் அந்த ஆவல் தோன்றி அவளைச் சித்திரவதை செய்தது. சீதா பல்லைக் கடித்துக் கொண்டு யோசனை செய்தாள். வாசற்புறமாக அவளும் போவதில் பயனில்லை. உள்ளே நுழைந்ததும் இருக்கும் பெரிய அறையிலேதான் ரேடியோ இருக்கிறது. அங்கேதான் அவரும் உட்கார்ந்திருக்கிறார். தான் வாசற்பக்கமாகப் போனால் உடனே பார்த்து விடுவார். தெரிந்து கொள்ள விரும்பிய விஷயத்தைத் தெரிந்து கொள்ள முடியாமற் போகலாம்.

கொல்லைப் புறமாகப் போகலாம். கதவு திறந்திருந்தால் மிக்க செளகரியம். யாருக்கும் தெரியாமல் பக்கத்து அறைக்குப் போய் நின்று அவர்களுடைய பேச்சைக் கேட்கலாம். அந்த ஸ்திரீயை இன்னார் என்பதாகவும் பார்த்துத் தெரிந்து கொள்ளலாம். கொல்லைக் கதவு தாளிட்டிருந்தால் படுக்கையறையின் ஜன்னல் ஓரத்தில் நின்று அவர்களுடைய சம்பாஷணையைக் கேட்கலாம். அதிலிருந்து ஒருவாறு தெரிந்து கொள்ளலாம்....



சீதாவின் கால்கள் அவளை வீட்டின் பின்பக்கத்துக்கு இழுத்துச் சென்றன. பின் பக்கத்துக் கதவு தாளிடவில்லை. தொட்டதும் அக்கதவு திறந்து கொண்டது. 'கிறீச்' சத்தம்கூடப் போடவில்லை. அடி மேல் அடி வைத்து மெள்ள மெள்ள நடந்து சீதா உள்ளே சென்றாள். ரேடியோ வைத்திருந்த முக்கிய அறைக்குப் பக்கத்து அறைக்குள் பிரவேசித்தாள். அந்த அறையிலிருந்து ரேடியோ அறைக்குள் போவதற்காக ஏற்பட்ட வாசற்படியின் பாதிக் கதவுகள் இலேசாகத் திறந்திருந்தன. அவசியமானால் அந்தக் கதவு இடுக்கு வழியாகப் பார்த்துத் தெரிந்து கொள்ளலாம். ஆனால் அதற்கு இப்போது அவசியம் இல்லை. முதலில் பேச்சைக் கவனித்துத் தெரிந்து கொள்ளலாம். சீதாவின் கால்கள் தள்ளாடிக் கொண்டிருந்தன. சுவர் ஓரமாகக் கிடந்த சோபாவில் சத்தமின்றி உட்கார்ந்து ஒட்டுக் கேட்கத் தொடங்கினாள்.

"யார் நீ? இங்கே எதற்காக வந்தாய்? வேறு யார் வீடோ என்று நினைத்துக் கொண்டு வந்தாய்போலிருக்கிறது. போ! போ சீக்கிரம்! நான் இங்கே தனியாக இருக்கிறேன், வீட்டில் பெண்பிள்ளை யாரும் இல்லை! போ உடனே!" என்று ராகவனுடைய கடுமை மிக்க குரல் கூறியது. அவனுடைய குரலில் தொனித்த கடுமை சீதாவின் செவிகளுக்கு மிக இனிமையாயிருந்தது. "வீட்டில் பெண்பிள்ளை யாரும் இல்லை!" என்ற வார்த்தைகள் அவளுக்கு அளவிலாத ஆனந்தத்தை அளித்தன.

ஒரு நிமிஷம் மௌனம் குடி கொண்டிருந்தது. ரேடியோவை முன்னமேயே ராகவன் மூடியிருக்க வேண்டும்.

மறுபடியும் ராகவன் கடுங் குரலில் கூறினான் :—" ஏன் சும்மா நிற்கிறாய்? போகிறாயா? போலீஸைக் கூப்பிடட்டுமா? வேலைக்காரத் தடிப் பயல்கள் இரண்டு பேரும் போய்த் தொலைந்து விட்டார்கள்! அவர்கள் வரட்டும் சொல்கிறேன். கதவைத் தாளிடாதது தப்பாய்ப் போயிற்று. பாகிஸ்தானிலிருந்து ஓடி வந்த அகதிச் சனியன் போல அல்லவா இருக்கிறது!......"

இந்தச் சமயத்தில் ராகவனுடைய பேச்சுத் தடைப்பட்டது.

"ராகவன்! மன்னிக்கவேண்டும்! உங்களுக்கு அதிக நேரம் தொந்தரவு கொடுப்பதாக உத்தேசமில்லை. சீக்கிரம் போய்விடுகிறேன்!" என்று ஒரு பெண்ணின் குரல் கூறியது.

அந்தக் குரலைக் கேட்டதும் சீதாவின் உடம்பு முழுதும் மறுபடியும் ஒரு தடவை சிலிர்த்தது. அது தாரிணியின் குரல்தான். எழுந்து ஓடிப்போய் "அக்கா!" என்று அலறி அவளைக் கட்டிக்கொள்ள வேண்டும் என்ற ஆசை உண்டாயிற்று. அந்த ஆசையை மிகவும் கஷ்டப்பட்டு அவள் அடக்கிக் கொண்டாள். ஆவலை அடக்கிக் கொள்வதற்கு மிக முக்கியமான காரணம் இருந்தது. தான் இருப்பது,— தான் உயிரோடிருப்பது.— தன் கணவருக்குத் தெரியவே கூடாது! அந்த மன உறுதியை நிறைவேற்றியே தீரவேண்டும்.

"தாரிணி! தாரிணி! நீயா இந்த வேஷத்தில் வந்திருக்கிறாய்? எதற்காக இந்தப் பயங்கரமான முகமூடி! உட்காரு, தாரிணி! உட்காரு! உன்னை நான் அப்படிப் போகச் சொல்லுவேனா? எத்தனை நாளாக உன்னைப் பார்க்கவேண்டும் என்று தவம் செய்து கொண்டிருக்கிறேன்! தயவு செய்து உட்காரு!" என்றான் ராகவன்.

"ஆகட்டும், ஐயா! எனக்கும் மிக்க களைப்பாயிருக்கிறது. நான் சொல்ல வந்ததை உட்கார்ந்து சொல்லிவிடுகிறேன். அதிக நேரம் இவ்விடத்தில் இருக்கமாட்டேன். ஐந்து நிமிஷத்தில் சொல்லி விட்டுப் போய்விடுகிறேன்!" என்றாள் தாரிணி.

"ஐந்து நிமிஷமா? ஐந்து நிமிஷத்தில் நீ போனால் நான் விட்டுவிடுவேனா உன்னை?" என்றான் ராகவன்.

"சற்று முன்னால் 'வீட்டில் பெண் பிள்ளை யாரும் இல்லை! போ உடனே!' என்று சொன்னீர்களே?"

"அது உனக்காகச் சொன்னேனா! யாரோ அகதிச் சனியனுக்கும் என்று நினைத்துக் கொண்டு சொன்னேன்."

"நானும் ஒரு அகதிச் சனியன்தான் என்று வைத்துக் கொள்ளுங்கள். சீக்கிரம் நான் போகவும் வேண்டும். இல்லாவிட்டால் குழந்தை வஸந்தி கவலைப்படத் தொடங்கி விடுவாள்..."

"தாரிணி! வஸந்தி எங்கே? ஏன் இப்போதே அவளையும் அழைத்து வரவில்லை? குழந்தை சௌக்கியமாயிருக்கிறாளா?"

"சௌக்யமாயிருக்கிறாள். அவளைப் பற்றி உங்களுக்குச் சொல்வதற்காகவே இன்றைக்கு வந்தேன். எப்போது குழந்தையைக் கொண்டு வந்து விடச் சொல்கிறீர்களோ, அப்போது கொண்டு வந்து விட்டு விடுகிறேன்..."

"கொண்டு வந்து விடுகிறேன் என்றா சொல்கிறாய்? சரி, கொண்டு வந்து விடு! அந்தத் தாயில்லாக் குழந்தையை இந்தச் சூனியமான வீட்டில் அழைத்து வைத்துக் கொண்டு நான் திண்டாடுகிறேன். அதனால் என்ன?"

"ஐயா! தாயில்லாக் குழந்தை என்று ஏன் சொல்கிறீர்கள்? சீதாவைப் பற்றி நிச்சயமாக உங்களுக்கு ஏதேனும் தெரியுமா?"

"தெரியும், தாரிணி! என்னைப் போன்ற அபாக்கியசாலி இந்த உலகத்தில் வேறு யாருமே இருக்க மாட்டார்கள். சீதா சேனாப் நதியில் மூழ்கி இறந்து விட்டாளாம். சூரியா நேரில் பார்த்ததாகச் சொன்னான்..."

இந்தச் சமயத்தில் விம்முகிற சத்தம் கேட்டது. விம்முகிறது யார் என்று சீதாவுக்குத் தெரியவில்லை. ராகவனாகவும் இருக்கலாம்; தாரிணியாகவும் இருக்கலாம். உள்ளே பாய்ந்து ஓடிச் சென்று தான் உயிரோடிருப்பதைத் தெரிவித்து விட்டால் என்ன?—இல்லை, கூடவே கூடாது! சீதா பிடிவாதமாகப் பல்லைக் கடித்துக் கொண்டு எழுந்திராமல் உட்கார்ந்திருந்தாள்.

"சூரியா நேரில் பார்த்ததாகச் சொல்லியிராவிட்டால் நான் நம்பி

யிருக்க மாட்டேன். இன்னமும் தேடிக் கொண்டுதா னிருப்பேன். ஹொஷங்காபாத்தில் அவளையும் குழந்தையையும் தனியாக விட்டு விட்டு நான் இந்தப் பாழும் உத்தியோகத்துக்காக ஓடி வந்ததை நினைத்தால் எனக்கு நெஞ்சு வெடித்து விடும் போலிருக்கிறது. ஆனால் பாகிஸ்தானத்தில் உள்ளவர்கள் அப்படித் திடீரென்று பேய்களாவார்கள் என்று எனக்கு என்ன தெரியும்?..."

"ராகவன்! போனதை நினைத்து நீங்கள் வருத்தப்பட வேண்டாம். சீதா உண்மையில் பாக்கியசாலி; நதி வெள்ளத்தில் மூழ்கி இறந்து போய் விட்டாள். உயிரோடிருக்கும் நாம் தான் துர்ப்பாக்கியசாலிகள். உலகத்துக்கே ஒரு உத்தமராயிருந்தவர் சுட்டுக் கொல்லப் பட்டதைப் பார்த்தோம், கேட்டோமல்லவா? இந்த மனவேதனையை அநுபவியாமல் போய் விட்டவள் அதிர்ஷ்டசாலிதானே!"

"நேற்று இராத்திரி இந்தச் செய்தியைக் கேள்விப் பட்டதிலிருந்து எனக்கும் அவளுடைய நினைவாகவே யிருக்கிறது. சீதா மட்டும் இப்போது உயிரோடு இருந்திருந்தால் எவ்வளவு துக்கப்பட்டிருப்பாள் என்று அடிக்கடி நினைத்துக் கொள்கிறேன். சீதாவுக்கு மகாத்மாவிடம் ஒரு தனி பக்தி. அதிலும் நாங்கள் ஹொஷங்காபாத்தில் ஒரு வருஷம் இருந்த காலத்தில் அவள் மகாத்மா காந்தியைத் தெய்வமாகவே நினைத்துப் பூஜை செய்து கொண்டிருந்தாள்......"

"சீதா புண்ணியம் செய்தவள். நான் போய் வருகிறேன், மிஸ்டர் ராகவன்! நாளைக் காலையில் தங்கள் குமாரியை அழைத்துக்கொண்டு வந்து தங்களிடம் விட்டுவிடுகிறேன்......"

"இதென்ன சொல்லுகிறாய், தாரிணி! முன் பின் தெரியாதவர்கள் பேசுவது போலப் பேசுகிறாயே? எங்கே போகவேண்டும் என்கிறாய்? நீ எங்கே தங்கியிருக்கிறாய்? குழந்தையை எங்கே விட்டுவிட்டு வந்திருக்கிறாய்? இரண்டு மாதத்துக்கு முன்னாலே சீதா பெயருக்கு நீ கடிதம் எழுதியிருந்தாயே? உன்னை நான் எதிர்பார்த்துக் கொண்டு தானிருந்தேன். இத்தனை காலமும் என்ன செய்தாய்? எங்கே இருந்தாய்?" என்று ராகவன் படபட வென்று பல கேள்விகளைக் கொட்டினான்.

"அந்தக் கடிதம் எழுதிய அடியோடு இந்த ஊருக்கு வந்து விட்டேன். ஜும்மா மசூதிக்கு அருகில் நானும் என் பெற்றோர்களும் முன்னொரு சமயம் வசித்த வீட்டுக்குப் போனேன். அன்றைக்கே அந்தப் பிரதேசத்தில் கலகம் தொடங்கிவிட்டது. இரண்டு மாதமாக வீட்டை விட்டு வெளியே புறப்பட முடியவில்லை. குழந்தையை அழைத்து வரப் பயமா யிருந்தது. அதனாலேதான் இத்தனை நாள் தாமதம். இன்றைக்கு இந்த டில்லி நகர் முழுவதும் மகாத்மாவின் இறுதி ஊர்வலத்துக்குப் போய் விட்டது. நானும் தைரியமாகப் புறப்பட்டு வந்தேன்" என்றாள் தாரிணி.

"இன்றைக்கு இந்த நகரத்தில் வெளியில் புறப்படாமல் வீட்டிலேயே இருந்தவன் நான் ஒருவன்தான்போலிருக்கிறது. இந்த வீட்டில் இருந்த வேலைக்காரர்கள் கூட மகாத்மா காந்தியின் கடைசி தரிசனத்துக்குப் போய் விட்டார்கள். நான் வீட்டில் இருந்ததும் நல்லதாய்ப் போயிற்று. ஒரு வேளை நீ வந்து என்னைக் காணாமல் திரும்பிப் போயிருக்கலா மல்லவா?"

"ஆமாம்; நீங்கள் வீட்டில் இருந்தது நல்லதாகத்தான் போயிற்று. நான் போய்வருகிறேன். நாளைக்கு..."

"நாளைக்கு என்கிற பேச்சு வேண்டாம். இப்போதே நான் கார் எடுத்துக்கொண்டு வருகிறேன். போய் வஸந்தியை அழைத்து வருவோம். ஆனால் அந்தத் தாயில்லாக் குழந்தையை என் தலையிலே கட்டி விட்டு நீ தப்பிப் போய் விடலாம் என்று மட்டும் நினைக்காதே! என்னால் அந்தப் பொறுப்பை வகிக்கமுடியாது. நீ இந்த வீட்டில் சீதாவின் ஸ்தானத்தில் இருந்து வஸந்தியையும் வளர்ப்பதாக ஒப்புக் கொண்டால் மட்டுமே நான் அந்தப் பொறுப்பை ஒப்புக்கொள்ள முடியும்."

"ஐயா! நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்? 'சீதாவின் ஸ்தானத்தில் நான் இருக்க வேண்டும்' என்று

சொல்வதின் அர்த்தம் என்ன? இன்னும் உங்களுக்கு அந்தப் பழைய பைத்தியம் விடவில்லையா?"

"அந்தப் பழைய பைத்தியம் விடவில்லைதான். இந்த உடம்பில் உயிர் உள்ள வரையில் என்னை அப் பைத்தியம் விடாது, தாரிணி!"

"உங்களுக்கு ஓர் இரகசியம் தெரியாது. அதனால் இப்படிச் சொல்லுகிறீர்கள். சீதா என் சொந்தத் தங்கை; என் உடன் பிறந்த சகோதரி."

"அது எனக்குத் தெரியாத இரகசியம் அல்ல. நீ சீதாவின் சொந்தத் தங்கை என்பதைச் சூரியா சொன்னான். இன்னொரு விஷயமும் அவன் கூறினான். நீ என்னைக் கலியாணம் செய்து கொண்டால் அதைக் காட்டிலும் சீதாவின் ஆத்மாவுக்குச் சாந்தி அளிக்கக்கூடியது வேறொன்றுமிராது என்று சொன்னான். நீயே யோசித்துப் பார், தாரிணி! இந்த வீட்டிலிருந்து வஸந்தியை வளர்ப்பதற்கு உன்னைக் காட்டிலும் தகுதியுடையவள் உண்டா? நீ மட்டும் என்னைக் கலியாணம் செய்து கொள்வதாக ஒப்புக் கொண்டால் ... வேண்டாம்; இன்றைக்கு இந்தப் பேச்சு உனக்கு ரஸிக்காது. பிற்பாடு பார்த்துக் கொள்ளலாம். இன்றைக்கு நம் எல்லாருடைய மனமும் கலங்கிப் போயிருக்கிறது. நாம் இப்போது போய்க் குழந்தையை அழைத்துக் கொண்டு வரலாம். ஆனால் நீ உன்னுடைய முகமூடியை மட்டும் உடனே எடுத்துவிட வேண்டும். இன்னும் இந்தப் பயங்கரமான உடையை நீ தரித்திருப்பது எனக்குப் பிடிக்கவில்லை."

"ஆகட்டும், ஐயா! இந்தப் பர்தா உடையை எடுத்து விடுகிறேன்; எடுக்கத்தான் வேண்டும். ஆனால் கலியாணப் பேச்சைத் தள்ளிப் போடுவதில் எனக்கு விருப்பம் இல்லை. அதை இப்போதே பேசி முடித்து விட்டால் என் மனது நிம்மதியடையும்......"

"எனக்கு ஒன்றும் ஆட்சேபமில்லை, தாரிணி! பேஷாக இப்போதே பேசி முடிவு செய்யலாம். ஆனால் பேசுவதற்குத்தான் என்ன இருக்கிறது? நீ உன்னுடைய விருப்பத்தைத் தெரிவிக்க வேண்டியதுதான். நானோ பதினாறு வருஷ காலமாகத் தவம் செய்து கொண்டிருக்கிறேன்!"

"என்னுடைய விருப்பத்தைத் தெரிவிப்பதற்கு முன்னால் ஒரு விஷயம் சொல்ல வேண்டும். என் தங்கை சீதாவுக்கு நான் சத்தியம் செய்து கொடுத்திருக்கிறேன்......"

"என்ன சத்தியம் செய்து கொடுத்தாய்? எதற்காக?"


"உங்களுக்குச் சம்மதம் என்றால் நான் உங்களை மணந்து கொள்கிறேன் என்று சீதாவுக்குச் சத்தியம் செய்து கொடுத்தேன்."

"அதை நிறைவேற்றுவதாக உத்தேசமா? காற்றிலே பறக்க விட்டு விடுவதாக உத்தேசமா?"

"சீதா உயிருடன் இருந்தபோது என்னால் அவளுக்குப் பல கஷ்டங்கள் நேர்ந்தன. கடைசியில் அவளைப் பாதுகாக்க நான் செய்த ஏற்பாடும் பயனில்லாமற் போயிற்று. சீதாவின் ஆவியாவது நிம்மதி அடைய வேண்டாமா? ஆகையால் அவளுக்கு நான் கொடுத்த வாக்கை மீறப் போவதில்லை. நீங்கள் என்னைக் கலியாணம் செய்து கொள்ளச் சம்மதித்தால் எனக்கும் அதில் சம்மதம். ஆனால் நீங்கள் யோசித்துச் சொல்ல வேண்டும்......"

சீதா இதுவரை தான் உட்கார்ந்திருந்த சோபாவிலிருந்து எழுந்து நின்றாள். பேதைப் பெண்ணே! ஏன் இன்னும் இங்கே இருக்கிறாய்? போய்விடு! உடனே ஓடிப் போய்விடு! உன் மனம் நன்றாயிருக்கும் போதே இங்கிருந்து போய்விடுவது நல்லது. ஒருவேளை உன் புத்தி மாறிக் கெட்டுப்போய் விடலாம் அல்லவா? — இவ்வாறு சீதாவின் உள்மனம் அவளுக்கு அறிவுறுத்தியது. சிறிதும் சத்தம் செய்யாமல் அடிமேல் அடிவைத்து நடந்தாள். கொல்லை வழியாகவே வெளியில் வந்து வீட்டைப் பிரதட்சணம் சுற்றிக் கொண்டு வாசற் பக்கம் வந்தாள். மதில் சுவரின் வாசற்படியைத் தாண்டி வீதியை அடைந்ததும் அதிவேகமாக நடந்தாள். திக்குத் திசை புரியாமல் நாலாபுறமும் இருண்டு கொண்டு வந்தது.

சீதா! என்ன காரியம் செய்து விட்டாய்? இன்னும் ஐந்து நிமிஷம் நீ அந்தப் பக்கத்து அறையிலேயே இருந்திருக்கக் கூடாதா?



15. இமாலயத் தவறு

காந்திஜியும் போலீஸ் அதிகாரியும் ஏறியிருந்த ரயில் பம்பாயை நெருங்கியதும் போலீஸ் அதிகாரி, "உங்களை இப்போது விடுதலை செய்துவிடப் போகிறேன். ஆனால் மெரீன் லைன் ஸ்டேஷனில் நீங்கள் இறங்கிவிட்டால் நலம். கொலாபா ஸ்டேஷனில் பெரும் ஜனக்கூட்டம் சேர்ந்திருக்கிறதாம். உங்களைப் பார்த்தால் ஜனங்கள் அதிக ஆரவாரம் செய்யக் கூடும். அமைதிக்குப் பங்கம் ஏற்படலாம். உங்களுக்கு அதில் இஷ்டம் இல்லையே?" என்றார்.


மகாத்மாவுக்கோ ஆரவாரமும் பிடிப்பதில்லை; அமைதிக்குப் பங்கம் லவலேசமும் பிடிப்பதில்லை. ஆகையால் அவர், "சரி; மெரீன் லைன் ஸ்டேஷனில் இறங்கி விடுகிறேன்" என்றார். போலீஸ் அதிகாரி மகாத்மாவுக்கு வந்தனம் அளித்தார். மகாத்மா மெரீன் லைன் ஸ்டேஷனில் இறங்கினார். ஒரு நண்பரின் வண்டி அந்தப் பக்கமாகப் போய்க்கொண்டிருந்தது. அதில் ஏறிக்கொண்டு ஸ்ரீ ரேவா சங்கர் ஜாவேரியின் வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தார். அதே சமயத்தில் ஸ்ரீ உமார் சோபானியும் ஸ்ரீமதி அநசூயா பென்னும் அங்கு வந்து சேர்ந்தார்கள். "உங்களை டில்லிக்கருகில் கைது செய்து பம்பாய்க்குக் கொண்டு வரும் செய்தி பம்பாய் வாசிகளுக் கெல்லாம் தெரிந்துவிட்டது. பைதோனிக்கு அருகில் ஏராளமான ஜனக் கூட்டம் கூடியிருக்கிறது. ஜனங்களின் பரபரப்பு நிமிஷத்துக்கு நிமிஷம் அதிகமாகிக் கொண்டு வருகிறது. அவர்கள் கட்டுமீறிப் போனால் என்ன நடக்குமோ தெரியாது. அவர்களை எங்களால் சமாதானப்படுத்த முடியவில்லை. தங்களையே நேரில் பார்த்தால்தான் அவர்கள் அடங்குவார்கள். தாங்கள் உடனே புறப்பட்டு வரவேண்டும்!" என்று அந்த நண்பர்கள் சொன்னார்கள்.

பிறகு நடந்ததைப் பற்றிக் காந்தி மகாத்மா எழுதியிருப்பதாவது :—

"மறுபடியும் வண்டியில் ஏறிச் சென்றேன். பைதோனிக் கருகில் பெருங் கூட்டம் சேர்ந்திருப்பதைக் கண்டேன். என்னைப் பார்த்ததும் ஜனங்கள் மகிழ்ச்சிப் பெருக்கினால் பைத்தியங் கொண்டவர்களானார்கள். அவர்கள் என்னைப் பின்தொடர்ந்து ஊர்வலம் போல வரத் தொடங்கினார்கள். 'வந்தே மாதரம்' 'அல்லாஹோ அக்பர்' என்ற கோஷங்கள் ஆகாயத்தை அளாவின. மேலிருந்து கற்கள் சரமாரியாகப் பொழிந்து கொண்டிருந்தன. அமைதியாயிருக்கும்படி கூட்டத்தை வேண்டிக் கொண்டேன். ஆனால் அந்தக் கல்மாரியிலிருந்து தப்ப முடியாதென்றே தோன்றிற்று. ஊர்வலம் அப்துர் ரஹ்மான் வீதியைத் தாண்டி, கிராபோர்டு மார்க்கெட் பக்கம் போகத் திரும்பியபோது, திடீரென்று குதிரைப் போலீஸ் படையொன்று எதிர்ப்பட்டது. ஊர்வலம் மேலே கோட்டைப் பக்கம் போகாமல் தடுப்பதற்காகக் குதிரைப் போலீஸார் வந்திருந்தனர். ஜனக்கூட்டமோ மிக நெருக்கமாயிருந்தது. ஆகவே போலீஸ் படையைப் பிளந்து கொண்டு கூட்டம் மேலே செல்லத் தொடங்கிவிட்டது. அப் பிரம்மாண்டமான கூட்டத்தில் என்னுடைய குரல் கேட்பதே இயலாத காரியம். இத்தகைய நிலைமையில், குதிரைப் படைக்குத் தலைமை வகித்த உத்தியோகஸ்தர், கூட்டத்தைக் கலைக்கும்படி தம்முடைய வீரர்களுக்கு உத்தரவிட்டார். அவ்வளவுதான்! குதிரை வீரர்கள் தங்களுடைய ஈட்டிகளை வீசிக் கொண்டு கூட்டத்தில் புகுந்தார்கள். ஒரு நிமிஷம்

நானும் காயமடைவேன் என்று தோன்றியது. ஆனால் ஈட்டிகள் எங்கள் மோட்டார் வண்டியை உராய்ந்ததுடன் நாங்கள் தப்பினோம். அந்தக் குதிரை வீரர்கள் அதிவேகமாக எங்களைத் தாண்டிச் சென்றார்கள். பொதுக் கூட்டம் சின்னாபின்னமாயிற்று. ஜனங்கள் ஒரே குழப்பத்திற்குள்ளாயினர். பின்னர் ஓடத் தொடங்கினார்கள். சிலர் குதிரைகளின் காலடியினால் மிதிபட்டார்கள். வேறு சிலர் உடம்பெல்லாம் காய மடைந்தார்கள். இன்னும் சிலர் கீழே தள்ளி நசுக்கப்பட்டார்கள். ஏன் விழுவதற்கும் இடமில்லாமல் நெருங்கிய அப்பெருங் கூட்டத்தில், குதிரைகள் போவதற்கு இடமே கிடையாது. ஜனங்கள் கலைந்து போவதற்கு வழியும் இல்லை. ஆதலின் குதிரை வீரர்கள் குருட்டுத்தனமாகக் கூட்டத்திற்குள் புகுந்து இடித்து மிதித்துக் கொண்டு சென்றார்கள். அவர்கள் செய்தது என்னவென்று அவர்களுக்கே தெரியவில்லையென்று தோன்றியது. மொத்தத்தில், அது ஒரு பயங்கரக் காட்சியா யிருந்தது.''

இந்தச் சம்பவம் மகாத்மாவின் மனதில் பெரும் துயரத்தை உண்டாக்கியது. அதிகாரிகளிடம் தம் கண்டனத்தைத் தெரியப்படுத்த விரும்பினார். மோட்டார் வண்டியை நேரே பம்பாய்ப்



நண்பர் :—என்ன ஸார்! சட்டசபையிலிருந்து இப்போதுதான் வருகிறாப் போலிருக்கு!

கிருஹஸ்தர் :—தப்பாகச் சொல்கிறீர்கள்; நான் எம். எல். ஏ. இல்லை!

நண்பர் :—அது எனக்குத் தெரியும். இப்போதுதான் தூங்கி எழுந்து வரேனோன்னு கேட்டேன்!

போலீஸ் கமிஷனரின் காரியாலயத்துக்கு விடச் சொன்னார். அக் காரியாலயத்தில் போலீஸ் ஆர்ப்பாட்டம் பலமாயிருந்தது. ஆயினும் மகாத்மாவை உள்ளே போக விட்டார்கள். கமிஷனர் துரையிடமும் அழைத்துப் போனார்கள். கமிஷனர் மிஸ்டர் கிரிப்பித் என்பவருக்கு அருகில் பஞ்சாப்பிலிருந்து வந்த மிஸ்டர் பௌரிங் அமர்ந்திருப்பதைக் காந்திஜி கண்டார்.

காந்திமகான் பைதோனியில் நடந்த சம்பவங்களை எடுத்துச் சொல்லி, "ஜனங்களின்மீது குதிரைப் படையை ஏவியது அநாவசியம்; அநியாயம்!'' என்று தம்முடைய கருத்தைத் தெரிவித்தார்.

"அதைப் பற்றித் தீர்மானிக்க வேண்டிய பொறுப்பு எங்களுடையது. ஜனங்களுக்கு நீங்கள் செய்யும் போதனையினால் என்ன நேரும் என்பது உங்களுக்குத் தெரியாது. உங்களுடைய நோக்கம் என்னமோ நல்லதுதான். ஆனால் அதை ஜனங்கள் அறிந்து கொள்ள மாட்டார்கள். விரைவில் கட்டுங்கடங்காமல் போய்விடுவார்கள். பிறகு பெரும் விபரீதங்கள் நிகழும். ஆகையால் ஆரம்பத்திலேயே கண்டிப்பான நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டியது அவசியம்'' என்றார் கமிஷனர் கிரிப்பித் துரை.

காந்திஜி அதை ஒப்புக் கொள்ளாமல் மறுத்துப் பேசினார். "ஜனங்கள் மீது வீண் பழி சொல்கிறீர்கள். ஜனங்கள் இயற்கையில் அமைதியை விரும்புகிறவர்கள். போலீஸார் தலையிடாதிருந்தால் ஒரு விபரீதமும் நேராது! அதற்கு நான் பொறுப்பு!'' என்று சொன்னார்.

"ஜனங்கள் உங்களுடைய அஹிம்சா தர்ம போதனையை ஏற்றுக் கொள்ளவில்லையென்று நிச்சயமாகத் தெரிந்தால் என்ன செய்வீர்கள்?'' என்று கிரிப்பித் துரை கேட்டார்.

"உடனே சட்ட மறுப்பு இயக்கத்தை நிறுத்தி விடுவேன்!'' என்றார் மகாத்மா.

"அப்படியானால், கேளுங்கள். அமிருதசரஸிலும் ஆமதாபாத்திலும் இந்த நிமிஷத்தில் ஜனங்கள் கட்டுமீறிப் போய்ப் பயங்கரமான கலவரங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. எல்லா விவரங்களும் எனக்கே இன்னும் வந்து சேரவில்லை. சில இடங்களில் தந்திக் கம்பிகள் அறுக்கப்பட்டிருக்கின்றன. இந்த விபத்துகளுக்கெல்லாம் நீங்கள்தான் பொறுப்பாளி என்று ஏன் சொல்லக் கூடாது?'' என்றார் கமிஷனர் துரை.

"நீங்கள் சொல்வது உண்மை என்று நிச்சயமானால் நான் பொறுப்பை ஏற்றுக் கொள்ளத் தயங்கமாட்டேன். அமிருதசரஸைப் பற்றி எனக்கு ஒன்றும் தெரி

யாது. நான் அங்கே போனதேயில்லை. என்னை அங்கே போகவொட்டாமல் பஞ்சாப் சர்க்கார் தடுத்திராவிட்டால் அவ்விடத்தில் அமைதியை நிலை நாட்டுவதற்கு உதவி செய்திருப்பேன். ஆனால், ஆமதாபாத் விஷயம் வேறு. அது நான் வசித்த ஊர். அங்கே ஜனங்கள் பலாத்காரத்தில் இறங்கியிருந்தால் அதைக் காட்டிலும் எனக்கு வருத்தமளிப்பது வேறொன்றுமிராது!" என்றார் காந்திஜி.

இவ்வாறு போலீஸ் கமிஷனருக்கும் காந்தி மகானுக்கும் நெடுநேரம் வாதம் நடந்தது. கடைசியாக மகாத்மா அன்று மாலையில் சௌபாத்தி கடற்கரையில் பொதுக் கூட்டம் போட்டு ஜனங்களுக்கு அஹிம்சையின் அவசியத்தைப் போதிக்கப்போவதாகச் சொன்னார். கமிஷனரும் அதற்கு இணங்கினார்.



பேப்பர் விற்கும் பையன் :—சுதந்திர தினப் பேப்பருங்க! நாலு வர்ணப் படங்களுடன் இரண்டணாதான்! வாங்கிக்கிங்க!

புடவை வியாபாரி :—நாலு வர்ணம் சரிதானப்பா! வர்ணங்கள் நீடித்திருக்கும் என்று உத்தரவாதம் கொடுக்க முடியுமா?

அவ்வாறே சௌபாத்திகடற்கரையில் அன்று மாலை பொதுக் கூட்டம் நடந்தது. "சத்தியாக்கிரஹ இயக்கத்தின் அடிப்படை சத்தியமும் அஹிம்சையுந்தான். ஜனங்கள் மனோவாக்குக் காயங்களினால் அஹிம்சையைக் கடைப்பிடித்தாலன்றிப் பொது ஜன சத்தியாக்கிரஹ இயக்கத்தை என்னால் நடத்த முடியாது" என்று மகாத்மா வற்புறுத்தினார்.

அன்றிரவு ஆமதாபாத்தில் நடந்த பயங்கர நிகழ்ச்சிகளைப் பற்றிச் செய்தி வந்துவிட்டது. ஸ்ரீமதி அனசூயாபென் அப்போது பம்பாயில் இருந்தார். அவர் ஆமதாபாத் தொழிலாளர் சங்கத்தின் தலைவர் அல்லவா? காந்திஜியோடு ஸ்ரீமதி அனசூயா பென்னையும் சர்க்கார் கைது செய்துவிட்டதாக ஆமதாபாத்தில் வதந்தி பரவியது. இதனால் தொழிலாளர் ஆவேச வெறி கொண்டு பலாத்காரச் செயல்களில் இறங்கிவிட்டார்கள். ஒரு போலீஸ் சார்ஜெண்ட் ஜனங்களால் அடித்துக் கொல்லப்பட்டார்.

இந்தச் செய்திகளைக் கேள்விப்பட்டதும் மகாத்மா ஆமதாபாத்துக்குப் புறப்பட்டார். வழியெல்லாம் துயரம் தரும் செய்திகளே கிடைத்துக்கொண்டிருந்தன. நதியாத் ரயில்வே ஸ்டேஷனுக் கருகில் ரயில் தண்டவாளங்களைப் பெயர்க்க ஜனங்கள் முயன்றதாகவும் விரம்காம் பட்டணத்தில் ஓர் அரசாங்க உத்தியோகஸ்தர் கொல்லப்பட்டதாகவும் ஆமதாபாத்தில் ராணுவச் சட்டம் அமுலுக்கு வந்திருப்பதாகவும் தெரியவந்தன. எல்லா இடங்களிலும் இப்போது உத்தியோகஸ்தர்கள் பழிக்குப் பழி வாங்கி வருவதாகவும் அதனால் ஜனங்கள் பயப்பிராந்தி கொண்டிருப்பதாகவும் வழியில் காந்திஜி கேள்விப்பட்டார்.

இத்தகைய செய்திகளினால் ஏற்பட்ட மனக் கலக்கத்துடன் மகாத்மா ஆமதாபாத் ரயில் நிலையத்தில் இறங்கினார். அங்கே அவரை வரவேற்பதற்கு ஒரு போலீஸ் உத்தியோகஸ்தர் காத்துக் கொண்டிருந்தார். அவர் மகாத்மாவை ஆமதாபாத் கமிஷனர் மிஸ்டர் பிராட் என்பவரிடம் அழைத்துப் போனார். மிஸ்டர் பிராட் கோபத்தினால் துடிதுடித்துக் கொண்டிருந்தார். ஆமதாபாத்தில் நடந்த கலவரங்களுக்கெல்லாம் காந்திஜியின்மேல் பொறுப்பைச் சுமத்தினார். மகாத்மா சாந்தமாக மறுமொழி சொன்னார். கலவரங்கள் நடந்துவிட்டதற்காகத் தம் வருத்தத்தைத் தெரிவித்துவிட்டு அமைதியை நிலைநாட்டும் முயற்சிகளில் தாம் ஒத்துழைப்பதாக வாக்களித்தார். இராணுவச் சட்ட அமுல் அநாவசியம் என்று தம்முடைய கருத்தைத் தெரிவித்து, சபர்மதி நதிக்கரையில் ஒரு பொதுக் கூட்டம் நடத்த அனுமதி கேட்டார். அந்த யோசனை கமிஷனருக்குப் பிடித்திருந்தது. பொதுக் கூட்டம் நடத்த அனுமதித்தார். அவ்வாறே

ஏப்ரல் மாதம் 13-ந் தேதி பொதுக் கூட்டம் நடந்தது. கூடியிருந்த ஜனங்களுக்கு மகாத்மா அவர்களுடைய தவறை உணர்த்த முயன்றார். பலாத்காரத்தின் தீமைகளையும் அஹிம்ஸையின் உயர்வையும் எடுத்து உரைத்தார். ஜனங்கள் அஹிம்சா தர்மத்தை உறுதியாகக் கடைப்பிடிக்காவிட்டால் தாம் சத்தியாக்கிரஹ இயக்கத்தை நடத்த முடியாது என்றும் எச்சரிக்கை செய்தார். கடைசியாக, மகாத்மா கூறியதாவது:—

"உங்களிடையே நான் அதிக காலம் வாழ்ந்திருக்கிறேன். உங்களுக்கு என்னால் இயன்ற ஊழியம் செய்திருக்கிறேன். ஆயினும் நீங்கள் என்னுடைய அஹிம்சா தர்ம போதனையை அறிந்து கொள்ளாமல் பலாத்காரச் செயல்களில் இறங்கியது என் மனதைப் புண்படுத்திவிட்டது. உங்களுடைய குற்றத்தில் எனக்கும் பங்கு உண்டு என்று கருதுகிறேன். அதற்குப் பிராயச்சித்தமாக மூன்று நாள் உண்ணாவிரதம் இருப்பது என்று நிர்மானித்து விட்டேன். என்னிடம் உங்களுக்கு அன்பு இருந்தால் நீங்களும் ஒரு நாள் உண்ணாவிரதம் அனுசரியுங்கள். ஆனால் அதுமட்டும் போதாது. பலாத்காரக் குற்றம் செய்தவர்கள் எல்லாம் தாங்களாகவே முன்வந்து தங்களுடைய குற்றத்தை ஒப்புக்கொள்ள வேண்டும்!"

இந்தப் பொதுக் கூட்டத்தில் காந்தி மகாத்மா பேசியதன் பலனாக நல்ல பலன் ஏற்பட்டது. மறுநாள் இராணுவச் சட்ட அமுல் நீக்கப்பட்டது. ஆனால் மகாத்மா கூறியபடி பலாத்காரக் குற்றம் செய்தவர்கள் முன்வந்து தங்கள் குற்றத்தை ஒப்புக்கொள்ளவில்லை. சர்க்கார் அதிகாரிகளும், ஏதோ திடீரென்று ஏற்பட்ட வெறியினால் குற்றம் செய்த ஜனங்களை மன்னித்து விடுதலை செய்ய முன் வரவில்லை. இதனால் ஏற்பட்ட மனச் சோர்வுடனே மகாத்மா கெயிரா ஜில்லாவின் முக்கிய பட்டணமான நதியாத் நகருக்குச் சென்றார். அங்கே அவர் அறிந்த செய்திகள் அவருடைய துயரத்தை அதிகமாக்கின. கெயிரா வரிகொடா இயக்கத்தின் போது மகாத்மா அந்த ஜில்லாவில் தங்கிப் பிரயாணம் செய்து ஜனங்களுக்குத் தம்முடைய அஹிம்சைக் கொள்கையை எவ்வளவோ பிரசாரம் செய்ததுண்டு. ஆயினும் அந்த ஜில்லா ஜனங்கள் கூடக் கட்டுமீறிப் பல வித பலாத்காரச் செயல்களில் இறங்கினார்கள் என்பது மகாத்மாவின் உள்ளத்தைப் பெரிதும் புண்படுத்திவிட்டது. பொது ஜனங்கள் அஹிம்சா தர்மத்தை நன்குணர்ந்து தகுதி பெறுவதற்கு முன்னால் சட்டமறுப்பு இயக்கத்தைத் தாம் தொடங்கியது பெருந் தவறு என்று மகாத்மாவுக்குத் தோன்றியது. சத்திய சந்தராகிய மகாத்மா தாம் செய்தது தவறு என்று அறிந்தால், அதைப் பகிரங்கமாக ஒப்புக்கொள்வதற்கு என்றும் தயங்கியதில்லை. அன்று மாலையில் நதியாத் நகரில் நடந்த பொதுக் கூட்டத்தில் மகாத்மா தம் மனவருத்தத்தை வெளியிட்டார். "நான் 'இமாலயத் தவறு' செய்து விட்டேன்! ஜனங்கள் தகுதியாவதற்கு முன்னால் சத்தியாக்கிரஹம் ஆரம்பித்துவிட்டேன்! இதற்காக மிகவும் வருந்துகிறேன்" என்று பகிரங்கமாகக் கூறினார். அதோடு, சட்ட மறுப்பு இயக்கத்தை நிறுத்தி வைக்கத் தீர்மானித்திருப்பதாகவும் தெரிவித்தார்.

இந்த நதியாத் கூட்டத்தில் மகாத்மா உபயோகப்படுத்திய 'இமாலயத் தவறு' என்னும் சொற்றொடர் பிறகு வெகு காலம் அடிபட்டுக் கொண்டிருந்தது. காந்திஜி அவ்விதம் பட்டவர்த்தனமாகச் சொல்லிவிட்டதற்காக நண்பர்கள் பலர் வருத்தப்பட்டார்கள். மகாத்மாவின் எதிரிகளோ அதை அடிக்கடி குறிப்பிட்டு இடித்துக் காட்டி வந்தார்கள்.

"தேசம் முழுவதிலும் அமைதி நிலவினால்தான் இயக்கம் நடத்த முடியும் என்றால், ஒருநாளும் அது சாத்தியமாகப் போவதில்லை" என்று நண்பர்கள் சொல்லி வருத்தப்பட்டார்கள்; மகாத்மாவிடம் கோபமும் கொண்டார்கள்.

ஆயினும் இதனாலெல்லாம் காந்திஜியின் உறுதி எள்ளளவும் மாறவில்லை. அஹிம்சா தர்ம நிபந்தனையை அவர் கைவிடவும் இல்லை; சத்தியாக்கிரஹ ஆயுதத்தில் நம்பிக்கை இழந்துவிடவும் இல்லை. பொது ஜனங்களைச் சத்தியாக்கிரஹ இயக்கத்துக்குத் தகுதி செய்வதற்காகத் தக்க முறையில் தீவிரமான பிரசாரம் செய்யவேண்டும் என்னும் நோக்கத்துடன் மீண்டும் பம்பாய்க்குச் சென்றார்.



தலையும் காலி!

சோமு:—நான் சொல்லுவதுதான் சரி! என் தலையை வேண்டுமானாலும் பந்தயம் வைக்கிறேன்!

வேணு:—இல்லை; நான் சொல்லுவதுதான் சரி; என் பர்ஸை வேண்டுமானாலும் பந்தயம் வைக்கிறேன்......

சோமு:—உன் பர்ஸ்தான் காலியாயிற்றே!

வேணு:—அப்படியானால் இரண்டு பேர் பந்தயமும் சரிதான்!

★

எப்படி?

ரிக்ஷாவில் உட்கார்ந்திருப்பவர்:—நான் சிந்தாதிரிப்பேட்டைக்குப் போகவேண்டுமென்று சொன்னால் நீ கார்ப்பொரேஷன் கட்டிடத்தையே சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருக்கிறாயே!

ரிக்ஷாக்காரன்:—ஓகோ! உள்ளூர்க்காரங்களா நீங்க! வெளியூர்க்காரராக்கும்னு நினைச்சு ஊரைச் சுத்திக் காண்பிக்கலாம்னு பார்த்தேன். சரி, இனிமே எங்கேயும் சுத்தாம நேரே போறேனுங்க!

★

குழந்தை கேட்டது!

தாயார்:—குழந்தையை அழவிடாதே, ராமு! அது கேட்கிறதைக் கொடுத்து விடு!

ராமு:—கொடுத்து விட்டேன், அம்மா!

தாயார்:—பின் இன்னும் ஏன் அழுகிறது?

ராமு:—நான் கொடுத்த மிளகாயைக் கடித்து விட்டது!

★

புரியவில்லை!

அம்மாள்:—டாக்டர் ஸார், என் கணவர் தூங்கும்போது என்னவெல்லாமோ புரியாமல் பிதற்றுகிறார்......

டாக்டர்:—அதற்கு நான் என்ன செய்ய முடியும்?

அம்மாள்:—புரியும்படி பிதற்றுவதற்கு ஏதாவது மருந்து தர வேண்டும்!

சரிதான்!

மணி:—இன்னுமா அந்தக் கெட்டுப் போன காலணாவைத் தேடுகிறாய்?

சந்து:—இல்லை, இல்லை. காலணா அகப்பட்டு விட்டது. என் தம்பி அதைக் கண்டு பிடித்து விட்டான்.

மணி:—பின்னே நீ என்ன தேடுகிறாய்?

சந்து:—தம்பியைத்தான்!

★

வேண்டாம்!

கட்சிக்காரன்:—நான் ஒரு கேள்வி கேட்கப் போகிறேன். அதற்குப் பீஸ் கொடுக்க வேண்டுமா?

வக்கீல்:—நீங்கள் கேட்கும் கேள்விக்குப் பீஸ் கொடுக்க வேண்டாம்; பேஷாகக் கேட்கலாம். நான் சொல்லும் பதிலுக்குத் தான் பீஸ் கொடுக்க வேண்டும்!

★

அப்படியா?

நடுரோட்டில் ஒருவர் வண்டி மோதிக் கீழே விழுந்து விட்டார். அந்த வழியே போய்க்கொண்டிருந்த ஓர் ஆசாமி ஓடோடியும் வந்து அவரைத் தொட்டுப் பார்த்துக்



கொண்டே அருகிலிருந்த போலீஸ்காரரிடம், "நல்ல வேளை! எதிர்த்தாற்போல் டாக்டர் வீடு இருக்கிறது...!" என்றார்.

அடிபட்டவர் (வலியுடன்):—ஐயோ! அந்த டாக்டர் நான்தான்!

நேற்று வந்தவன்

துஷ்யந்தன்

அம்மா படுக்கையில் புரண்டு படுத்தாள். ஜுரத்தின் வேகமோ என்னமோ, நாக்கு வறட்சி கண்டிருந்தது. பார்வதியை மெதுவாகக் கூப்பிட்டாள்; பதில் இல்லை. கொஞ்சம் உரக்கக் கூப்பிட்டு, "பார்வதி, ஜலம் கொண்டு வா, அம்மா! ரொம்ப தாகமா யிருக்கு!" என்றாள். ஆனால் பார்வதி வரவேயில்லை. பாவம், ராத்திரி யெல்லாம் தூங்கவில்லை; ஒரு சமயம் தூங்குகிறாளோ என்னமோ என்று நினைத்துக்கொண்டே அம்மா மெல்ல எழுந்திருக்கப் பார்த்தாள்; முடியவில்லை. படுக்கையில் சாய்ந்தபடியே பக்கத்து ஜன்னல் வழியாக வெளியே எட்டிப் பார்த்தாள். அப்பொழுதுதான் அவளுக்கு விஷயம் புரிந்தது.

கீழே வீட்டு வாசலில் பார்வதி நின்று கொண்டிருந்தாள். அவள் ஆவலோடு அப்படி நின்று கொண் டிருப்பதைக் கண்டதும் அம்மாவுக்குச் சிரிப்புத்தான் வந்தது. அன்று பார்வதியின் கணவன் வருவதாக எழுதியிருந்தான்.

அம்மா அழைப்பதுகூடக் காதில் விழாமல் அத்தனை ஆர்வத்துடன் பார்வதி காத்திருந்தது அவளுக்குக் கொஞ்சம் வேடிக்கையாகத்தான் இருந்தது. பார்வதி ரொம்ப நல்ல பெண். அம்மாவிடம் அபார வாஞ்சையுடன் இருப்பாள். மற்ற பெண்களைப்போ லில்லாமல் இரவு பகலாகக் கண் விழித்து அம்மாவுக்கு உதவி செய்து கொண்டிருந்தாள். அப்படிப் பட்டவள் அம்மாவின் நினைவே இல்லாமல் வெளியே நிற்பது அவளுக்குச் சட்டென்று புரியாத ஒரு புதிராயிருந்தது.

சிறிது நேரங் கழித்துக் கீழே யாரோ பேசும் சத்தம் கேட்டது. சரிதான், மாப்பிள்ளை வந்து விட்டார் என்று அம்மா நினைத்துக் கொண்டாள். கணவனும் மனைவியுமாக உடனே தன்னைப் பார்க்க மாடிக்கு வருவார்கள் என்று அவள் யோசித்துக் கொண்டிருக்கும் போது கீழே பார்வதியின் குரல் கணீரென்று கேட்டது.

"என்ன, ரொம்ப நேரமா ரயில்லே உட்கார்ந்து வந்தது களைப்பா யில்லே? கொஞ்சம் அந்தச் சாய்வு நாற்காலியிலே சாயுங்கோ; ஒரு நிமிஷத்திலே காப்பி கொண்டு வரேன்!"

அம்மாவின் மனம் பொருமியது.

அவள் இப்படிப் பறந்திருக்கிறாள். அதைப் பற்றிக் கவலையே காணோம். என்னமோ ரயிலில் வந்து உடம்பு ரொம்ப அலுத்துப் போச்சாம்! என்ன உபசாரம்? காப்பி உடனே போடுகிறாளாம்! ஜுரத்தில் நாக்கு வறண்டுபோய் மேலே ஒட்டிக் கொள்கிறது. இதற்கு ஜலத்தைக் கொண்டு வரக் காணோம்...... பார்வதியா இப்படி யெல்லாம் செய்கிறாள்?

★

அம்மாவின் சிந்தனை சிறகடித்துப் பறந்தது. எத்தனையோ வருஷங்களுக்கு முன்னால் நடந்த சம்பவம் அது. அப்போது பார்வதிக்கு எட்டு வயதுதானிருக்கும். அவள் அக்காவுக்குக் கல்யாணமாகி அப்போதுதான் முதல் தரமாகப் புக்ககம் போகப் போகிறாள். அம்மாவுக்குத் தன் பெண்ணைப் பிரிவதில் வேதனையே ஓடவில்லை. பெண்ணுக்கும் தாயைப் பிரிந்து முதல் முதலாகப் போவதால் ஒரே ஏக்கம். இந்த நிலைமை ரொம்ப மோசமானது. தாயும் மகளும் நீர்மல்கிய கண்களுடன் பேச நா எழாமல் நின்று கொண்டிருந்தார்கள். இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த பார்வதி மெல்ல அம்மாவிடம் வந்து, "ஏன் அம்மா, அக்கா அழறா?" என்று கேட்டாள்.


பார்வதியின் இந்தக் கேள்வி அம்மாவின் சோகத்தை அதிகரித்தது.

"அக்கா ஊருக்குப் போகப் போகிறாள்!" என்றாள் அம்மா சுருக்கமாக.

பார்வதி விடவில்லை. "எதற்கு அம்மா அவள் போகணும்? இங்கேயே இருக்கப் படாதோ?" என்று கேட்டாள்.

இந்தக் கேள்வி அம்மாவின் நெஞ்சைக் கலக்கியது. "அவள் கல்யாணம் செய்து கொண்டாளே, புக்காத்துக்குப் போகத்தானே வேணும்!" என்றாள்.

"அவள் போகட்டும், அம்மா! நான்தான் இருக்கேனே, நீ ஏன் அழறே?" என்று தேறுதல் சொன்னாள் பார்வதி.



அம்மா சற்று நேரம் பேசாமலிருந்தாள். பிறகு, "நீயும்தான் கல்யாணமானதும் இப்படிப் போய்விடுவே! பெண்களே இப்படித்தானே?" என்றாள்.

"இல்லை, அம்மா! நான் கல்யாணமே பண்ணிக் கொள்ள மாட்டேன். உன்னோடேயே இருந்துவிடுவேன். நீ அழாதே, அம்மா!" என்றாள் பார்வதி.

அம்மாவுக்கு அப்போது சிரிப்பு வந்தது; சிரித்து விட்டாள்.

★

இந்தச் சம்பவத்தை நினைத்தபோது இப்போதும் அவளுக்குச் சிரிப்புத்தான் வந்தது. அதே பார்வதிதான் இன்று இதோ கணவனோடு கொஞ்சுகிறாள்! அவன் சிரிப்பது அதோ கேட்கிறதே!

பார்வதி தன் கணவனிடம் கேள்வி மேல் கேள்வி போட்டுக் கொண்டிருந்தாள்.

"ஆமாம், உடம்பு ஏன் இப்படித் துரும்பாய் இளைச்சுக் கிடக்கு? நீங்கள் சரியாகவே சாப்பிடுவதில்லையா?"

இது தெளிவாகக் கேட்டது மாடியிலிருந்த அம்மாவுக்கு. அவளால் இந்த அன்பின் முழுக் கருத்தையும் உணர முடியவில்லை. தன் மகள்—தனக்கே உரியவளாயிருந்த அந்தப் பெண்—இப்படித் தன்னை முழுதும் மறந்து யாருடனோ அவ்வளவு நெருக்கமாகப் பழகுவது அவளுக்கு விளங்காத ரகசியமாயிருந்தது.

உண்மையில் கல்யாணத்திற்கு முன்பு அந்த மனுஷனை அவள் பார்த்தது கூடக் கிடையாது. எங்கேயோ இருந்தவன். அம்மாவின் வார்த்தைகளில் சொல்லப் போனால் 'நேற்று வந்தவன்'—ஆமாம், அவன் அதற்குமுன் இவர்களிடமெல்லாம் பழகியிருக்கிறானா? இல்லை, பார்வதிதான் அவனைக் கல்யாணத்திற்குமுன் கனவில் கூடக் கண்டிருப்பாளா? இல்லை. அப்படிப்பட்டவனிடம்தான் தாயைக்கூட மறந்து அந்த மகள் இப்படிப் பரிவும், ஆசையும் கலந்து பொங்கப் பேசுகிறாள். — ஏன்?

இந்த "ஏன்?" என்ற கேள்வியில் அவள் ஆழ்ந்திருந்தபோது மறுபடியும் கீழேயிருந்து குரல் கேட்டது. பார்வதிதான் பேசிக் கொண்டிருந்தாள்.

"நீங்கள் இப்படி உடம்பைப் பார்த்துக்கொள்ளாமல் இருந்தால் யாருக்குப் பின்னால் கஷ்டம்? நான் அங்கே இல்லாதது ரொம்பத் தப்பு. நான் வந்து விடலாம் என்றுதான் பார்க்கிறேன். ஆனால் அம்மாவுக்கு......"

அதற்குமேல் அவன் பேசியது அம்மாவின் காதில் விழவில்லை. ஆனால் தன் மனம் குமுறுவது அவள் காதில் விழுந்தது.

என்னை இப்படியே விட்டு விட்டுப் போய்விடலாம் என்று நினைக்கிறளாம்! அம்மம்மா! இந்தப் பெண்களுக்குத்தான் என்ன கல் நெஞ்சமடா? எத்தனை கஷ்டப் பட்டு, எவ்வளவு நாட்கள் கண் விழித்து இவளைப் பெற்றேன்? காலமெல்லாம் வளர்த்து ஆசையோடு பாராட்டிச் சீராட்டி விட்டதற்கு இதுதானா நன்றி?

பார்க்கப் போனால் அவளை மனைவியாக்கி, அவளுடைய வாழ்க்கையை உருவாக்கி வைத்தவளே அந்தத் தாய்தான். இருந்தாலும் அவர்கள் வாழ்க்கையில் நேற்று வந்த அந்த மனிதனிடம்தான் பெண்ணின் மனம் ஓடப் பார்க்கிறது இது விந்தையிலும் விந்தையல்லவா?

ஆயாசத்துடன் அம்மா மறுபடியும் படுக்கையில் புரண்டாள். அவள் உடல் வெந்து மனம் நொந்தது.

★

சிறிது நேரத்துக்கெல்லாம் மாடிப் படிக்கட்டில் அவர்கள் ஏறி வரும் சத்தம் கேட்டது. அம்மா மெதுவாகக் கண்ணை மூடிக் கொண்டாள், தூங்குகிறவள் போல. அவர்கள் என்னதான் செய்கிறார்கள் என்று பார்க்க ஆசையாயிருந்ததுதான் அதற்குக் காரணம். இதோ, அவர்கள் அறைக்குள் நுழையும் சத்தம் கேட்கிறது. அவன்தான் பேசுகிறான்:

"என்ன, பார்வதி! அம்மாவின் நிலை இத்தனை மோசமாயிருக்கிறதென்று நீ எழுதவேயில்லையே? பாவம். அப்படியே படுக்கையோடு ஒட்டிண்டு கிடக்கிறாளே! எந்த டாக்டர் வந்து பார்க்கிறார்? உடம்பைக் கவனித்துப் பார்க்கவேண்டும். நல்ல தூக்கம் போலிருக்கு. தூக்கம் ரொம்ப நல்லதுதான். சத்தம் போட்டு இப்போது அவளை எழுப்ப வேண்டாம். நோயாளிகளின் தூக்கத்தைக் கெடுக்கவே கூடாது......"

இன்னும் ஏதேதோ அவன் சொல்லிக் கொண்டே போயிருப்பான். அதற்குள் அம்மா விழித்துக்கொண்டாள். அதற்கு மேல் அவளுக்குத் தாங்கவில்லை. அவன் வார்த்தைகள் அவளுடைய நெஞ்சைச் சுட்டன.

அவன் நேற்று வந்தவன்தான். இருந்தாலும் நம்முடைய சுகத்தில் அவன் எவ்வளவு கவலைப்படுகிறான்! நம் வாழ்க்கையின் நடுவில் இப்போது நுழைந்த அவனிடம்தான் எத்தனை அன்பு இருக்கிறது! இவ்வளவு நல்ல பிள்ளையிடமா இத்தனை மகரம் நாம் அலுத்துக் கொண்டோம்?

அவளுக்கே இது அவமானமாக இருந்தது. அவன் புதியவன்தான்; ஆனால் இப்போது அவர்களுடைய வாழ்க்கையில் அவன் ஒன்றிவிட்டான். இனிமேல் அவர்களுடைய குடும்பத்தில் அவன் ஓர் உறுப்பு; அவர்கள் இன்ப துன்பங்களில் அவனுக்கு உண்டு பொறுப்பு. மகள் இதை முன்பே புரிந்து கொண்டிருக்க வேண்டும். தாய் இப்போதுதான் புரிந்து கொண்டாள்! அவள் கண்களில் மட மட வென்று கண்ணீர் பெருகியது. தாய்மை அவளை மேற்கொண்டது.

'வாங்கோ, மாப்பிள்ளை! உட்காரச் சொல், பார்வதி! அப்படியே நிற்கிறாரே!" என்று அங்கலாய்த்தாள்.

அதற்குள் பார்வதி, "ஏன் அம்மா, நீ கஞ்சி சாப்பிட்டு ரொம்ப நாழியாச்சே!



கிராப் வெட்டிக் கொள்பவர் :— ஜோராகப் பாடிக்கொண்டே கிராப் வெட்டுகிறாயே. நீ பெரிய சங்கீத ரஸிகன்போல் இருக்கிறது!

ஸெலூன்காரர் :— ஆமாங்க, ஸார்! நாம சங்கீத வித்வான் செம்மங்குடி என்னிடம்தான் வழக்கமாகக் கிராப் வெட்டிக் கொள்ளுவார்.

வந்தவர் :— என்ன அப்பா, உளறுகிறாய்? அவர் குடுமி அல்லவா வைத்துக் கொண்டிருக்கிறார்?

ஸெலூன்காரர் :— ஓகோ! அரியக்குடி என்பதற்குப் பதில் செம்மங்குடி என்று தவறுதலாகச் சொல்லி விட்டேன், ஸார்!

"போட்டுக் கொண்டு வரட்டுமா? இப்போது உடம்பு எப்படி யிருக்கு?" என்று வாஞ்சையோடு விசாரித்தான்.

அம்மா அதற்குச் சிரித்துக் கொண்டே, "போடி, 'பைத்தியம்! அவர் வந்திருக்கிறார். அவருக்கு ஒன்றும் காப்பி, கீப்பி கொடுக்காமல் என்னை விசாரிக்கிறாயே! முதலில் அவருக்கு ஏதேனும் கொடுடீ!" என்றான்.

★

சற்று நேரத்திற்கு முன் பார்வதி தன் கணவனைக் காப்பி வேண்டுமா என்று கேட்டபோது அவளுக்கு என்னவோ போலிருந்தது; அது பெரிய தவறாகவும் பட்டது. ஆனால் இப்போது அவனே பார்வதிக்கு இந்தக் கட்டளை யிடுகிறான். அதற்குள் தனக்கிருந்த தாகமெல்லாம் பறந்தோடி விட்டது. மாப்பிள்ளையின் நினைவுதான் முதலில் நிற்கிறது. அவன் நேற்று வந்தவன் தான். இருந்தாலும்......

"ஏன் மாப்பிள்ளை! உடம்பு ஏன் இப்படி இளைக்கப் போச்சு? அவள் ஊரிலே இல்லாமல் ரொம்பக் கஷ்டமா யிருக்கோ!"

உண்மையான பரிவோடு அம்மா இதைச் சொன்னாள். சொல்லிவிட்டுச் சிரித்துக் கொண்டாள்.

கொஞ்ச நேரத்துக்கு முன்பு பார்வதி இதே வார்த்தைகளைக் கணவனிடம் சொன்னபோது அம்மாவுக்கு ஆத்திரமா யிருந்தது. இப்போது அவன் புரிந்து கொண்டுவிட்டான். அவன் நேற்று வந்தவன்தான். இருந்தாலும் அவனுடைய சுக துக்கம் அவர்களையும் சேர்ந்தது. அவன் அவர்களில் ஒருவன்!

அம்மா மறுபடியும் பார்வதிக்குக் கட்டளையிட்டாள்.


"அசடு மாதிரி நிற்கிறாயே! போடி, வெந்நீர் போட்டுக் கொடுத்து ஸ்நானம் பண்ணச் சொல்லு! சாப்பாடு சுருக்கப் போடுடீ, அவருக்கு!"

பார்வதி சிரித்துக்கொண்டே ஓடி போனாள். அவனும் அம்மாவிடம் "இதோ வருகிறேன், மாமி! நீங்கள் உடம்பை நன்றாய்ப் பார்த்துக் கொள்ளுங்கள். நாளைக்குப் பார்வதிக்கு நீங்கள்தானே கூட இருந்து......" என்று இழுத்தான்.

இதைக் கேட்டதும் அம்மாவுக்கு அப்போதே எல்லா நோயும் பறந்துவிட்டது. அவன் கலகலவென்று சிரித்தான்.

நாளைக்குப் பிறக்கப்போகும் பார்வதியின் குழந்தையைப் பற்றிய நினைவில் அவன் ஆழ்ந்திருந்தபோது 'நேற்று வந்தவன்' மெதுவாக நழுவி விட்டான்.

அவர் கவலை!



நமது இலங்கைக் கடிதம்

வெள்ளையரை நியமிக்கும் விந்தை

ரஜனி

கொழும்பு, ஆகஸ்ட், 4

இலங்கையிலுள்ள இந்திய ஹை கமிஷனர் ஸ்ரீ வி. வி. கிரியின் காரியாலயம் மிகப் பெரிய தோரணையில் விஸ்தரிக்கப்பட விருக்கின்றது. இந்தியர், பாகிஸ்தானிகள் பிரஜா உரிமைச் சட்டம் ஆகஸ்ட் ஐந்தாம் தேதியிலும், இலங்கை அரசாங்கத்தின் குடியேற்ற வெளியேற்றச் சட்டம் அக்டோபர் முதல் தேதியிலும் அமுலுக்கு வரும் என்று அறிவிக்கப் பட்டிருக்கிறது. எனவே, அதை யொட்டி ஹை கமிஷனர் காரியாலயமும் சில விசேஷ ஏற்பாடுகளை அவசரமாகச் செய்ய வேண்டி யிருக்கின்றது. இவைகளைப் பற்றி இந்திய சர்க்காருடன் கலந்து பேசுவதற்காக டில்லிக்குச் சென்றிருந்த ஸ்ரீ கிரியின் காரியதரிசி ஸ்ரீ. என். வி. எஸ். ராகவாச்சாரி இப்போது கொழும்புக்குத் திரும்பி வந்து விட்டார்.

குடியேற்ற வெளியேற்றச் சட்டம் அமுலுக்கு வந்தபின் பாஸ்போர்ட் இல்லாமல் இலங்கையில் யாரும் பிரவேசிக்க முடியாது. அதே போல இந்திய ஹை கமிஷனர் காரியாலயத்தினால் வழங்கப்படும் பாஸ்போர்ட் இல்லாமல் இந்தியாவிலும் இலங்கையிலிருந்து யாரும் வந்து இறங்கக் கூடாதென இந்திய பாஸ்போர்ட் சட்டம் திருத்தப்படும் என்று ஸ்ரீ ராகவாச்சாரி கூறினார். சாதாரணமாக பாஸ்போர்டுகளின் கிரயம் ரூபாய் பத்து. இலங்கை அரசாங்கமும் இதே கட்டணம்தான் வசூலிக்கிறது. இலங்கை இந்தியர்களின் ஏழ்மையான நிலைமையை அவர் எடுத்துச் சொல்லியதற் கிணங்க இந்தோ—சிலோன் பாஸுக்கு ரூபாய் மூன்று கட்டணம் வசூலிப்பதென்று இந்திய அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது. இதற்காக ஒரு பாஸ்போர்ட் அதிகாரி டில்லியிலிருந்து வருவார். எனவே,* பல குமாஸ்தாக்களை நியமித்துக் காரியாலயத்தை விஸ்தரிக்கும் அவசியம் இப்போது ஏற்பட்டிருக்கிறது.

தகாத காரியம்

ஜிப்ரால்டரிலிருந்து ஒரு வெள்ளையரைத் தருவித்து இலங்கையின் கல்வி இலாகா டைரக்டராக நியமிக்க இலங்கை அரசாங்கம் தீர்மானித்திருப்பது ஒரு தகாத காரியம் என்று கருதப் படுகின்றது. இரண்டு வருடங்களுக்கு முன் ஆடிட்டர் ஜெனரலாயிருந்த ஸர் ஆலிவர் குணதிலகா பொக்கிஷக் காரியதரிசியாக நியமிக்கப் பட்டார். அவருக்கு அடுத்தபடியாக உதவி ஆடிட்டர் ஜெனரலாயிருந்த ஸ்ரீ கே. கனகரத்தினத்தை, அவர் தமிழர் என்ற காரணத்தையும் வேறு அரசியல் காரணங்களையும் உத்தேசித்து ஆடிட்டர் ஜெனரலாக நியமிக்க சேனநாயகா அரசாங்கம் விரும்பவில்லை. இதற்காகச் சீமையிலிருந்து ஒரு வெள்ளையரைத் தருவித்து அந்தப் பதவியில் நியமித்தனர். எனவே ஸ்ரீ கனகரத்தினம் மனம் பொறுக்காமல் உதவி ஆடிட்டர் ஜெனரல் பதவியை உதறித் தள்ளினார்.

பிறகு, கல்வி இலாகா டைரக்டர் பதவி காலியாகியது. டாக்டர் அருள் நந்தி என்ற தமிழ்ப் பிரமுகர் அப்பதவியை இப்பொழுது தாற்காலிகமாகச் சிறப்பாய் வகித்து வருகிறார். அவரையே அப்பதவியில் ஸ்திரம் செய்யக் கூடாதென்பதற்கு நியாயமான காரணம் காட்டப்படவில்லை. ஆனால், ஜிப்ரால்டரிலிருக்கும் டாக்டர் ஹோவின் என்ற ஒரு வெள்ளையரைக் கல்வி டைரக்டராக அரசாங்கம் நியமித்துள்ளது!

பார்லிமெண்டில் எதிரொலி

கல்வி-டைரக்டர் பதவிக்கு ஒரு வெள்ளையரை நியமிப்பது பெரிய அபாயமென்றும் மேற்படி ஆபத்தைப்பற்றிச் சபை விவாதிக்க வேண்டுமென்றும் மாஜி மந்திரி ஸ்ரீ வி. சுந்தரலிங்கம் ஒரு அவசரத் தீர்மானத்தைக் கொண்டு வந்தார். அந்தத் தீர்மானத்தைப் பிரதம மந்திரி சேனநாயகா பலமாக எதிர்த்ததும், இரவில் மற்றெல்லா வேலைகளும் முடிந்தபின் சாவகாசமாக அதைப்பற்றி விவாதிப்பதென்று சபை முடிவு செய்தது. இராப் போஜனத்துக்குப் பின் சபை மறுபடியும் கூடியபொழுது கல்வி டைரக்டர் பதவிக்கு ஏற்கெனவே ஒருவர் நியமிக்கப்பட்டுவிட்ட படியால் இனி அதைப்பற்றி விவாதிப்பது முறையல்ல என்ற ஆட்சேபனை சர்க்கார்

கட்சியிலிருந்து வந்தது. இதற்கு ஸ்ரீ சுந்தரலிங்கம், "டாக்டர் ஹோலிஸ் ஜிட்ரால்டரில் அவருடைய பழைய உத்தியோகத்தை இன்னும் ராஜீனுமாச் செய்யவில்லை. ஆகையால் இலங்கை மக்களின் எதிர்ப்பைத் தெரிந்து கொண்டால் அவரே இலங்கை உத்தியோகத்தை எற்கக் கண்ணியமாக மறுத்துவிடுவார்" என்று கூறினார். அந்த நியமனத்துக்குப் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் பொறுப்பாளியான சால் அதில் மந்திரிக்குச் சம்பந்தம் இல்லையென்றும், ஆகையால் அது அவசரமாக விவாதிக்கப்பட வேண்டிய விஷயம் அல்லவென்றும் சொல்லிச் சபாநாயகர் தீர்மானத்தை நிராகரித்து விட்டார்.

சுதந்திர இலங்கையில் தேசிய பாஷைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப் போவதாயும் தாய்மொழியிலேயே கல்வி போதிக்கப் போவதாயும் சொல்லும் இலங்கை அரசாங்கம் கல்வி இலாகா தலைவர் பதவிக்கு வெகு தொலைவிலுள்ள ஒரு வெள்ளையரை நியமிப்பது விந்தையல்லவா?

ஸ்ரீ ராம் கோபால் கோஷ்டிக்குத் தடை

பிரசித்தி பெற்ற இந்திய நடன விற்பன்னரான ஸ்ரீ ராம் கோபால் தமது நடன கோஷ்டியுடன் இலங்கைக்கு விஜயம் செய்திருக்கிறார். இலங்கைக்கு வரும் போது அவருடைய கோஷ்டியாரை மண்டபம் காம்பிலுள்ள இந்திய இமிகிரேஷன் அதிகாரிகள் ரொம்பவும் கஷ்டப்படுத்தி விட்டார்களாம். தம்முடைய துக்ககரமான அனுபவங்களைப் பற்றி அவர் கூறியதாவது:-

"நாங்கள் மண்டபத்துக்கு வந்தபொழுது இந்திய இமிகிரேஷன் ஆபீசர் அங்கில்லை. அவருக்கு அடுத்த உத்தியோகஸ்தர்தான் இருந்தார். என்னையும் என் காரியதரிசியையும் மட்டுமே இலங்கைக்குப் போக அனுமதிக்க முடியுமென்றும் மற்றவர்களை அனுமதிக்க முடியாதென்றும் அவர் கண்டிப்பாகச் சொல்லி விட்டார். நான் எவ்வளவு வாதாடிப் பார்த்தும் பயன்படவில்லை. என் கோஷ்டியைச் சேர்ந்த இருபத்திரண்டு பேர் தடை செய்யப்பட்டு நான் மட்டும் கொழும்புக்கு வந்தேன். இங்குள்ள இந்திய ஹைகமிஷனர் ஸ்ரீ வி. வி. கிரி அவசரத் தந்தி கொடுத்ததின் பேரில் தடை செய்யப்பட்டவர்களில் இருபத்தொரு பேர் இலங்கைக்கு வர அனுமதிக்கப் பட்டார்கள். உடையலங்காரம் செய்யும் ஒரு பிரஞ்சு மாதை அனுமதிக்க மண்டபம் அதிகாரிகள் கடைசி வரை இணங்கவில்லை."

புலவர் விஜயம்

தாபன்

விருந்தினர்களை இரு வகைகளாகப் பிரிக்கலாம். நாம் எவ்வளவோ வேண்டி யழைத்தும் வராமலிருப்பவர்கள், ஒன்று. நாம் எவ்வளவோ முயற்சி செய்தும் நம் வீட்டை விட்டு நகராத வகையைச் சேர்ந்தவர்கள், இரண்டு. இந்த இரண்டாவது வகையைச் சேர்ந்தவர்கள்தான் போஸ்ட் மாஸ்டர் பொன்னுசாமியின் வீட்டுக்கு வருபவர்கள்.

பொன்னுசாமிக்கு ஐந்து குழந்தைகள். அவர்களில் முறையே கனகம், தங்கலக்ஷ்மி, சொர்ணமணி, பாக்கிய லக்ஷ்மி ஆகிய முதல் நான்கும் பெண் குழந்தைகள். ஐந்தாவது ஆண் குழந்தை; பெயர் செல்வத் துரை. பொன்னுசாமியின் வீட்டில் இருந்த அனைவரது பெயரில்தான் செல்வம் கொழித்ததே தவிர, பாவம், தரித்திரம்தான் அவர்களைப் பிடுங்கித் தின்றது. அவருடைய மனைவியின் பெயர் விஜயலக்ஷ்மியானாலும் கைகளில் கண்ணாடி வளையல்கள்தான் கிலுகிலுத்தன. பாவம், ஓய்வு ஒழிவற்ற 'குழந்தைச் சன்னை'யினால் எலும்பும் தோலுமாய் வற்றி உலர்ந்து போயிருந்தாள்.

நல்ல நாளிலேயே—அதாவது, விருந்தினர் இல்லாமலும், குழந்தைகளுக்கு நோய் நொடி வராமலும், ஆபீசுக்கு இன்ஸ்பெக்டர், சூப்பிரண்டு என்று திடும் திடும் என்று பிரவேசிக்காமலும் உள்ள நாட்களிலேயே சாதத்தை வடித்து எதாவது ஒரு குழம்பைக் காய்ச்சிச் சாப்பாடு பண்ணுவதற்குள் அவள் படாத பாடு படுவாள். இந்த அழகில் நாள் தவறாமல் விருந்தினர் வரத் தொடங்கி விட்டால்—பாவம், அவள் என்ன செய்வாள்?

வீட்டிலே விருந்து வந்துவிட்டால் ஆபீசில் பொன்னுசாமியின் படபடப்பும் கோபமும் அதிகமாயிருக்கும். சுடுசுடுவென்று சீறுவார். ஆயினும் இந்தக் கோபதாபங்களை விருந்தினர் லக்ஷியம் செய்தால்தானே!

★

ஒருநாள் இரவு பத்து மணி இருக்கும். ஒருவாரமாக விருந்தாடிக் கொண்டிருந்த ஒருவரை அரும்பாடுபட்டு ரயிலுக்கு அனுப்பி விட்டுப் பொன்னுசாமி நிம்மதியாக ஈஸிச் சேரில் சாய்ந்து ஒரு 'வால்யூம்' படிக்கத் தொடங்கினார். மனைவியின் முணுமுணுப்பும் குழந்தைகளின் காச்சுப் பூச்சுச் சத்தமும் கடைசிக் குழந்தையின் இடைவிடா அலறலும் சேர்ந்து அவரது 'வால்யூம்' படிப்புக்குச் சுருதி கூட்டின. இந்தக் குடும்பத் தொல்லையினூடே என்ன படிப்பு வேண்டிக் கிடக்கிறதென்று நினைக்கிறீர்கள்? பொன்னுசாமி தம் இலாக்காவில் பற்பல பரீக்ஷைகளுக்குப் படித்துப் பாஸ் செய்து படிப்படியாக மேலே போக வேண்டுமென்ற நோக்கமுடையவர். அவருடைய நோக்கமும் விடா முயற்சியும் குடும்ப விருத்தியில்தான் உடனடியான பலனை அளித்தனவேயன்றி, ஊதியத்திலும் உத்தியோக உயர்விலும் பலிக்கவேயில்லை.

இந்தச் சமயத்தில் ஆபீஸ் வாட்ச்மேன் கறுப்பையா கதவைத் தடால் தடால் என்று தட்டி, "ஐயா! ஐயா!" என்று கதறினான்.



ஆபீசும், ஆபீஸை ஒட்டியே வீடுமாக அமைந்து விட்டதால் இது ஒரு பெரிய சங்கடம். இரவு நேரங்களில் அவசரத் தந்தி கொடுக்க யாராவது வந்தால் கறுப்பையா கதவைத் தட்டி அவரை அழைப்பது வழக்கம். மேலும் அந்த நேரத்தில் அவசரத் தந்தி வந்தால் பொன்னுசாமிக்கு ஒரு முழு ரூபாய் நிச்சயமாக உண்டு. ஆகவே அவர் உற்சாகத்துடன் எழுந்து வந்து கதவைத் திறந்தார்.

ஆனால் வாசலில் தந்தி கொடுக்க யாரும் வந்து நிற்கவில்லை. பையும் கையுமாய்க் குடையும் குடுமியுமாக, ருத்திராக்ஷத்துடன் ஒய்யார வல்லவாட்டும் பட்டைத் தாருமாக ஒரு பெரிய உருவம் எதிரே வந்து, "என்ன போஸ்மாஸ்டர்வாள்! ஹி ஹி ஹி! சரியான ஆசாமி ஐயா, நீங்கள்! 'கருமேதன்' என்று பகட்டாகப் பகன்று விட்டு அண்மையில் நெல்லைக்கு வந்த அமயம் என் இல்லம் வரத் தவிர்த்துவிட்டீர்களன்றோ? நன்று நன்று!......ஹா ஹா ஹா...!" என்று சிரித்துக் கொண்டே ஆபீஸினுள் நுழைந்தார்.

பொன்னுசாமி ஆசாமியை அடையாளம் கண்டு கொண்டார்—அதாவது, வந்திருப்பவர் சாற்றுக் கவி முத்துசாமிக் கவிராயர் என்று! முத்துசாமி ஓதுவார் என்ற பெயருடன் அவர் பள்ளிக்கூட ஆசிரியராயிருந்தவர். சம்பளப்பட்டியில் கள்ளக் கையொப்பமிட்டதன் காரணமாக வேலையினின்றும் துறவு பூண்ட பின்னர், அலங்காரமாகத் தாமே தமக்கு முன்னும் பின்னும் சூட்டிக் கொண்ட பட்டங்கள் சாற்றுக் கவி—கவிராயர் என்பவை. தொடிக்கு நூறு, நாழிகைக்கு நாலாயிரம் என்று கவிதைகளைப் புனையக்கூடிய கவிஞர் திருக்கூட்டத்தைச் சேர்ந்தவர் இந்த ஆசாமி.



"ஐயையோ, இதேதடா சனியன்! வழியிலே கண்டாலே இலேசில் விடாதே! வீட்டுக்குள் வந்தது லேசிலா போகும்!" என்று எண்ணிப் பயந்து கொண்டே ஒன்றும் தோன்றாமல் நின்றார் பொன்னுசாமி.

"வெகு சமர்த்தர் ஐயா, நீங்கள்! என்னைத் தள்ளி வைப்பினும் நான் உங்களையும் உங்கள் வாழ்க்கைத் துணை நலத்தையும் பார்க்காமலிருக்க முடியுமா?—எங்கே, அம்மணி......?" என்று கேட்டவாறே பொன்னுசாமியை முந்திக் கொண்டு உள்ளே நுழைந்தார் புலவர்.

ஆழம் காணாத ஜலத்தில் நீச்சல் தெரியாதவன் மூழ்கித் தத்தளிப்பது போல நின்றாள் விஜயலக்ஷ்மி.

"அம்மணி, சௌக்கியமாயிருக்கிறாயா? உன்னைத் தேடித் தேடி உன்னுடைய நினைவாகவே இருக்கிறேனே, உன் ஆச்சி! நீ ஒரு முறை அங்கு வந்தால் என்னடியம்மா, தங்கம்?" என்று ஆரம்பித்து, "இப்போது எனக்காக விசேஷமாய் ஒன்றுமே சமைக்க வேண்டாம். மத்தியானம் பால் பாயசத்துடன் விருந்து சாப்பிட்டுவிட்டு வந்திருக்கிறேன்......" என்றார் புலவர்.

அதற்குமேல் சமையல் செய்து புலவருக்குச் சாப்பாடு செய்விக்கப்பட்டது. சாப்பாட்டுக்குப் பின் கவிராயரின் தொண தொணப்பு எதிர்பார்த்ததைவிட அதிகமாயிற்று. கவலையுடன் தம் படுக்கையைச் சுருட்டிக் கொண்டு வராந்தாவிற்குச் சென்று புலவருடன் படுத்துக் கொண்டார் பொன்னுசாமி.

★

அன்றிரவு சிவராத்திரிதான். கவிராயர் தாம் இயற்றியுள்ள 'கலிகாலக் கோவை' என்னும் காவியத்தைப் புத்தக வடிவில் அச்சிடுவதற்குப் பொருளுதவி தேட வந்திருப்பதாகவும், பொன்னுசாமி தமது

'பஸ்' பழக்கம்!



அம்மாமி:—இது என்ன! அதிசயமாயிருக்கிறது! மதராஸுக்குப் போய் வந்தது முதல் எந்தப் பொம்மனாட்டி வந்தாலும் எழுந்து நாதாங்கியைப் பிடித்துக்கொண்டு நிற்கிறீர்களே!

சாமர்த்தியத்தாலும், செல்வாக்காலும் எவ்வளவோ உதவ முடியுமென்று தாம் நம்புவதாகவும் சொல்லி முடித்தார்.

மறுநாள் விடிந்தது. பொன்னுசாமி எழுந்திருப்பதற்கு முன் கவிராயர் ஸ்நானத்தை முடித்துவிட்டுப் பூஜையில் ஆழ்ந்திருந்தார்.

மன வேதனையுடன் வேலைகளைக் கவனித்துக் கொண்டிருந்த விஜயத்தினிடம், "அம்மா, முதலில் சுடச்சுட ஒரு டம்ளர் காப்பி கொடு. நான் பூஜையை முடித்துவிட்டு மெதுவாகச் சாப்பிடுகிறேன்!" என்றார்.

நாட்கள் ஐந்து கழிந்தன. கவிராயர் நகர்ந்தபாடில்லை.

பொன்னுசாமி பலமாக யோசனை செய்த பிறகு, "கவிராயர்வாள்! வீட்டிலே என் மனைவிக்கு அசௌக்கியம். அவளைப் பிறந்தகத்துக்கு அனுப்பிவிட்டு நான் ஒரு மாதம் ஓட்டலில் சாப்பிடலாமென்று இருக்கிறேன். ஆகவே தாங்கள் தயவு செய்து..." ஆரம்பித்தார்.

"அடடாடடா! அதற்கென்ன, அம்மாளின் உடல் நலம்தான் மிக முக்கியம். அவர்களுக்குத் தகுந்த சிகிச்சை செய்யவேண்டியதும் மிக மிக அவசியம். அதோடு ஊரில் எனக்கு ஒரு முக்கிய ஜோலி உளது. நான் வருகிறேன்" என்று தம் மூட்டை முடிச்சுகளைக் கட்டிக் கொண்டு அடுத்த ரயிலுக்கே புறப்பட்டு விட்டார் புலவர்!

★

மறுநாள் சாவகாசமாக 'வால்யூ'மைத் தூக்கிக் கொண்டு ஈஸிச்சேரில் சாய்ந்தபடியே, "விஜயம்! என் யோசனை எப்படி? இந்த யோசனை முதல் நாளே தோன்றியிருந்தால் இந்த விருந்தாளியை அன்றே விரட்டியிருக்கலாமே!" என்று சொல்லிச் சிரித்தார் பொன்னுசாமி.

"இவரை மாத்திரமென்ன, எந்த விருந்தாளியையும் ஓட்டிவிடலாம். வரட்டும், நான் பாட்டுக்குக் காய்ச்சல், வயிற்று வலி என்று படுக்கையில் படுத்துக் கொண்டு, 'ஐயோ, அப்பா!' என்று முனுமுனுக்கிறேன். அவர்களும் ஓடிவிடுவார்கள்!" என்றாள் விஜயலக்ஷ்மி.

வெற்றி மகிழ்ச்சியில் ஆபீசுக்குச் சென்றார் போஸ்ட் மாஸ்டர் பொன்னுசாமி. அன்றையத் தபாலில் தமக்கு வந்த ஒரு கடிதத்தைப் பார்த்ததும் அவர் வீட்டினுள் வந்து, "விஜயம், இந்தக் கடிதத்தைப் பார்த்தாயா?" என்றார்.

"தபால் அலுவலகத் தலைமையாளர், பேரன்பு மிக்க பேரப்பிள்ளை பொன்னுசாமிக்கு, சாற்றுக்கவி முத்துசாமிக் கவிராயர் ஆசி பல்லாயிரம் கூறி எழுதும் குறிப்பு.

"அவ்விடம் தங்கள் வாழ்க்கைத் துணை நலமாம் விஜய இலக்குமிக்கு உடல் நலக்குறை என்றதும் என் மனை நல்லாள் பெரிதும் கலங்குகின்றாள். 'உடுக்கை இழந்தவன் கை போலே, ஆங்கே இடுக்கண் களைவதாம் நட்பு' என்றாங்கு தங்கள் பாரியையின் உதவிக்கும் சிசுருஷைக்கும் சகாயமாயிருக்கும் பொருட்டு நாங்கள் இருவரும் இன்றைய மாலை இரயிலில் அவண் புறப்பட்டு வருகிறோம். வீணாக விஜயத்தைப் பிறந்தகத்துக்கு அனுப்ப வேண்டாம். புகை வண்டி நிலயத்துக்கு ஒரு வில் வண்டியுடன் ஆள் அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறேன். மற்றவை நேரில்......

அன்புள்ள,

"சாற்றுக் கவிராயர்."

கடிதத்தைப் படித்ததும் விஜயத்தின் தலை சுழன்றது. 'இதற்கு உபாயம் எந்த 'வால்யூ'மிலிருக்கிறது?' என்று தேடுவது போல் மிரள மிரள விழித்தார் போஸ்ட் மாஸ்டர் பொன்னுசாமி.


அழகும்-
ஆரோக்யமும்
பண்டிட் டி.கோபாலாச்சார்லுவின்
அருணா
கர்ப்பாசயரோக நிவாரணி
Golden Jubilee
1898 - 1948
அழகுக்கு அவசியம்
ஆரோக்யம். ஆரோக்ய
மும் சௌந்தர்யமும் பெண்
ணினத்தின் பிறப்புரிமை.
அருணா கர்ப்பாசய ரோகங்
களை நிவர்த்திசெய்து
தேகாரோக்யத்தை
யும் சௌந்தர்யத்தை
யும் அளிக்கவல்லது.
ஆயுர்வேதாஸ்ரமம் லிட்
(ஸ்தாபிதம் 1898)
மதராஸ் 17


கடவுளின்
கோவிலுக்கான
பரிசுத்தம்
Sandal
தெய்வீகத்திற்குப் பரிசுத்தம் இன்றியமையாதது
கோத்ரெஜ் ஸாண்டலில் நன்மை பயக்கக்கூடிய
கலப்படமற்ற தாவர எண்ணெய் சத்துக்களையே
சேர்த்து உபயோகப்படுத்தப் பட்டிருக்கிறது.
வெறுக்கத் தகுந்த மிருகக் கொழுப்புகள் யாதும்
அவைகளில் கிடையாது. சுயமான மைசூர்
சந்தனத் தைலம் ஏதேஷ்டமாய்க் கலக்கப்பட்ட
கோத்ரெஜ் சந்தன சோப்பானது, இன்பமான
குளிர்மை, இதம், கமழும் மணம் இவைகளையுடைய
நுரையை யளிக்கும்.
கோத்ரெஜ் விம்டா — இருமி
களைக் கொல்லவும் சௌந்த
மளிக்கவும் வல்ல வேப்பின்
குணங்களையுடைய ஸோப்.
Godrej Sandal
கோத்ரெஜ் ஸாண்டல்
ஸ்டாண்டர்டு (சந்தன)
டாய்லெட் (ஸ்நான) ஸோப்
இத்தகக் குறைந்த விலையில் சிறந்த
சந்தன சோப் வேறு எந்த சந்தன
சோப் தயாரிப்பிலும் கிடையாது.
கோத்ரெஜ் சோப்ஸ், லிமிடெட்,
மதராஸ்: 164, பிராட்வே; கோச்சின்: 6/36, கல்வாத்தி

பரிசு கிடைத்தது

கிட்டு

★ ○ ★ ★ ○ ★

ராமு ஓர் ஏழைக் குமாஸ்தாவின் பிள்ளை. அவன் தகப்பனார் ராமுவுக்குப் படிப்புச் சொல்லி வைக்க எவ்வளவோ முயன்றும் அவனுக்குப் படிப்பே வருகிற வழியாயில்லை. முதலில் அப்பாவுக்குப் பயந்து கொண்டு ராமு அசிரத்தையோடு பள்ளிக்கூடம் போய் வந்தான். கொஞ்ச நாட்களுக்குப் பிறகு பள்ளிக்கூடம் போவதையே அடியோடு நிறுத்தி விட்டான்.

அன்று அப்பாவுக்கு ஆபீஸ் வேலை அதிகமாக இருந்தது. அந்த வேலைத் தொந்தரவுக்கு இடையில், ராமு பள்ளிக்கூடம் போகவில்லை என்னும் செய்தியும் சேர்ந்து கொள்ளவே அவருக்குக் கோபம் பிரமாதமாக வந்து விட்டது. ராமுவை அடித்து, "படிப்பில் சிரத்தை இல்லாத நீ வீட்டில் இருந்து பிரயோஜனம் இல்லை. வெளியே போய் விடு!" என்று கோபத்தில் கத்தி விட்டார்.

ராமுவும் மனம் உடைந்து போய் வீட்டை விட்டுக் கிளம்பி விட்டான். இன்ன இடத்துக்குப் போக வேண்டும் என்னும் அபிப்பிராயம் இல்லாமலே அவன் கால்கள் போன வழியில் போய்க் கொண்டிருந்தான். நாலு மைல் தூரம் போனதும் ராமுவுக்கு எங்கு போவது என்று புரியவில்லை. அங்கிருந்த பெரிய கடைத் தெருவில் ஒரு கடை கூட விடாமல் போய்ப் பார்த்து வேலை கேட்டான். படிக்காதவனுக்கு யார் வேலை கொடுப்பார்கள்? ராமு மிகவும் அலுப்புடன் சோர்ந்து போய் ஒரு வீட்டு வாசற்படியில் உட்கார்ந்து விட்டான். இப்பொழுதுதான் அவனுக்குத் தான் வீட்டை விட்டு ஓடி வந்தது எவ்வளவு பெரிய தவறு என்று தெரிந்தது. தான் படிப்பில் சிரத்தை காட்டாமல் இருந்து விட்டது பற்றியும் ரொம்ப வருத்தப்பட்டான்.



அப்பொழுது ஒருவன் ராமுவிடம் ஓடோடியும் வந்தான். "தம்பி, இந்தப் பையைக் கொஞ்சம் ஜாக்கிரதையாய் வைத்துக் கொண்டிரு. இதோ ஒரு நிமிஷத்தில் திரும்பி வந்து வாங்கிக் கொள்ளுகிறேன்!" என்று அவசரம் அவசரமாகச் சொல்லிவிட்டு ராமுவின் பதிலுக்குக் காத்திராமல் வேகமாய் மறைந்தான். அதே நிமிஷத்தில் ஒரு போலீஸ்காரன் அவனைத் தொடர்ந்து வந்து கொண்டிருந்தான். இதைக் கண்டதும் ராமுவுக்கு நடுக்கம் எடுத்தது. ராமுவும் அந்தப் பையைத் தூக்கிக் கொண்டு ஓட ஆரம்பித்தான். ராமு ஒரு சந்தில் திரும்பினான். அப்பொழுது வழியில் ஒரு கூலிக்காரன் நின்று யாராவது தன்னைக் கூப்பிட மாட்டார்களா என்று பார்த்துக் கொண்டிருந்தான். ராமுவுக்கு, சட்டென்று ஒரு

யோசனை தோன்றியது. அந்தக் கூலிக்காரனிடம் பையைக் கொடுத்து விட்டு, விட்டான் சவாரி. அவன் கையில் பையுடனும் மனத்தில் திகைப்புடனும் நின்றுகொண்டிருக்கும்போது பின்னாலேயே ஓடி வரும் போலீஸ்காரனைப் பார்த்து விட்டான். அவனுக்கு ஒருவாறு விஷயம் புரிந்து விட்டது. பக்கத்தில் இருந்த குப்பைத் தொட்டியில் அந்தப் பையைப் போட்டுவிட்டு ஓட்டமெடுத்தான். கடைசியில் போலீஸ்காரன் கையில் யாருமே அகப்படவில்லை. போலீஸ்காரனும் திகைப்படைந்து திரும்பி விட்டான்.



ராமு சந்து முனையில் ஓட ஆரம்பித்தவன் நேரே ஒரு வெள்ளிப் பாத்திரக்கடை வாசலில் வந்துதான் நின்றான். அவன் பின்னாலேயே அந்தக் கூலிக்காரனும் ஓடி வந்தான்.

அந்தக் கடை வாசலில் கரும்பலகையில், "ஒரு திருடன் சற்று முன்பு இந்தக் கடையிலிருந்து சில வெள்ளிப் பாத்திரங்களையும் நகைகளையும் எடுத்துக் கொண்டு போய் விட்டான். அந்தப் பாத்திரங்களையும் நகைகளையும் கண்டு பிடித்துக் கொடுப்பவர்களுக்கு இருநூற்றைம்பது ரூபாய் இனாம் கொடுக்கப்படும்!" என்று எழுதியிருந்தது.

இதைப் படித்ததும் இரண்டுபேரும் அந்தச் சந்தை நோக்கி ஓடினார்கள். ராமுவுக்கு முன்னால், கூலிக்காரன் குறுக்கு வழியாக ஓடிப்போய் அந்தக் குப்பைத் தொட்டியையே தூக்கிக் கொண்டு ஓடி வந்து வெள்ளிப் பாத்திரக் கடையின் முன் வைத்து முதலாளியிடம் தான் காணமற்போன பாத்திரங்களைக் கொண்டு வந்து விட்டதாகச் சொன்னான். என்ன ஆச்சரியம்! அந்தக் குப்பைத் தொட்டியைத் துருவித் துருவித் தேடிப் பார்த்தும் அந்தப் பை காணவில்லை. கடை வாசலில் குப்பைதான் மிஞ்சி நின்றது. கடை முதலாளி, அவன் பொய் சொல்லிக் கடை வாசலில் குப்பை போட்டதற்காக அவனிடம் கோபங்கொண்டு நன்றாய் அடித்துத் துரத்தி விட்டார்.



அந்தச் சமயம் ராமு அந்தப் பையுடன் அங்கு வந்து சேர்ந்தான். கடை முதலாளி தன் கடைப் பாத்திரங்களையும் நகைகளையும் கண்டதும் ரொம்பவும் சந்தோஷப்பட்டு, அவனிடம் வெகுமதியைக் கொடுத்துத் தன் வண்டியில் அவனை வீட்டுக்கு அனுப்பி வைத்தார்.

முதலாளியிடம் உதை வாங்கிய அந்தக் கூலிக்காரனுக்கு, தான் குப்பைத்தொட்டியில் போட்ட பையை ராமு எப்படிக் கண்டு பிடித்தான் என்று புரியவில்லை. அவன்தான் குப்பைத் தொட்டியையே கொண்டு வந்து விட்டானே! பாவம்! தான் அவசரத்தில் தப்பான குப்பைத் தொட்டியை எடுத்து வந்து விட்டது அவனுக்கு எப்படித் தெரியும்?

குதிரை வண்டியில் ஜோராக வந்து இறங்கிய ராமுவைக் கண்டதும் அம்மாவுக்கு ஆனந்தம் தாங்க முடியவில்லை. ராமுவைக் காணாமல் அன்று முழுவதும் அழுது கொண்டிருந்த அவள் முகத்தில் இப்பொழுது ஆனந்தம் பொங்கியது.

ராமு பத்திரமாய் வந்து சேர்ந்ததை அறிந்த அவன் தகப்பனார் அடைந்த சந்தோஷத்துக்கு அளவில்லை. அவர் தம்மை மீறி வந்த கோபத்தினால் ராமுவை அடித்துவிட்டார். ஆனால் அப்புறம் அவர் மனம் இளகிவிட்டது. அவனை எங்கெல்லாமோ தேடிக் காணாமல் வருந்தினார். ராமு நடந்த விஷயத்தைச் சொல்லி வெகுமதிப் பணத்தையும் அப்பா கையில் கொடுத்தான். அப்பாவும் அவனுக்கு அன்புடன் சட்டை, நிஜார் எல்லாம் நிறைய வாங்கிக் கொடுத்தார். அன்று முதல் ராமு தவறாமல் பள்ளிக்கூடம் போக ஆரம்பித்தான். பள்ளிக்கூடத்திலும் பல பரிசுகள் வாங்கினான்.

ஜுரத்திற்கு பிறகு-



ஓவல்ட்டின்

பூர்ண குணம் பெற உதவுகிறது

ஜுரத்திற்குப் பிறகு நீங்கள் இழந்த பலத்தையும் ஆரோக்கியத்தையும் விரைவில் பெற "ஓவல்ட்டின்" அருந்த வேண்டும். இது தேகத்துக்கும் மூளைக்கும் உற்சாகமூட்டுகிறது. இதில் சத்துமிகுந்த பார்லி, பால், கொககோ, இயற்கைச் சத்துக்கள், வைட்டமின்கள் அடங்கி யிருக்கின்றன.

"ஓவல்ட்டின்" எளிதில் ஜீரணமாகக் கூடியதால், ஜுரத்திற்குப் பிறகு அதை அருந்தினால் உங்களுக்கு மீண்டும் அசௌகரியம் ஏற்படாது.

இழந்த பலம் மீண்டும் பெற்று ஆரோக்கியம் காணுவீர்கள். ஜாக்கிரதை! போலிகளை வாங்காதீர்கள்.

'OVALTINE'

'ஓவல்ட்டின்'

ஜுரத்திற்குப் பிறகு தகுந்த பானம்



டிஸ்ட்ரிப்யூட்டர்கள்:

கிரஹாம்ஸ் டிரேடிங் கம்பெனி (இந்தியா) லிமிடெட்., த. பெ. நெ. 1205, மதராஸ். மற்றும் பம்பாய், கராச்சி, கல்கத்தாவிலும். தி இங்கிலிஷ் & ஸ்காட்டிஷ் ஜாயிண்ட் கோவாப்பரேடிவ் ஹோல்ஸேல் சொஸைட்டி லிமிடெட், கன்னிக்கோட்டை (மலபார் கோஸ்டுக்கு)

பv. 283

இது என்ன பயங்கரம்?

ராஜ்

அன்றிரவு சென்னையை நோக்கிப் போகும் ரயிலில் நாங்கள் இரண்டாம் வகுப்பு வண்டியில் ஏறி உட்கார்ந்தோம். அப்பொழுது எங்கள் வீட்டுக்கு எதிரில் பறங்கிப் பழம்போல் இருந்த ஒரு கிழவர் வந்து உட்கார்ந்தார். கையில் போட்டிருந்த வைர மோதிரங்களும் மேலே போட்டிருந்த ஜரிகைத் துப்பட்டாவும் அவர் ரொம்பப் பெரிய மனிதர் என்பதைக் காட்டின. அவர் ஒரு வார்த்தை கூட எங்களிடம் பேசவில்லை. கார்டு பச்சை விளக்கு காண்பித்தான். வண்டி புறப்பட இரண்டே நிமிஷங்கள் தான் இருந்தன. திடீரென்று மீசையும் தாடியுமாகப் பார்க்கப் பயங்கரமாக இருந்த ஓர் ஆசாமி எங்கிருந்தோ வந்து ஜன்னல் வழியாக அந்தக் கனவானை முறைத்துப் பார்த்தான். அடுத்த கணம் அவன் மாய மாய் மறைந்துவிட்டான். அவனுடைய சிவந்த விழிகளும் அவன் அவரைப் பார்த்த பார்வையும் என் வயிற்றை என்னவோ செய்தன. ஆனால் அந்தக் கனவானோ இடித்து வைத்த புளிமாதிரி உட்கார்ந்திருந்தார்.

சிறிது நேரம் சென்றதும் என் கணவர், "ஏதாவது வேண்டுமென்றால் என்னை எழுப்பு!" என்று சொல்லிவிட்டு, மேல் தட்டில் ஏறிப் படுத்துக்கொண்டு விட்டார்.

நான் கண்களை இறுக மூடிக் கொண்டேன். ஆயினும் அந்தக் கோர மனித ஸ்வரூபம்தான் என் கண்ணில் வந்து நின்றது.

★

அன்று சாயந்திரமே நாங்கள் சென்னைக்கு வந்து சேர்ந்தோம். காலையில்தான் பம்பாய்க்கு வண்டி இருந்தது. இருவரும் சென்ட்ரல் ஸ்டேஷனுக்கு 'டாக்ஸி' வைத்துக் கொண்டு போனோம். அங்கே இருவரும் தங்குவதற்கு ஓர் அறை ஏற்பாடு செய்து கொண்டோம். அவர் படுக்கையைத் தட்டிப் போட ஆரம்பித்தார். அப்பொழுது எங்கள் அறைக்கு அடுத்தாற்போலிருந்த அறைக்குள் அந்தப் 'பறங்கிப்பழ' ஆசாமி போவதைப் பார்த்தேன். கொஞ்ச நேரத்துக்கெல்லாம் அந்தப் பயங்கர மீசைக்காரன் அவரைத் தொடர்ந்து சென்றான். நான் சட்டென்று கதவைத் தாளிட்டுவிட்டு, மெள்ள என் கணவருக்குப் பக்கத்தில் வந்து உட்கார்ந்தேன். "பேசாமல் படுத்துத் தூங்கு! காலையில் எட்டு மணிக்குத்தான் வண்டியாம்; மேட்ரன் ஐந்து மணிக்கு வந்து எழுப்புவான்!" என்று சொல்லிவிட்டு, அவர் போர்வையை இழுத்துப் போர்த்திக் கொண்டார்.

எனக்குத் தூக்கமே வரவில்லை. என்னுடைய கலவரத்துக்கு ஏற்றாற் போல் அடுத்த அறையிலிருந்து, "ஐயோ! அப்பா!" என்ற குரலுடன் இருமல் சத்தம் பலமாக வந்து கொண்டிருந்தது. அதே சமயத்தில் 'தடதட' வென்று யாரோ எதையோ தட்டும் சத்தம் கேட்டது. என் கணவரை எழுப்பலாம் என்றாலோ, அதற்குள் அவர் குறட்டைவிட ஆரம்பித்துவிட்டார். நான் துணிந்து கதவைத் திறந்து மெள்ள எட்டிப்

கம்பாஸிடர் கைங்கரியம்!



பார்த்தேன். அந்த மீசைக்காரன் அவருடைய அறைக்குள் சென்று கொண்டிருந்தான். நான் சட்டென்று கதவைச் சாத்தி விட்டு விளக்கைப் போட்டேன். அவ்வளவுதான்; நான் மூர்ச்சை போட்டுக் கீழே விழுந்துவிடுவேன் போலிருந்தது. காரணம் இரண்டு அறைகளுக்கும் நடுவில் ஜலம் போக வைத்திருக்கும் கால்வாயின் வழியாகச் செக்கச் செவேலென்ற இரத்தம் ஓடி வந்து கொண்டிருந்தது!

நான் நடுக்கத்துடன் என் கணவரை எழுப்பி நடந்ததைச் சொன்னேன். அவரோ, "சும்மா வாயை மூடிக்கொண்டு இரு; விளக்கை அணைத்துவிட்டுப் படு! எது நடந்தால் நமக்கென்ன? அங்கே போய் இருட்டில் நாம் என்னத்தைப் பார்க்க முடியும்? அப்புறம் நம் மேல் சந்தேகப்படும்படி ஏதாவது நடந்தாலும் நடக்கும். இதற்கே காலைக்குப் போலீஸார் வந்து நம்மைக் கேள்விமேல் கேள்வி கேட்பார்கள். எல்லாம் நம் தலையெழுத்து!" என்று உறுமினார்.

நான் பேசாமல் படுத்துவிட்டேன். அடுத்த அறையில் பிணம் கிடக்கும்போது தூக்கம் எப்படி வரும்? பொழுது புலராதா என்று ஏங்கிக் கொண்டிருந்தேன்.

★

சிறிது நேரத்துக்குப் பிறகு, எங்கள் கதவைத் 'தடதட' வென்று யாரோ தட்டினார்கள். 'சரிதான், போலீஸார் வந்தாச்சு! நம்மைச் சந்தியில் இழுத்து வைக்கப் போகிறார்கள்!' என்ற திகிலுடன் நான் என் கணவரை எழுப்பினேன். அவரும் வாரிச் சுருட்டிக்கொண்டு எழுந்து வந்து கதவைத் திறந்தார். வாசலில் நின்றது யார் தெரியுமா? அந்த ஆங்கிலோ இந்திய மேட்ரன்! எங்களை எழுப்புவதற்காக அவள் வந்திருந்தாள்!

"என்ன மேடம்! அடுத்த அறையில் என்ன கலாட்டா?" என்று அவளைக் கேட்டார் என் கணவர்.

"ஒன்றுமில்லை, மிஸ்டர்! ஆஸ்த்துமாக்காரர் ஒருவர் அந்த அறையில் தங்கியிருக்கிறார்; பெரிய பணக்காரர்; ராத்திரியெல்லாம் இருமிக் கொண்டிருந்தார். அவர் பிரசித்தி பெற்ற ஓர் இங்கிக் கம்பெனியின் டைரக்டராம். அவருடைய வேலைக்காரன் நேற்று ஒரு பெட்டி சிவப்பு இங்கிப் புட்டிகளைக் கீழே போட்டு உடைத்து விட்டான். அவற்றை யெல்லாம் வாரி வெளியே போட்டுவிட்டு, அவன் ஆஸ்த்துமாவுக்கு மருந்து கொடுத்த பிறகுதான் அவர் சற்று நிம்மதியாகத் தூங்கினார். அந்த டைரக்டரும் பம்பாய்க்குத்தான் போகிறார். அவரையும் இதோ எழுப்பி விட்டு வருகிறேன்!" என்று சொல்லிவிட்டுப் போனாள் அந்த மேட்ரன்.

அட கடவுளே! சிவப்பு மசியை இரத்தம் என்று நினைத்துத்தானா இரவெல்லாம் தூங்காமல் கவலைப்பட்டுக் கொண்டிருந்தேன்?

• • • வருந்துகிறோம் • • •



ஹரிஜன இளைஞர்கள் கல்வி கற்று முன்னுக்கு வருவது அபூர்வமான காரியம். அவ்விதம் முன்னுக்கு வந்த இளைஞர்களில் திரு எம். துரைப் பிள்ளை, பி. ஏ., ஒருவர். சென்னைச் சட்ட சபையின் சபாநாயகர் ஸ்ரீ சிவசண்முகம் அவர்களிடம் இவர் பர்ஸனல் அஸிஸ்டெண்ட் உத்தியோகம் பார்த்து அவருடைய பூரண அபிமானத்துக்குப் பாத்திரமானார். உயர்ந்த ஒழுக்கத்தினாலும் இனிய சுபாவத்தினாலும் தம்முடன் பழகியவர்கள் அனைவருடைய நன்மதிப்பையும் பெற்றார். அத்தகைய இளைஞர் திடீரென்று கோய்ப்பட்டு சென்ற 26-7-49ல் காலமானார் என்னும் செய்தியை அறிந்து வருந்துகிறோம். ஸ்ரீ துரைப் பிள்ளையைச் சொந்தப் புதல்வனைப்போல் நேசித்த சபாநாயகர் சிவஷண்முகம் பிள்ளைக்கும் மற்றும் நண்பர்கள் - உறவினர்களுக்கும் மனமார்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

கலைமகள் வெளியீடுகள்

வைராக்கியம்

யுத்த காண்ட்ராக்ட், 1942-ம் வருஷப் போராட்ட இயக்கம், ஓடும் ரயிலைக் கவிழ்க்கச் சதி, துப்பாக்கி சுடும் ஓசை—இவற்றிற்கு மத்தியில் மனோரமா என்ற ஒரு இள மங்கையையும் கொண்டு வந்து புகுத்தி இந்தக் கதையை ஜோடித்திருக்கிறார் வசந்தன். பொன்னருவி கிராமத்தில் பெரும் பணக்காரராக விளங்கிய கந்தசாமிப் பிள்ளையின் செல்வத் திருமகள் மனோரமா. அவள் யுத்த காண்ட்ராக்ட் எடுத்து அதில் பணத்தையெல்லாம் இழந்து விட்ட சோமசுந்தரத்தைக் காதலிக்கிறாள். இது அவளுடைய பெரியப்பா மகன் குமாருக்குப் பிடிக்கவில்லை. அவன் சோமசுந்தரத்தை ஒரு சதியில் மாட்டி வைக்கிறான். அந்தச் சதி முற்றிலும் பொய் என்பதை நிரூபிப்பதற்காகக் குமார் வீட்டுக்கு மனோரமா போகிறாள். குமார் ஆத்திரமடைந்து மனோரமாவைச் சுடப் போகிறான். அப்போது, நல்ல வேளையாக ஒரு சி. ஐ. டி. அங்கே தோன்றி அந்த விபத்தைத் தடுத்துவிட்டு மனோரமாவும் குமாரும் உடன் பிறந்தவர்கள் என்ற பேருண்மையை வெளிப்படுத்துகிறார். கடைசியில் மனோரமாவுக்கும் சோமசுந்தரத்துக்கும் கல்யாணம் நடக்கிறது. கதையும் சுபமாக முடிகிறது. நாமும் "பேஷ்! பேஷ்! வசந்தனின் திறமையே திறமை!" என்று பாராட்டிவிட்டுப் புத்தகத்தைக் கீழே வைக்கிறோம். விலை ரூ. 2-4-0

பெண் உள்ளம்

ஆழம் காணமுடியாத பெண் உள்ளத்தை ஆழங்காண முயல்கிறார் ஸ்ரீமதி ராஜம் ராமமூர்த்தி. பெண் உள்ளத்தின் ஆழத்தை ஒரு பெண்மணிதானே காண முடியும்? தாயும் தந்தையுமற்ற சந்திரகுமாரைத் தியாகுவும் அவனுடைய மனைவி பத்மாவும் வளர்த்துப் படிக்க வைத்து முன்னுக்குக் கொண்டு வருகிறார்கள். தியாகுவுக்கு ஒரு ஆசை—தன்னுடைய தங்கை மாலதியை சந்துருவுக்குக் கல்யாணம் செய்து வைக்கலாம் என்று. ஆனால், சந்துருவின் மனமோ, நளினி என்ற மற்றொரு யுவதியை நாடுகிறது. மாலதியை அவன் விரும்பவில்லை. நளினி தன் மீது கொண்ட காதல் உண்மைக் காதல் அல்லவென்பதை அறிய அவனுக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைக்கிறது. அப்புறம் நளினியைக் கல்யாணம் செய்து கொள்ள அவனுக்குப் பைத்தியமா பிடித்திருக்கிறது? மாலதியையே கல்யாணம் செய்து கொள்ளுகிறான். பெண் உள்ளத்தின் ஆழம் காணமுயலும் இந்த நாவலுக்குக் கலைமகள் காரியாலயத்தார் நடத்தி வரும் நாவல் போட்டியில் 500 ரூபாய் பரிசு கிடைத்ததில் ஆச்சரியம் எதுவும் இல்லை. விலை ரூ. 3.


மாயா விநோதினி

விநோதினி ஒரு விதவை. செல்வக் குடும்பத்திலே பிறந்த மகேந்திரன் அவளுடைய காதலுக்காகவும் கடைக்கண் நோக்குக்காகவும் ஏங்கித் தவிக்கிறான். ஆனால் அவளுடைய உள்ளமோ மற்றொருவனை—விஹாரியை—நாடுகிறது. மகேந்திரனைத் துணையாக அழைத்துக் கொண்டு விஹாரியைத் தேடிச் செல்கிறாள். எங்கெங்கெல்லாமோ போய், என்னென்னவோ கஷ்டமெல்லாம் அனுபவிக்கிறாள். கடைசியில் அவனைக் கண்டு பிடிக்கிறாள். அவனும்

மறைக்கிறதே!



புகை பிடிப்பவர்:—என் ஸார், திரையிலே என்ன காட்டிக்கொண்டிருக்கிறார்கள்? புகையிலே ஒன்றும் தெரியவில்லையே!



"சுவாமிகளே! அற்பனுக்கு வாழ்வு வந்தால் அர்த்த ராத்திரியிலே குடை பிடிப்பானாமே! அது வாஸ்தவமா?"

"ரொம்ப வாஸ்தவம்! அதனாலே தான் இன்று அஸ்தமித்ததும் உங்கள் கையிலே இந்தக் குடையைக் கொடுத்து விட உத்தேசித்திருக்கிறேன்!"

விநோதினியைக் கல்யாணம் செய்து கொள்ள இணங்குகிறான். ஆனால் விநோதினியின் மனம் திடீரென்று மாறி விடுகிறது. அவள் அவனைக் கல்யாணம் செய்து கொள்ள மறுத்துவிடுகிறாள். "வேண்டாம், வேண்டாம்! விதவையாகிய என்னைக் கலியாணம் செய்து கொண்டால் உலகம் உங்களை என்ன சொல்லும்? நீங்கள் என்னைக் காதலிப்பதாகச் சொன்னீர்களே, அதுவே போதும்" என்கிறாள் அந்தத் துர்ப்பாக்கியவதி. உள்ளத்தை உருக்கும் இத்தகைய அருமையான காவியக் கவியரசர் ரவீந்திரநாத் டாகூரைத் தவிர வேறு யார் எழுத முடியும்? டாக்டர் ராஜனின் புதல்வி ஸ்ரீமதி தங்கம் இதை அழகாக மொழி பெயர்த்திருக்கிறார். இப்போது இரண்டாம் பதிப்பாக வெளி வந்திருக்கிறது. விலை ரூபாய் 4.

மாப்பிள்ளைத் தோழன்

நாவல்களுக்கு அதிக கிராக்கி ஏற்பட்டிருக்கும் இக்காலத்தில், சம்ஸ்கிருத மொழியில் பல இலக்கியங்களைப் பயின்ற ஸ்ரீ ப. மகாலிங்க சாஸ்திரிகள் மாப்பிள்ளைத் தோழன் என்று ஒரு நவீனம் எழுதியிருப்பதில் வியப்பு ஒன்றுமில்லை.

மாப்பிள்ளைத் தோழன் என்ற கதையின் சுருக்கம் இதுதான். பெண் பார்க்கப்போன மாப்பிள்ளை சேஷு காதல் சங்கடங்களில் அகப்பட்டுக் கொள்ளுகிறான். அதிலிருந்தெல்லாம் அவனை விடுவிப்பது, சேஷுவின் நெருங்கிய நண்பனான கல்யாணம்தான். அதற்குப் பரிசாக சேஷுவின் தங்கையையே மனைவியாகப் பெறுகிறான் கல்யாணம். "பாலாற்றின் மணலில் சுரந்து பெருகும் ஊற்றைப் போல் தமிழ்க் குடும்ப வாழ்க்கையிலேயே பிறந்த இந்தக் கதை தங்கு தடையின்றி இயற்கையாகவே பெருகி விடுகிறது" என்று இதற்கு முன்னுரை அளித்துள்ள ஸ்ரீ வேங்கட ரமணி கூறுகிறார். விலை ரூ. 2.

காந்தம்

தன்னைப் போலவே பிறரையும் ஆக்காத வரையில் மனிதனுக்குத் திருப்தி உண்டாவதில்லை. இரண்டு குழந்தைகளுக்குத் தந்தையான மனிதன், பிரம்மச்சாரிகளையெல்லாம் கிருகஸ்தர்களாக்கும் உரிமை தனக்கு வந்து விட்டது என்று நினைக்கிறான். ஐந்து பெண்களைப் பெற்ற பெண்மணிக்கு, உலகில் ஒவ்வொரு தாயும் ஐந்தாறு பெண்களைப் பெற வேண்டும் என்று தோன்றுகிறது. தன்னைப் போலவே உலகம் முழுவதும் இருக்க வேண்டும் என்று மனிதன் விரும்புகிறானே தவிர, லக்ஷ்யப் பாதையில் சென்று வழி கோலுபவன் எவனையும் காணவில்லை.

இத்தமாதிரி சிந்தனைகள் காந்தத்தை, ஆண்களின் சுயநலச் சூழ்ச்சிதான் விவாகம் என்று நினைக்கும்படி செய்கிறது. ஆனாலும் தந்தையின் வற்புறுத்தலுக்காக விவாகத்துக்கு இசைகிறாள். மாங்கல்ய தாரணம் ஆனதும் மாப்பிள்ளையின் சிற்றப்பா பணத்தாசையினால் மேலும் பணம் கேட்கிறார். காந்தத்தின் தகப்பனார் பணம் சேகரிக்க வெளியேறுகிறார். மங்கல நாணை அவிழ்த்து மணமகன் முகத்தில் எறிந்து விட்டுக் காந்தமும் வெளியேறுகிறாள். மணமகனின் சித்தி கிழவனோடு வாழ மனமின்றி வெளியேறுகிறாள். அவள் சித்தப்பாவும் மனமுடைந்து வெளியேறுகிறார். காந்தத்தைத் தேடி அவள் கணவனும் வெளியேறுகிறான். கதையில் வெளியேறிய எல்லாப் பாத்திரங்களும் கடைசியில் மங்களகரமாக ஒன்று சேர்ந்து விடுகின்றனர். கா. ஸ்ரீ. ஸ்ரீ. எழுதிய இந் நாவல் சரளமான நடையில் அமைந்திருக்கிறது. விலை ரூ. 3.

இந்த ஐந்து நாவல்களையும் கலைமகள் காரியாலயத்தார் வழக்கம்போல் அழகிய முகப்புப் படத்துடன் சிறந்த முறையில் வெளிக் கொண்டு வந்திருக்கிறார்கள். வளரும் தமிழுக்கு அவர்கள் செய்து வரும் தொண்டு பெரிதும் பாராட்டத் தக்கதாகும்.

அக்கப் போர்

ரா. கி.

பள்ளிக்கூடப் பாட புஸ்தகங்களைப் பார்சலாகவோ அன்றி கட்டாகவோ அனுப்ப எவரேனும் கொடுத்தால் எவ்வித நிர்ப்பந்தமும் இல்லாமல் அனுப்ப வேண்டிய இடங்களுக்கு அனுப்பி விடுமாறு எல்லா ஸ்டேஷன்களுக்கும் ஆக்ஞை பிறப்பிக்கப்பட்டிருப்பதாக ரயில்வே பொதுஜனத் தொடர்பு அதிகாரி அறிவிக்கிறார்.

“எங்களுக்கு இருக்கும் எல்லாப் பாட புஸ்தகங்களையும் (அவற்றை எழுதியவர்களையும் கூட) எமலோகத்திற்குத்தான் அனுப்ப வேண்டும். எங்கள் கோரிக்கை எவ்வித நிர்ப்பந்தமும் இல்லாமல் ஏற்றுக் கொள்ளப் படுமா?” என மாணவர்கள் பலர் ஸ்டேஷன்களில் விசாரித்ததாகக் கேள்வி.

★

ஸூரத் ஜில்லாவில் பர்தோலி என்ற கிராமத்தில் பஞ்சாயத்துத் தேர்தலில் வோட்டெடுப்பு ஏற்பாடுகள் போதாது என ஆட்சேபணை செய்து அபேட்சகர்கள் நிற்க மறுத்துவிட்டனர்.

ஐயோ, பாவம்! மேற்படி அபேட்சகர்களை உட்காரச் சொல்லக் கூடாதோ!

★

மேல் வங்கப் பிரதமர் டாக்டர் பி. ஸி. ராய் ஐரோப்பாவில் சில வாரங்கள் சுற்றுப் பிரயாணம் செய்து கண் சிகிச்சை செய்து கொண்டு இந்தியா திரும்புவார் எனப் பத்திரிகைகளில் செய்தி வெளியாகியிருக்கிறது.

டாக்டர் பி. ஸி. ராய் பிரதமராக இருந்த போது பல கண்மூடித்தனமான காரியங்கள் நடைபெற்றதற்குக் காரணம் அவரது கண்களில் ஏற்பட்டிருந்த கோளாறே என நினைக்கத் தோன்றுகிறது.

★


சமீபத்தில் ஆகாகான் தம்பதிகள் வழிப்பறி செய்யப்பட்டது தினசரிகளில் வெளியாகி உள்ளது. அவர் பறி கொடுத்த நகைகளின் மதிப்பு பல கோடி ரூபாய். ஏழாம் நூற்றாண்டைச் சேர்ந்த இரண்டு வைரங்களும் பறிக்கப்பட்டு விட்டனவாம். அந்த வைரங்களைத் திருடுபவர்கள் இரண்டே மாதத்தில் இறந்து விடுவார்களாம். “அப்படி என்றால் திருடனைப் பிடிப்பது மிகவும் சுலபமாயிற்றே! இந்த இரண்டு மாதங்களில் இறந்து போகிறவர்களையெல்லாம் கைது செய்து சோதனை போட்டால் திருடன் சிக்கிவிடுகிறான்” என்று கூறுகிறார் உள்ளூர்த் துப்பறியும் நிபுணர்.

★

திருட்டுக் கொடுத்த ஆகாகான் ஒரு பேட்டியில் பின் வருமாறு கூறினாராம்:— “நான் பாக்கியசாலி; இனி என் மடியில் கனமில்லை” என்று. “மடியில் கனமில்லா விட்டாலும் ஆள் தான் அதிக கனமாக இருக்கிறீர்களே!” என்று அவரை அடிக்கடி எடை போட்டுப் பழக்கமான ஆசாமி ஒருவர் கூறுகிறார்.

★

இங்கிலாந்தில் ஜான் வில்ஸன் 390 ரூபாய் செலவில் ஒரு நூதன மூன்று சக்கர மோட்டாரைச் செய்து முடித்துள்ளார். இனி ஏழை எளியவர்களும் மோட்டார் வைக்கலாமாம். பெட்ரோல் அதிகம் ஆகாதாம். எல்லாவற்றிற்கும் மேலாக மேற்படி மோட்டார் நடுவழியில் பழுதடைந்து விட்டாலும் கவலையில்லை. தலையில் தூக்கி வைத்துக் கொண்டு வீடு திரும்பிவிடலாம்!



தாயார்:—ஏண்டா, அடுத்தாத்துச் சீனு அழுறானே. அவன் பல்லிலே யிருந்து ரத்தம் வரதே, நீ அவனை அடித்தாயா, என்ன?

ராமு:—இல்லே, அம்மா! நீ கொடுத்த சீடையிலே அவனுக்கு இரண்டு கொடுத்தேன்!

பழைய கதை



கவி ரவீந்திரநாத் தாகூர்

அன்று வந்த போர்ச் செய்தி அரசனுக்கு அவ்வளவாகச் சந்தோஷத்தை அளிக்கவில்லை. மனதில் துயரத்துடன் அவன் தோட்டத்தில் உலாவச் சென்றான்.

மதிற் சுவரின் அருகில் மரத்தடியில் உட்கார்ந்து ஒரு சிறுவனும் சிறுமியும் விளையாடுவது அரசன் கண்களில் பட்டது. "என்ன விளையாடுகிறீர்கள்?" என்று அவன் அவர்களை நோக்கிக் கேட்டான்.

"இன்று ராமனும் சீதையும் வனவாசம் செய்யும் விளையாட்டு!" என்றனர் இருவரும். இதைக் கேட்ட அரசன் அங்கேயே உட்கார்ந்து விட்டான்.

"இதோ, இதுதான் தண்டக வனம். இங்கேதான் குடிசை கட்டுவேன்!" என்று சொன்னான் அந்தச் சிறுவன். அவனுக்குப் பக்கத்தில் உடைந்த கிளைகளும் வைக்கோலும் கிடந்தன.

சிறுமியோ இலைகளைக் கொண்டு விளையாட்டுச் சொப்பில் தீயில்லாமல் சமைக்கத் தொடங்கினாள். ராமர் சாப்பிடுவதற்காகக் கணநேரம் கூட ஓய்வில்லாமல் சமைத்தாள் சீதை.

"எல்லாம் சரிதான்; ஆனால் ராக்ஷஸன் எங்கே?" என்று அரசன் கேட்டான்.

சிறுவன் அந்தக் குறையை ஒப்புக்கொள்ள வேண்டியதாயிற்று. "அதற்கென்ன, நான் ராக்ஷஸனாகிறேன்!" என்று அரசன் அவர்களுக்குத் தேறுதல் சொன்னான்.

சிறுவன் அரசனை நோக்கி, "ஆனால், நீ என்னிடம் தோற்றுப் போக வேண்டும், தெரியுமா!" என்றான்.

"என்னால் வெகு சுலபமாகத் தோற்றுப் போக முடியும்; நீ வேண்டுமானால் பாரேன்!" என்றான் அரசன்.

அன்று ராக்ஷஸ வதம் நன்றாக நடக்கவே, சிறுவனும் சிறுமியும் விடாக்கண்டர்களாகி விட்டனர். அவர்கள் அரசனை விடவேயில்லை. அவன் அவர்களுக்காகப் பன்னிரண்டு உருவங்கள் எடுத்துச் சாக வேண்டியிருந்தது. அதற்குள் அவனுக்கு மேல் மூச்சு வாங்க ஆரம்பித்தது.

அரசன் மந்திரியை அழைத்து, "இவர்கள் யாருடைய குழந்தைகள்?" என்று கேட்டான்.

"சிறுமி என்னுடைய பெண் ருசிரா; சிறுவனுடைய பெயர் கௌசிகன்; அவனுடைய தகப்பனார் ஏழைப் பிராமணர். பூஜை செய்து பிழைக்கிறார்."

"காலம் வரும்போது இந்தச் சிறுவனுக்கு இவளை மணம் செய்து வைக்க விரும்புகிறேன்" என்றான் அரசன்.

மந்திரி பதில் சொல்லத் துணியவில்லை; பேசாமல் தலை குனிந்து நின்றான்.

ஊரில் மிகவும் அறிவாளியான ஒருவரிடம் அரசன் கௌசிகனைப் படிப்பதற்காக அனுப்பினான். உயர்ந்த வம்சத்துப் பிள்ளைகள் அவரிடம் படித்தனர். அவரிடம் தான் ருசிராவும் கல்வி கற்று வந்தாள்.

கௌசிகன் பாடசாலைக்கு வந்த அன்று பண்டிதருடைய மனம் சரியாக இல்லை; ஆனால் அரசனுடைய இஷ்டத்துக்கு மாறாக என்ன செய்வது?

எல்லாரையும் விட அதிகம் அவதிப்பட்டவள் ருசிராதான். ஏனென்றால் மற்றப் பிள்ளைகள் ரகசியமாக அவளையும் கௌசிகனையும் பற்றி அடிக்கடி பேசிக் கொண்டனர். அவர்கள் தங்களைப் பற்றிப் பேசும்போதெல்லாம் வெட்கத்தால் அவள் முகம் சிவந்துவிடும்; கோபம் மிகுந்து கண்களில் நீர் பெருகிவிடும்.

கௌசிகன் அவளிடம் புஸ்தகத்தைக் கொடுத்தால், அவள் அதைத் தள்ளி விடுவாள். பாட விஷயமாக ஏதாவது கேட்டால் பதிலே சொல்ல மாட்டாள்.

ருசியிடம் உபாத்தியாயருக்கு அன்பு அதிகம். எல்லா விஷயங்களிலும் அவள் கௌசிகனை மீறிச் செல்ல வேண்டுமென்று அவர் விரும்பினார். ருசியும் அதே பிடிவாதத்துடன் இருந்தாள். அது சுலபமாக முடியக்கூடிய காரியமென்றும் தோன்றியது. ஏனென்றால் கௌசிகன் சரியாகப் படிப்பதில்லை. நீச்சல் அடிக்கவும், காட்டில் திரியவும், பாடவும் வாத்தியம் இசைக்கவுமே சென்றது அவன் உள்ளம்.

பண்டிதர், "படிப்பில் உனக்கு ஏன் அக்கறை இல்லை?" என்று அவனை அதட்டினார்.

"எனக்கு அக்கறை வெறும் படிப்பில் மட்டுமல்ல; இன்னும் எத்தனை எத்தனையோ விஷயங்களில் உண்டு!" என்றான் கௌசிகன்.

"அதையெல்லாம் நீ விட்டுவிடு!" என்றார் குரு.

"அப்படியானால் படிப்பிலும் எனக்குப் பிடித்தம் இராது!" என்றான் கௌசிகன்.

★

இவ்வாறு கொஞ்சகாலம் சென்றது. அரசன் பண்டிதரை அழைத்து, "உம்முடைய மாணவருள் சிறந்தவர் யார்?" என்று கேட்டான்.

"ருசிரா!" என்று பதில் வந்தது.

"கௌசிகன் எப்படி?"

"அவன் ஏதும் கற்றுக் கொள்வதாக எனக்குத் தெரியவில்லை."

"கௌசிகனுக்கும் ருசிக்கும் கல்யாணம் செய்து வைக்க வேண்டுமென்று நான் விரும்புகிறேன்" என்றான் அரசன்.

இதைக் கேட்டதும் பண்டிதர் சிரித்தார். "அஸ்தமனத்துடன் இளங்காலையைச் சேர்த்து வைப்பது போலத்தான்!" என்றார்.

அரசன் மந்திரியை அழைத்து, "உன் பெண்ணைக் கௌசிகனுக்குக் கல்யாணம் செய்துவைக்கலாமென்று இருக்கிறேன்!" என்றான்.

"அரசே! என் பெண்ணுக்கு அதில் சிறிதளவும் இஷ்டமில்லையே!" என்றான் மந்திரி.

"பெண்ணுள்ளம் பேச்சின் மூலம் வெளிப்படுமா?"

"அவள் கண்ணீரும் இதையே சொல்லுகிறது. மகாராஜா!"

"கௌசிகன் தன்னை மணக்க அருகதை அற்றவன் என்று அவள் நினைக்கிறாள்?"

"ஆம், அரசே!"

"என் எதிரே இருவருடைய கல்விப் பரீக்ஷையும் நடக்கட்டும். கௌசிகன் வெற்றி பெற்றால் விவாகம் நடந்தாக வேண்டும்" என்றான் அரசன்.

மறுநாள் மந்திரி அரசனிடம் வந்து, "மகாராஜா! இதில் என் பெண்ணுக்கும் சம்மதம்தான்!" என்றான்.

★

சபை கூடியது. அரசன் சிம்மாசனத்திலும் அதன் கீழ் கௌசிகனும் உட்கார்ந்திருந்தனர்.

பண்டிதர் தாமே ருசிராவை அழைத்துக் கொண்டு வந்தார். கௌசிகன் இருக்கையை விட்டெழுந்து உபாத்தியாயரை வணங்கி, ருசிராவுக்கும் கை கூப்பினான்.



ருசிரா அவனை லக்ஷ்யமே செய்யவில்லை.



பள்ளிக்கூடத்தில் கூடக் கௌசிகன் ருசிராவுடன் தர்க்கம் செய்தவனல்ல. மற்ற மாணவர்கள் அவனுக்கு அந்த அவகாசத்தைத் தருவதே இல்லை. இன்று அவன் பளிச் பளிச் சென்று மின் வெட்டுப் போல் கேள்விகள் கேட்கவே குரு வியப்புற்றார்: அவருடைய உள்ளத்தில் சிறிது களிப்பும் மூண்டது. ருசியின் நெற்றியில் வியர்வை அரும்பியது. அவளுடைய புத்தி நிலை தடுமாற, கௌசிகன் அவள் தோல்வியுறும் அளவுக்குக் கொண்டு வந்து விட்டான்.

கோபத்தில் உபாத்தியாயரின் தொண்டை அடைத்தது: ருசியின் விழிகளோ தாரை தாரையாக நீர் வடித்தன.

அரசன் மந்திரியை நோக்கி, "இனி திருமணத்துக்கு நாள் குறிக்கலாமே!" என்றான்.

கௌசிகன் எழுந்து கை கூப்பி, "அரசே! மன்னிக்க வேண்டும். எனக்கு இந்தக் கல்யாணம் வேண்டாம்" என்றான்.

அரசன் வியப்புற்றான். "வெற்றி பெற்று அடைந்த பரிசை ஏற்றுக் கொள்ள ஏன் தயக்கம்?" என்று கேட்டான்.

"வெற்றி எனதாயிருக்கட்டும்; பரிசு இன்னொருவனுக்குக் கிடைக்கட்டும்" என்றான் கௌசிகன்.

பண்டிதர், "அரசே! இன்னும் ஓராண்டு அவகாசம் கொடுங்கள்; அப்புறம் கடைசிப் பரிக்ஷை வைத்துப் பார்க்கலாம்" என்றார்.

"சரி, அப்படியே நடக்கும்!" என்றான் அரசன்.

★

கௌசிகன் பள்ளியை விட்டுச் சென்றான். காலை வேளையில் காட்டு நிழலிலும், அந்திப் பொழுதில் மலையுச்சியிலுமாக அவன் பொழுதைக் கழித்தான்.

பண்டிதரோ ருசியை மேலும் மேலும் பயிலுவிக்கலானார். ஆனால் அவள் மனம் அதில் செல்லவில்லை.

உபாத்தியாயர் வெறுப்புற்று, "இப்போதிருந்தே நீ கவனமாகப் படிக்கவில்லையானால் திரும்பவும் அவமானப்பட வேண்டியதுதான்!" என்றார்.

ருசியோ இரண்டாவது தடவையும் அவமானப்பட வேண்டுமென்று தவம் செய்தான். பண்டிதருக்குக் கோபம் வந்துவிட்டது. "கபிலர் மேல் ஆணை; இனிமேல் பெண்களுக்குப் பாடம் சொல்லித்தர மாட்டேன். வேத வேதாந்தங்களைக் கற்றுணர முடிந்த என்னால் ஒரு பெண்ணின் மனதை உணர முடியவில்லையே!" என்றார்.

இந்த நிலைமையில் ஒரு நாள் மந்திரி அரசனிடம் வந்து, "பவதத்தன் வீட்டிலிருந்து பெண் கேட்க வந்தனர். குலம், குணம், செல்வம் எதிலும் அவர்கள் குறைந்தவர்களல்ல. மகாராஜாவின் உத்தரவு தேவை" என்றான்.

"பெண் என்ன சொல்கிறாள்?" என்று கேட்டான் அரசன்.

"பெண் உள்ளம் பேச்சில் தெரியுமா?"

"அது சரி, அவள் கண்ணீர் என்ன சொல்கிறது?"

மந்திரி வாயைத் திறக்கவில்லை.

★

அரசன் பூங்காவில் அமர்ந்து, மந்திரியை நோக்கி, "உன் பெண்ணை என்னிடம் அனுப்பு!" என்றான்.

ருசிரா அரசனை வந்து நமஸ்காரம் செய்தான்.

"அம்மா, அன்று சீதா வனவாச நினைவு இருக்கிறதா?"

ருசிரா தலைகுனிந்து இதழ்களில் புன்சிரிப்புடன் நின்றாள்.

"அதே விளையாட்டை இன்னொரு முறை பார்க்க எனக்கு மிகவும் ஆவலாக இருக்கிறது!" என்றான் அரசன்.

ருசிரா வெட்கத்தால் தன் முகத்தைத் தலைப்பினால் மூடிக்கொண்டாள்.

"காடும் இருக்கிறது; ராமனும் இருக்கிறான். சீதைக்குத்தான் ஏதோ குறை என்கிறார்கள், அம்மா! நீ மனது வைத்தால் அதுவும் சரியாகிவிடும்!" என்றான் அரசன் மீண்டும்.

ருசிரா வாய் திறவாமல் அரசனை நமஸ்காரம் செய்தான்.

"ஆனால், இம்முறை நான் ராக்ஷஸனாக மாட்டேன்" என்றான் அரசன்.

ருசிரா தன்னுடைய குளிர் விழிகளால் அரசனுடைய முகத்தை நோக்கினாள்.

"இந்தத் தடவை ராக்ஷஸனாக வேண்டியவர் உங்கள் உபாத்தியாயர்தான்!" என்று கூறி முடித்தான் அரசன்.

[தமிழ்ப்படுத்தியவர்: சங்கதாத ஆத்ரேயன்]

262. அங்கீகரியாமல் வேறென்ன செய்வது?

வானர வீரர்கள் என்ன சொன்ன போதிலும் அதற்கு மாறாக அனுமன் பேசினான்: "விபீஷணன் ஆபத்துக்கு உள்ளானவனாய் நம்மிடம் வந்திருக்கிறான். அவனை அங்கீகரியாமல் துரத்திவிடுவது எந்த விதத்திலும் பொருந்தாத காரியம்" என்று அழுத்தமாய்ப் பேசினான் அனுமன்.

அப்படிப் பேசியது ராமனுக்கு அளவில்லாத திருப்தியைக் கொடுத்தது,

மாருதி இனைய வார்த்தை
 செவிமடுத்து, அமிழ்தின் மாந்திப்,—
'பேரறி வாள! நன்று
 நன்றெ'னப்,—பிறரை நோக்கிச்
'சீரிது;—மேலிம் மாற்றம்
 தெளிவுறத் தேர்மின்' என்று,
ஆரியன் உரைப்பதானான்,
 அனைவரும் அதனைக் கேட்டார்.

[மாருதி இனைய வார்த்தை: அனுமன் சொன்ன அந்த வார்த்தையை; செவி மடுத்து அமிழ்தின் மாந்தி: நன்றாய்க் காது கொடுத்துக் கேட்டு அமிழ்தம் போல் அதை உட்கொண்டு (அங்கீகரித்து); பேரறிவாள: பேரறிவாளனாகிய அனுமனே; நன்று நன்று என: நீ சொன்னது சரியான காரியம், ரொம்பவும் சரியான காரியம் என்று பாராட்டிவிட்டு; பிறரை நோக்கி: வானரத் தலைவர்களைப் பார்த்து; சீரிது: அனுமன் சொன்னதுதான் சரியான காரியம்; மேல் இம் மாற்றம் தெளிவுறத் தேர்மின் என்று: இனிமேல் நீங்கள் செய்ய வேண்டியது இந்த வார்த்தையை மனதில் வைத்து நன்றாய் யோசனை செய்ய வேண்டும் என்று சொல்லிவிட்டு; ஆரியன் உரைப்பதானான்: ராமன் சொல்ல வேண்டியதைச் சொல்ல ஆரம்பித்தான்.]

⁂

அனுமன் சொன்ன விஷயத்தை ஆழ்ந்த கருத்தோடு யோசித்துப் பார்க்கிறான் ராமன்.

"யுத்தம் ஆரம்பிப்பதற்கு முன்னமேயே இந்த விபீஷணன் வந்து விட்டான். நல்லதாய்ப் போய்விட்டது.

"தருமத்திலேயே அவன் மனம் தோய்ந்திருப்பதால் நம் பக்கத்தில் உண்மையான அன்பும் ஆசையும் கொண்டிருக்கிறான்.


"அவனுடைய அறிவின் திறத்தை இப்படி அப்படி என்று சொல்ல முடியாது. உயர்ந்த லக்ஷியத்தோடு மனசைப் பண்படுத்தி வந்ததினால் ஒரு விதமான குற்றமும் அவனிடத்தில் இல்லை.

"சாதாரணமாகக் குற்றம் செய்யாமல் ஒருவன் இருந்து விடலாம். சும்மா இருந்து விட்டாலே போதும், மனச் சாட்சியைத் திருப்தி பண்ண. ஆனால் இவனுடைய மனச்சாட்சி அப்படித் திருப்தி கொள்ளுவதாய் இல்லை, எதிராளியான நம்மோடு சேர்ந்து தான் மனம் ஆறுதல் அடைகிறதாய் இருக்கிறது. இது ஒரு அபூர்வமான தர்மக்ருத்யம் அல்லவா!"

கருத்துற நோக்கிப்,'போந்த
 காலமும் நன்று; காதல்
அருத்தியும் அறத்தின் மேற்றே;
 அறிவினுக்(கு) அவதி இல்லை;
பெருத்த(து)உயிர் தவத்தினாலும்
 பிழைப்பிலன் என்னும் பெற்றி.
திருத்திய தாகும் அன்றே
 நம்வயிற் சேர்ந்தசெய்கை.'

[போந்த காலமும் நன்று: நம்மிடம் வந்து சேர்ந்த சமயமும் வாய்ப்பாய்ப் போய் விட்டது; காதல் அருத்தியும் அறத்தின் மேற்றே: நம்மிடத்தில் ஏற்பட்ட அன்பும் ஆசையும் மனமொத்த லக்ஷியத்தின் காரணமாகத்தான்; அறிவினுக்கு அவதியில்லை: எட்டி யோசித்த திறத்துக்கு அளவே இல்லை; பெருத்து உயர் தவத்தினாலும்: மிக உயர்ந்த இதய சாதனங்களினால்; பிழைப்பிலன் என்னும் பெற்றி: குற்றம் இல்லாதவன் என்னும் தன்மையை; திருத்தியதாகும் அன்றே: இன்னும் அதிகமாகத் தெளிவு படுத்தியதாகும். எப்படி? நம் வயின் சேர்ந்த செய்கை: நம்மிடம் வந்து சேர்ந்த இந்தச் செய்கை அதைக் குறிக்கிறது.

குறிப்பு:—இந்தச் செய்யுளிக் குறிப்பிட்ட விஷயங்கள் விபீஷணனது தன்மையை நன்



ளும் விளக்குகிறது. அதை விட ராமனது தன்மையை அதிகமாய் விளக்குகிறது என்று சொல்லலாம்.

விபீஷணனது லக்ஷ்யங்களையும், தர்மப் பாங்கையும், அனுதாபத்தையும் அப்படி அப்படியே இதயம் ஒட்டியவாறாக ராமன் அனுபவிக்கிறான். இதயம் உருகி விடுகிறது ராமனுக்கு.

இந்தச் செய்யுளை வைத்தே ராமன் விபீஷணன் ஆகிய இரண்டு பாத்திரங்களுக்கும் உள்ள அன்யோன்னிய சம்பந்தத்தை அறிய வேண்டியிருக்கிறது. மேலே போகப் போக இது நன்றாக விளங்கும்.]

* * *

வானர வீரர்களைப் பார்த்துப் பேசுகிறான் ராமன்:

"வேறு என்ன சொல்லக் கிடக்கிறது? அனுமன் சொன்ன வார்த்தையே வார்த்தை! அவன் சொன்னதே நமக்கான காரியம். வேறாக முடிந்தாலும் நமக்குக் கவலையில்லை."

மாற்றினி உரைப்பதில் லை,
மாருதி வடித்துச் சொன்ன

வெற்றியே வெற்றி! அன்ன(து)
அன்றெனிற்,—பிறிதொன்று ஆக,

வெற்றியே பெறுக, தோற்க;
வாழ்க, வாழாது வீழ்க;

பற்றுதல் அன்றி உண்டோ,
புகல்எமைப் பகர்கின்றானை.'

[மாருதி வடித்துச் சொன்ன வெற்றியே வெற்றி: அனுமன் தெளிவுபடச் சொன்ன காரியமே நமக்கான காரியம்; அன்னது அன்றெனில்: அது ஒவ்வாத காரியமாய்ப் போய் மாறாக முடிந்தாலும் கவலையில்லை; வெற்றியே பெறுக, தோற்க: வெற்றி வந்தாலும் சரி, தோல்வி வந்தாலும் சரி; வாழ்க வாழாது வீழ்க: நாம் வாழ்ந்தாலும் சரி, வாழாது இறந்து ஒழிந்து போனாலும் சரி; பற்றுதல் அன்றி உண்டோ புகலெமைப் பகர்கின்றானை: நம்மோடு சேர்த்துக் கொள்ளுதல் அல்லாமல் வேறு என்ன இருக்கிறது செய்வதற்கு—அடைக்கலமாக வந்தவனை!]

விபீஷணனைச் 'சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று ராமன் சொல்லுகிறதில் ராஜ தந்திரத்துக்கு ஆன அம்சம் கொஞ்சமும் இல்லை. அனுதாபமும் உணர்ச்சியும் மேலிட்ட காரணத்தினாலேயே சொன்ன சொல் அது. 'வாழ்க, வாழாது வீழ்க' என்றல்லவா சொல்லுகிறான்! வெற்றியைப் பொருட்படுத்தவில்லை தானே?



வட்ட மேஜை

* சபாஷ்!

ஜூலை 24-ம் தேதி "கல்கி" இதழில் நீங்கள் எழுதியிருந்த "கல்வி நோய்க்கு ஒரு சஞ்சீவி" என்ற தலையங்கத்தை வரவேற்கிறேன். என் போன்றவர்கள் 'இரண்டெழுத்து'ம் படித்ததும் பெற்றோர்களின் தொழிலைச் செய்ய விரும்பாமல் வேறு ஏதாவது உத்தியோகம் தேட அலைகிறார்கள். காரணம், தொழில் செய்வது கேவலம் என்று அவர்கள் நினைப்பதுதான். தற்போதைய கல்வி முறையினால் ஏற்படும் சிக்கல்களில் இதுவும் ஒன்று. இதற்கு என் வாழ்க்கையில் நடந்த சம்பவத்தையே குறிப்பிட விரும்புகிறேன்.

நான் மருத்துவக்குல (நாவிதர்) வகுப்பைச் சேர்ந்தவன். என் தந்தை ஒரு 'பார்பர் ஷாப்'பில் மாதச் சம்பளத்திற்கு வேலை பார்த்து வந்தார். அவருக்கு நான் ஒரே மகனானதால் என்னை அவர் தம் தொழிலில் பழக்கிவிட விரும்பவில்லை. நான் படித்து உத்தியோகம் பார்க்க வேண்டும் என்பது அவர் ஆசை. நானும் ஒழுங்காகப் படித்து வந்த வகுப்பிலும் 'பெயி'லாகாமல் 5-வது பாரம் வரை வந்துவிட்டேன். ஆங்கிலத்திலும், கணக்கிலும் முறையே 7, 4 மார்க்குகள் குறைவு என்பதற்காக என்னை அதே வகுப்பில் உட்கார வைத்துவிட்டார்கள். 'என் பெரியப்பா ஒருவர், நான் படித்தது போதும் என்றும் எங்கள் குலத் தொழிலையே எனக்குக் கற்றுக் கொடுக்கும்படியும் என் தந்தையிடம் சொன்னார். அதற்கு என் தந்தை சம்மதிக்கவில்லை.

"கத்தி பிடித்து க்ஷவரம் செய்யும் தொழில் என் தலையோடு போகட்டும். அவனாவது இரண்டெழுத்துப் படித்து ஏதாவது உத்தியோகம் பார்க்கட்டும்" என்று சொல்லி விட்டார். தம் தொழிலைக் கற்றுக் கொள்ளும்படி என் தந்தையே அப்போது வற்புறுத்தி யிருந்தாலும்கூட நான் செய்திருக்க மாட்டேன். அந்தத் தொழிலை நான் அவ்வளவு கேவலமாக எண்ணியிருந்தேன். என் சாதியைச் சொல்லிக் கொள்வதற்கே வெட்கப்படும் நான் அந்தத் தொழிலை எங்கே செய்திருக்கப்போகிறேன்? நான் இங்கிலீஷ் படித்து உத்தியோகம் பார்க்க வேண்டும் என்ற ஆசையில் தம் கஷ்ட ஜீவனத்தையும் பொருட்படுத்தவில்லை என் தந்தை.

நான் எஸ்.எஸ்.எல்.ஸி. பரீட்சை தேறியவுடன் உத்தியோகம் தேடும் படலத்தில் இறங்கினேன். தினந்தோறும் பத்திரிகைகளில் வரும் தேவைக் காலத்தைப் பார்த்து அந்த இடங்களுக்கெல்லாம் மனுச் செய்து கொண்டேன். எத்தனையோ அதிகாரிகளை நேரிலும் பேட்டி கண்டேன். ஒன்றும் பலனில்லை. படித்தும் உத்தியோகத்துக்கு வழியின்றித் தவித்தேன். வேலை தேடுவதிலேயே இரண்டரை வருடத்தைக் கழித்து விட்டேன். என் பெற்றோரைப் போஷிக்க வேண்டிய பொறுப்பு என் கையிலிருந்தது. ஆகவே, வேறு வழியின்றி எங்கள் குலத் தொழிலையே செய்வது என்ற முடிவுக்கு வந்தேன். முதன் முதலில் கத்தியைக் கையில் பிடித்தபோது எனக்குத் தாங்க முடியாத அழுகை வந்துவிட்டது. என்னுடன் பள்ளியில் படித்த நண்பர்கள் சிலர் நான் வேலை செய்துகொண்டிருந்த கடைக்கு வரும்போதெல்லாம் என் உடல் நாணத்தால் குன்றிப் போகும். இதெல்லாம் சில மாதங்கள் வரைதான். நாளடைவில் எல்லாம் சரியாகிவிட்டது. இன்னும் சில மாதங்களில் நானே சொந்தத்தில் கடை வைக்க உத்தேசித்திருக்கிறேன். இப்போது சர்க்கார் உத்தியோகம் கிடைப்பதாயிருந்தால்கூட நான் போவதற்குத் தயாரில்லை.

செங்கற்பட்டு
28—7—49

ஆர். காசி

[உங்கள் கடிதம் ஆயிரக்கணக்கான படித்த இளைஞர்களின் கண்களைத் திறக்கும் என்று நம்புகிறோம். நூற்றுக்கு ஒருவர் ஆங்கிலப் படிப்புப் படித்து வந்த காலத்தில் படித்தவர்களுக்கெல்லாம் உத்தியோகம் கிடைத்து வந்தது. இனிமேல் அம்மாதிரி படித்தவர்களுக்கெல்லாம் உத்தியோகம் கிடைக்கும் என்ற ஆசையைக் கண்டிப்பாக விட்டுவிட வேண்டும். பள்ளிக்கூடத்தில் படிக்கும்போதே வேறு கைத்தொழில் ஒன்று அவசியம் கற்றுக்கொள்ள வேண்டும். அது பரம்பரையாக வந்த பெற்றோர்களின் கைத்தொழிலாயிருந்தாலும் சரிதான்; வேறு புதிய கைத்தொழிலாயிருந்தாலும் சரிதான். தொழில்களைச் சாதிவாரியாகப் பிரித்துச் செய்

யும் கொள்கை இனி ஒருகாலும் செல்லாது. ஆனால் கைத் தொழில் செய்வது இழிவு என்ற கொள்கையும் பலி ஏறிவிட்டது. எந்தத் தொழில் செய்தாலும் அதனால் உயர்வு தாழ்வு இனிமேல் மக்களுக்கு ஏற்படாது. ஏதேனும் ஒரு கைத் தொழில் தெரிந்திருந்தால் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் பற்றிய கவலையே யில்லை. அதே சமயத்தில் பெரிய படிப்புப் படித்துப் பெரிய உத்தியோகங்களுக்குப் போவதற்கும் அது தடையாயிராது. —ஆசிரியர்.]

★

விவேகானந்தர் கூறும் கல்வி

“கல்வி யென்பது ஒருவனுடைய மூளையில் பல விஷயங்களைத் திணிப்பதன்று. அப்படி திணிக்கப்படும் விஷயங்கள் வாழ்நாள் முழுதும் ஜீரணமாகாமல் உபத்திரவம் செய்யும். அதனால் என்ன பயன்? கல்வியானது, உயிரூட்டுவதாய், ஆக்க மளிப்பதாய், ஒழுக்கம் அமைப்பதாய் இருக்க வேண்டும். வெறும் விஷயங்களைச் சேகரிப்பதுதான் கல்வியென்றால் புத்தகசாலைகளன்றோ மகான்களாக இருக்கும்? அகராதிகளன்றோ மகரிஷிகளாகிவிடும்? ஆத்மிக, லௌகிகக் கல்விகளை இயன்றவரை தேசீய முறையில் நிர்மாணம் செய்வதே நமது லட்சியமாகக் கொள்ள வேண்டும்” என்று விவேகானந்தர் கூறுகிறார்.

தற்பொழுது கிராமப் பள்ளிகளில் அநேக பாடசாலைகள் ஒழுங்காக நடக்காததன் காரணம், பிள்ளைகள் வயலில் நாள் முழுதும் வேலை செய்யும் தம் பெற்றோர்களுக்கு, உணவோ, அல்லது தேவையான சாமான்களையோ எடுத்துச் சென்று உதவுவதால் பள்ளிக்கூடத்துக்குச் சரியாகப் போக முடிவதில்லை. உங்களுடைய “ஒருவேளை பள்ளிக்கூடம், இரண்டரை மணிப் படிப்பு” நடைமுறையில் வருமேயானால் அவன் பள்ளிக்கூடமும் செல்வான்; தன் தாய் தகப்பனுக்கு உதவியும் செய்வான்; தன் பெற்றோர் தொழிலை மறக்கவும் மாட்டான்; சர்க்கார் உத்தியோகம் பார்க்க விரும்பவும் மாட்டான்; எதிர்நோக்கியிருக்கும் வேலையில்லாத் திண்டாட்டமும் ஒழியும்.

தற்பொழுது படிக்கும் மாணவர்களால் Notesகளுக்கும், புத்தகங்களுக்கும் செலவழிக்கப்படும் பணம் மிக அதிகம்; மற்றும் அந்த Notesகளை வாங்குவதால் பாடசாலையில் ஆசிரியர் சொல்லும்போது கவனிப்பதில்லை. வீட்டில் வந்து உருப்போடுகின்றனர். அதனால் அவர்கள் மூளை வறள்கிறது. உடல் உருகுகிறது. இதைப் போக்க உங்கள் “சஞ்சீவி”யை சர்க்கார் காரியதரிசிகளும், கல்வி இலாகா அதிகாரிகளும் சாப்பிட்டுக் கஷ்டம் என்று சொல்லும் வியாதியை நீக்கிக் கொள்வார்களாக!

கோவை
27—7—49

கு. பரமேஸ்வரன்

★

செலவில்லாத சிகிச்சை

10—7—49 கல்வி இதழில் “வரி போட வழி சொல்லுகிறோம்” என்ற தலையங்கத்தின் முடிவில் “ஏழைகளைப் பாதிக்காமல் பணக்காரர்கள் முதலாளிகளுடைய லாபத்திலிருந்து பங்கு எடுத்துக் கொள்ளும் வரிகளாய்ப் பார்த்துப் போடுங்கள்” என்று பொது மக்களின் சார்பில் தாங்கள் எழுதியிருந்தது.

“சமன்செய்து சீர்தூக்குங் கோல்போ லமைந்தொருபாற்
கோடாமை சான்றோர்க் கணி”

என்ற குறளை யனுசரித்து, உள்ள விஷயங்களை மறைக்காமல் யாவரும் ஏற்றுக்கொள்ளும் விதமாய் அமைந்திருந்தது.

தாங்கள் குறிப்பிட்டிருக்கும் சஞ்சீவி மருந்து எல்லா நோய்களையும் அகற்றக் கூடியது. குழந்தைகள் தாங்களாகவே முன்வந்து சந்தோஷமாய் உட்கொள்ளும் ருசியுடையது. ஒரு தம்பிடிகூடச் செலவில்லாமல் இயற்கையாய்க் கிடைக்கும் மருந்து. “சர்வ ரோக நிவாரணி” என்று அநுபவம் வாய்ந்த வைத்தியர்களால் புகழப்படும் வகையில் தயாரிக்கப்பட்டிருக்கும் அமிருத சஞ்சீவி. ஆகவே இதைப் பெற்றோர்கள் குழந்தைகள் ஆகிய எல்லோரும் ஏகமனதாய் வரவேற்கிறார்கள். ஆனால் இதை உபயோகிக்கும் அதிகாரம் சர்க்காரிய டாக்டர்களிடம் இருப்பதால், அவர்கள் சாக்குப் போக்குகளைச் சொல்லிப் பிடிவாதம் செய்யாமல் ஒப்புக்கொள்ள வேண்டுமே என்ற சந்தேகமும் ஒருபுறம் இருக்கத்தான் இருக்கிறது.

தங்கள் ஆலோசனைகள், இனிமேல் ஆரம்பக் கல்வியின் பெயரால் அதிக வரி போடாமலிருக்கும் வகையிலும் அமைந்திருப்பதால் பொதுஜன நன்மையில் ஈடுபட இதைவிட



பையன்:—பாட்டி, இன்றைக்குச் சுதந்திரத் திருநாள் அல்லவா? சுதந்திர மலர் வந்திருக்கிறது! நாற்பது பக்கம் நாலணாவாம்! ஒன்று வாங்கட்டுமா?

பாட்டி:—வேண்டாம், வேண்டாம். நாற்பது பக்கமும் முழுக்க அச்சடித்திருக்கும்! உனக்கு என்னத்துக்கு அது?

வேறு சுலபமான மார்க்கமும் சந்தர்ப்பமும் கிடைக்கும் என்று தோன்றவில்லை.

தஞ்சாவூர்
26—7—49

துரையப்ப பாகவதர்

★

ஒரு பென்சிலின்

சாதாரணமாக இப்பொழுது பள்ளிக்கூடத்தில் காலையில் மூன்று மணி நேரப் படிப்பும் மாலையில் இரண்டரை மணி நேரமும் நடக்கிறது. காலையில் வகுப்பிற்கு வரும் மாணவர்கள் இரண்டேகால் மணி நேரம்தான் அக்கறையாகப் பாடத்தைக் கவனிக்கிறார்கள். (அதாவது மூன்று பீரியட்.) நான்காவது பீரியட்டில் மாணவர்கள் படிப்பில் அதிகமாகக் கவனத்தைச் செலுத்த முடிவதில்லை. ஏனென்றால் மூன்று பாடங்களில் சுறுசுறுப்பாக இருந்த மூளையின் சக்தி நான்காவது பாடத்தில் குறைந்து விடுகிறது. இந்தச் சமயத்தில் மாணவர்கள் தங்கள் கவனத்தைப் பாடத்திலிருந்து வேறு வழிகளில் செலுத்த நேரிட்டு விடுகிறது. இந்த நிலையில் மாணவர்கள் உள்ளத்தில் விருவிருப்பில்லாமல் அந்தப் பீரியட்டில் நடக்கும் பாடம் கவனிக்கப்படாமல் போய் விடுகிறது. இதே போன்றுதான் மாலையிலும். இது நன்றாக ஆசிரியர்களுக்கும் தெரியும்; இருந்தபோதிலும் கடமைக்காகப் பாடத்தை அழுது தீர்த்து விடுகிறார்கள்.

அந்தப் பீரியட்டில் வரும் பாடம் மிகமுக்கியமானதாகவும் இருக்கலாம். சில சூட்டிகையாக உள்ள மாணவர்கள் வேண்டுமானால் ஆசிரியர்கள் சொல்லிக் கொடுக்காமல் இருக்கும் போதே புரிந்து கொள்ளலாம். ஆனால் என்னைப்போல் சொல்லிக் கொடுத்தால்தான் புரிந்துகொள்ள முடியும் என்னும் நிலையில் உள்ள மாணவன் என்ன செய்ய முடியும்?

தாங்கள் சொல்லும் திட்டம் கல்வி நோய்க்கு ஓர் பென்சிலின் இன்ஜெக்ஷன்.

குடியாத்தம்
24—7—49

என். எம். பத்மநாபன்

★

போதுமானது

தாங்கள் ஜுலை 24-ந் தேதி இதழில் வெளியிட்டுள்ள 'கல்வி நோய்க்கு ஒரு சஞ்சீவி' என்ற தலையங்கத்தைப் படித்தேன்.

கிராமங்களில் சென்று பார்த்தால், எத்தனையோ பெற்றோர்கள் தம் குழந்தைகளைப் படிக்கவைக்க வசதியின்றி வருந்துவதைக் காணலாம். பெற்றோர்கள் தம் தொழிலில் தங்கள் குழந்தைகளைத் திருப்புவது மிகவும் நல்லது. இருபது வயதுவரை அறிவற்று, பள்ளிப் படிப்பையே பயன்தரத்தக்கதென்று படித்து, அதன் பிறகு பட்டதாரிகளாக வெளி வருபவர்கள் குமாஸ்தா வேலைக்கு மட்டுமே தகுதியுள்ளவர்களாகின்றனர். அக்குமாஸ்தா வேலையும் கிடைக்காவிட்டால் அவர்கள் வேலையில்லாத் திண்டாட்டத்தில் அடிபடுகின்றனர். இதைவிடச் சிறு வயதிலேயே தகுந்த தொழில் கற்று, வேலை கிடைக்காவிட்டாலும், விவசாயத்திலோ அல்லது கற்ற தொழிலிலோ இறங்குவது மிகவும் நல்லது.

எல்லோருக்கும் ஓரளவு கல்வியறிவு இன்றியமையாதது. இந்த ஊரிலுள்ள 'ஸநாதன தர்ம வித்யாசாலை''யில் 1-வது வகுப்பு முதல்



மனைவி:—பத்திரிகையிலே பார்த்தேன். அரிசிச் சோறு சாப்பிடுகிறவர்களுக்குத்தான் தொந்தி விழுகிறது என்று போட்டிருக்கிறது!

கட வித்வான்:—ஆமாம்; அதனாலேதான் வடநாட்டிலே கட வாத்தியமும் கிடையாது!

5-வது வகுப்புவரை எல்லோருக்கும் இலவசக் கல்வி அளிக்கப் படுகிறது. குழந்தைகளின் எண்ணிக்கை மிகவும் அதிகமாயிருப்பதால், இவர்களை இரண்டு பிரிவுகளாகப் பிரித்து, முதல் பிரிவுக்குக் காலை 9-30 மணி முதல் 12-30 வரையும் மற்றொரு பிரிவுக்கு மாலை 2-மணி முதல் 5-மணி வரையும் சொல்லிக் கொடுக்கின்றனர். இதனால், ஒரு குழந்தைக்குத் தினம் 3-மணி நேரம் வீதம் 5 நாட்களில் 15 மணி நேரம் கல்வி கற்பிக்கப் படுகிறது. குழந்தைகள் மற்ற நேரங்களில் பெற்றோர்களுக்கு உதவி புரியவும் தொழில் கற்கவும் வசதி அளிக்கிறது இத்திட்டம். குழந்தைகளுக்கு ஒரு நாளைக்கு 3 மணி நேரம் படிக்கும் விஷயங்கள் போதுமானது. இந்த வழியையே நம் சென்னை சர்க்காரும் பின்பற்றினால் 100-க்கு 71 பேரும் ஐந்தாவது வகுப்பை எட்டி விடுவார்கள்.

ஆலப்பிழை
26—7—49

எஸ். என். ராமையா

★

நல்ல யோசனைதான்!

ஜுலை 24-ம் தேதி 'கல்கி' இதழில் 'கல்வி நோய்க்கு ஒரு சஞ்சீவி' என்னும் கட்டுரையைப் படிக்க நேர்ந்தது. அந்தமாதிரி பள்ளிக்கூட நேரங்களை மாற்றி அமைத்தால் குழந்தைகளுக்கு மிகவும் நன்மையாகவும் பெற்றோருக்கு உபயோகமாகவும் இருக்கும். 'படிப்பு, படிப்பு' என்று பகல் பூராவும் பள்ளிக் கூடத்தில் கழிந்துவிடுகிறது. பின் மாலை வீட்டுக்கு வந்தால் அன்றைய பாடங்களைப் படிப்பதிலேயே மீதிப் பொழுதும் கழிந்து விடுகிறது. கடைக்குப் போவது முதலிய சிறு வேலைகளைக்கூடப் பெற்றோர்களே செய்ய வேண்டி யிருக்கிறது. இப்படியாக வெளியுலகில்—ஏன், வீட்டிலுங்கூட என்ன நடக்கிறது என்பதை அறிய சக்தியற்றவர்களாக வளர்ந்து விடுகிறார்கள் குழந்தைகள். ஆம்

லைம் முதலிய பாடங்களில் வகுப்பில் முதலாக இருந்த நான், கல்யாணமாகி இரண்டு பேர் அடங்கிய ஒரு குடும்பத்தை நிர்வகிக்கும் போது எத்தனையோ விதக் கஷ்டங்களுக்கு உள்ளாகவேண்டியிருக்கிறது. இதைச் சொல்லிக்கொள்ள எனக்கே வெட்கமாயிருக்கிறது. 'படித்த பெண் குடும்பத்துக்கு லாயக்கில்லை' என்பது மெய்யாகிவிடுகிறது. தங்களுடைய யோசனையின்படி பள்ளிக்கூட நேரம் அமைந்தால் பெண்கள் கல்வி பயிலவும், குடும்ப நிர்வாகத்திலும் திறமைசாலிகளாக இருக்க முடியும் என்பது என் அபிப்பிராயம்.

திருப்பத்தூர்
26—7—49 பங்கஜம்

★

வரவேற்பு

ஜூலை 24-ந் தேதி இதழில் 'கல்வி நோய்க்கு ஒரு சஞ்சீவி' சொல்லியிருக்கிறீர்கள். நம் மாகாணத்து 70 லட்சம் குழந்தைகளுக்கும் உடனடியாக ஆரம்பக் கல்வி அளிக்க முறை வகுத்திருக்கிறீர்கள். 'ஒரு வேளைப் பள்ளிக்கூடம்; இரண்டரை மணிப் படிப்பு'—இதுதான் முறை. டாக்டர் மார்க்கனுடைய கசந்த மருந்தில் நீங்கள் சேர்த்திருக்கும் சர்க்கரை 'தினமும் பயிலுதல்', 'இடைவேளை கொடுத்துப் பயிலுதல்' என்ற உளநூல் விதிகளை அனுசரித்திருக்கிறது.

நான் வேலை பார்க்கும் முஸ்லிம் பாடசாலையில் சுமார் 300 மாணவர்கள் பயில்கிறார்கள். தங்கள் முறைப்படி இதே பள்ளிக்கூடம், இதே ஆசிரியர்களைக் கொண்டு இதே பொருட் செலவில் 600 மாணவர்களைப் பயிற்றுவிக்க முடியும் என அறியும்பொழுது அளவிலா ஆனந்தமடைகிறேன். ஒரு ஆசிரியன் என்ற முறையில் தங்கள் முறையை உற்சாகமாக வரவேற்கிறேன்.

வாக்காடு
27—7—49 ச. கந்தசாமி

★

யாரிடம் சொல்வது ?

நான் 5-ம் பாரத்தில் படிக்கும் ஒரு மாணவி. எங்கள் பள்ளிக்கூடம் ஜில்லா போர்டு நிர்வாகத்தில் இருக்கிறது. எனக்குப் படிக்கவேண்டும் என்கிற ஆர்வம் நிறைய இருக்கிறது. ஆனால் ஸ்கூல் பீஸ், அந்த பீஸ், இந்த பீஸ் என்று சராசரி 10 ரூபாய்க்கு மேல் வாங்கிவிடுகிறார்கள். நானோ ஏழைக் குடும்பத்தில் பிறந்தவள். எனக்குத் தகப்பனார் கிடையாது. தாயாருக்கோ வருவாய் இல்லை. தம்பிகள் வேறு படித்துக் கொண்டிருக்கின்றனர். போன மாதம் மட்டும் ரூ. 27-க்கு மேல் சம்பளம் எனக்கும் எனது தம்பிக்குமாகக் கட்டியிருக்கிறேன். போதாக் குறைக்கு எட்டு மாதச் சம்பளத்திலிருந்து 10 மாதமாக ஆக்கியிருக்கிறார்கள். புஸ்தகங்களை வேறு வருஷா வருஷம் மாற்றுவதால் புதுப் புதுப் புத்தகங்கள் வாங்கவேண்டியிருக்கிறது. நோட்டுப் புத்தகங்கள் வேறு கணக்கிலடங்காமல் வாங்கவேண்டுமாம். இதையெல்லாம் எனது தாயாரிடம் சொன்னால் "நீ படித்ததுபோதும், நிறுத்திவிடு!" என்று சொல்கிறாள்.

எனக்கோ படிக்கவேண்டும் என்கிற ஆவலுக்குக் கணக்கே இல்லை. நானும் பள்ளியில் நல்ல மார்க்குகள்தான் வாங்கியிருக்கிறேன். ஏதாவது உபகாரச் சம்பளம் (Scholarship) கொடுங்கள் என்று கேட்டால் 'அது என்ன?' என்று கேட்கிறார்கள், எங்கள் பள்ளிக்கூடத்தில். இம்மாதிரி நிலையில் பெண்கள் கல்வி பயிலவேண்டுமென்று தேசியவாதிகள் செய்யும் பிரசாரம் விழலுக்கிறைத்த நீராகிறது.

அரியலூர்
23—7—49 என். மைதிலி

★

கல்லூரியில் படிக்காமலே....

சென்ற இதழ் "கல்வி"யில் வெளிவந்த "சில கல்விப் பிரச்னைகள்" என்ற கட்டுரை "படா ஜோர்!" மன்னியுங்கள்! கொச்சைத் தமிழில் எழுதியதற்கு மன்னியுங்கள்! அதில் கூறியபடி அமெரிக்கா போன்ற நாடுகளில் பல இளைஞர்கள் பகல் வேளையில் வேலை செய்து சம்பாதித்து, இரவிலோ அல்லது ஓய்வு நேரங்களிலோ படித்துச் சர்வ கலாசாலைப் பட்டம் பெற வசதி இருக்கிறது. நம் நாட்டிலும் நாகபுரி, ஆந்திர சர்வகலாசாலைகள் இண்டர் பாஸ் பண்ணியவர்கள் காலேஜ்களுக்குச் சென்று படிக்காமல் வீட்டிலேயே படித்து பி. ஏ. போன்ற பரீக்ஷைகள் எழுத அனுமதி அளித்திருக்கின்றன.

நமது சென்னை சர்வகலாசாலையும் மேற்கண்ட வசதி அளித்துப் பரீக்ஷைகள் எழுத அனுமதித்தால் சர்வ கலாசாலைக்கு வருமானம் அதிகம் ஏற்படும். "காலேஜில் இடம் அகப்படவில்லை" என்ற கூக்குரல்களும் குறைந்து போகும். மேலே படிக்க வசதி இல்லாத அநேக ஏழை மாணவர்களும், பி.ஏ. போன்ற டிகிரி பரீக்ஷைகள் எழுதிப் பாஸ் செய்வார்கள். இதனால் அவர்களுக்கு உத்தியோக உயர்வு போன்ற விஷயங்களில் வசதியும் உண்டாகும். எல்லோருக்கும் ஸௌகரியமான இந்தப் பரீக்ஷை எழுதும் விஷயத்தை நமது கனம் கல்வி மந்திரி, உப அத்யக்ஷகர் முதலானோர் கவனிக்க வேண்டும்.

சென்னை
7—8—49 கே. நாராயணசாமி

★

கல்விப் பஞ்சம் ஒழியுமா ?

இந்த ஆண்டு இவ்வூர் உயர்நிலைப்பள்ளியில் முதல் பாரத்தில் சேருவதற்குச் சுமார் 200 பேருக்குமேல் வந்தனர். பெற்றோர்கள் இந்தக் கஷ்ட காலத்திலும் சம்பளம் கட்டித் தங்கள் பிள்ளைகளைப் படிக்க வைக்க முன்வந்தார்கள். ஆனால் சர்க்கார் அதிகப் பிரிவுகள் (Section) வழங்காமையால் சுமார் 120 மாணவர்களே சேர்த்துக் கொள்ளப்பட்டனர். மற்ற மாணவர்கள் கதி என்ன ஆவது ?

ஆகையால் தாங்கள் சொல்லுகிறபடி தினம் இரண்டரை மணி நேரப் படிப்பு நம் நாட்டுக்கு மிகவும் இன்றியமையாதது. அது தான் இந்நாட்டின் கல்விப் பஞ்சத்தை ஒழிக்கும் மருந்து. அப்பொழுதுதான் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளைப் படிக்க வைக்க முன் வருவார்கள். பிள்ளைகளுக்கும் ஓய்வு இருக்கும். உலக விஷயங்களை அறியவும், குடும்ப வேலைகளைக் கவனிக்கவும் உதவும். தினமும் மாணவர்கள் ஆறு ஏழு மணி வரை பள்ளிக்கூடத்தில் அடைந்து கிடப்பதால் அறிவு வளர்ச்சி தான் தடைப்படுகிறது.

கடம்பூர்
2—8—49 க. ர. கணேசன்

★ வட்டமேஜைப் பரிசுத் தொகை ரூ. 25-ஐ 'சபாஷ்!' என்ற கடிதம் எழுதிய செங்கற்பட்டு எம். காசி அவர்களுக்கு வழங்கப்பட்டது.

அதிகப்படியான மைல்கள்

Firestone

De Luxe CHAMPION TYRES

பயர்ஸ்டோன்


டிலக்ஸ் சாம்பியன் டயர்களிலுள்

இரண்டு அடுக்குகள் அதிகமான கம்-டிப்பிடு கயிறு பிணைப்புகள் கொண்டவை.

அகலமான அழுத்தமான விடாமிக் ரப்ப ருடன் விசேஷ முறையில் சேர்த்து செய் யப்பட்ட வரம்புகளுடன் கூடியவை.



இன்று சிறந்தது - நாளை இன்னும் சிரேஷ்டமானது



சருமம் எரிச்சல் கொடுக்கையில், எங்கிருந்து குஷி வரும்?

உங்கள் குழந்தையின் மெல்லிய சருமம் அடிக்கடி வரண்டு எரிச்சல் கொடுக்கக் கூடும். அச்சமயங்களிலெல்லாம் கொஞ்சம் ஜான்ஸன்ஸ் பேபி பவுடர் அவனுடைய தளிர்மேனிமீது தூவுங்கள் - வெகு இதமாகவிருக்கும்! அவனை குளிப்பாட்டிய பிறகும், உடை மாற்றும்போதும், தவிர, அவனுக்கு உஷ்ணமோ வியர்வையோ தோன்றும்போதும் பட்டுப்போன்று மிருதுவான இந்த பவுடரை உபயோகியுங்கள். குழந்தை சௌகரியமாயிருக்கும்பொழுது எவ்வளவு குஷியாக இருக்கிறான் என்பதைக் கவனியுங்கள்!



குழந்தைக்குச் சிறந்தது—உங்களுக்கும் சிறந்தது.

ஜான்ஸன்ஸ் பேபி பவுடர்

இந்தியாவிற்கு ஏகபோக விநியோகஸ்தர்கள்:

ஜான்ஸன் & ஜான்ஸன் தயாரிப்பு

ஐ. ஸி. ஐ. (இந்தியா) லிட்.

விகாரமான வேக்காடு மறைகிறது



கிட்டத்தட்ட புத்திக் கோளாறுதான்!

"சில மாதங்களுக்கு முன் சரும வேக்காட்டினால் மிகவும் அவஸ்தைப் பட்டேன். அதுவும் இரவு நேரத்தில் படுத்திருக்கும்போது பைத்தியம் பிடித்ததுபோலவே இருந்தது. உங்களது விசித்திர தயாரிப்பாகிய வெல்டர்மாவுக்குப் பெரிதும் நன்றி செலுத்த வேண்டுமென்று நான் மனப்பூர்வமாகக் கூறுவேன். வெல்டர்மாவை சில தடவைகள் உபயோகித்த பிறகுதான் வெந்த சருமம் பூரணமாக சொஸ்த மடைந்தது. அநேக இதர மருந்துகளை உபயோகித்தேன். ஆனால் வெல்டர்மாவுக்கு இணை வேறெதுவும் கிடையாது என்பதே என் உறுதி. எனக்குப் பிடித்த மருந்து அதுதான்."

—மிஸஸ் D. F. ஏஞ்சல்

இருவித கிருமி நாசன வேலை

சருமத்தின்மேல் முதல் தடவையாகப் பட்டவுடனேயே வெல்டர்மாவின் இருவித கிருமி நாசன சக்திகளும் வேலை செய்யத் தொடங்குகின்றன. அநேக சரும ரோகங்களுக்கு ஆஸ்பதமான பல்வேறு ரக கிருமிகளை இருமடங்கு வேகத்தில் கொன்று நாசமாக்குகின்றன. அதிலுள்ள கிருமி நாசன சக்திகள் இரண்டும் பல்வேறுவித விஷக் கிருமிகளுக்கு இரண்டு சத்துருக்களாகும்.

சருமத்தினூடே செய்யும் வேலை

எரிச்சல் அடங்குகிறது. நமைச்சலும் வேக்காடும் இருந்த இடம் தெரியாமல் மறைந்து விடுகின்றன. சருமம் சுத்தமாகவும் சுகமாகவும் ஆகிவிடுகிறது. எக்ஸிமா, கொப்புளங்கள், வேக்காடுகள், பருக்கள், மற்றும் சருமத்திற்கு அடியில் ஏற்படும் இதர ரோகங்களெல்லாம் சொஸ்தமாகின்றன. ஏனெனில், வெல்டர்மா சருமத்தினூடே சென்று ரோகத்திற்கு மூலாதாரமான இடத்திலேயே தாக்குகிறது.

நீரில் - எண்ணைச் - சேர்க்கையெனும் அடிப்படையில் தயாரிக்கப் பட்டிருப்பதால் நோய்ப்பட்ட இடத்திலுள்ள விஷத்தை வடிகட்டி வெளியேற்றுகிறது வெல்டர்மா. ஆகையால் மீண்டும் நோய் தொத்தி விடாமல் பாதுகாப்பளிக்கிறது. வழுவழுப்பான வெல்டர்மா பிசுக்கற்றது. கறை படாது, உபயோகித்த இடம் புலனாகாது. ஆகையால் எந்த இடத்திலும் எந்த நேரத்திலும் உபயோகிக்கலாம். எல்லா சிறந்த கெமிஸ்டுகளிடமும், டீலர்களிடமும் கிடைக்கும்.

ஜியாப்ரே மானர்ஸ் அன் கோ., லிமிடெட்
பம்பாய் — கல்கத்தா — டில்லி — மதராஸ்



DOUBLE-ANTISEPTIC
Valderma
THE *Non-Greasy* BALM

V. 1.

பாலுட்ரின்

Trade Mark

மலேரியாவிலிருந்து பாதுகாத்துக் கொள்ளுவதற்கு

இப்பொழுது

கடைகளில் கிடைக்கிறது



புதிய
வாராந்திர
மாத்திரை

புதிய இகானமி ஸ்டிரிபில்

பாலுட்ரின் இப்பொழுது ஒரு புதிய, பெரிய அளவில், 0·3 கிராம் மாத்திரையாக கிடைக்கிறது. இந்த புதிய மாத்திரை உங்களை மலேரியாவிலிருந்து ஒரு வாரம் வரை பாதுகாக்கிறது. மலேரியாவினால் கஷ்டப்படும் பொழுது, டாக்டர் இரைக்கும் வரை, தினம் ஒரு மாத்திரை சாப்பிடவும்.

இந்தப் புதிய மாத்திரைகள், சுத்தமான முறையில், ஒரு ஸ்டிரிப்பில் 8 மாத்திரைகள் வீதம் பாக் செய்யப்பட்டிருக்கிறது. இவைகள் ஈரத்தினால் பாதிக்கப் படாதவை.


ஒரு அணா

இம்பீரியல் கெமிகல் இண்டஸ்ட்ரீஸ் (இந்தியா) லிட்.

ICI

Edited, Printed and Published by R. Krishnamurthy, at the "Kalki" Press
116-119, Sladens Gardens, Poonamallee High Road, Kilpauk, Madras

கல்கி



KALKI ஆகஸ்டு 21, 1949 4 அணா

டி.எஸ்.ஆர்.



டி. எஸ். ஆர். தைலங்களை ஆயிரக்கணக்கான மக்கள் விரும்பி உபயோகிப்பதற்குக் காரணம் அவைகளின் சிறந்த குணமே. ஆயுர்வேத சாஸ்திரிய முறைப்படி தயாரித்த சந்தனாதித் தைலம், அரைக்கீரை விதைத் தைலம் மூளைக்குக் குளிர்ச்சியையும் சருமத்திற்குப் பளபளப்பையும் கொடுக்கின்றன.

டி.எஸ்.ஆர் & கோ.
கும்பகோணம்


கோவை, நீலகிரி ஜில்லாக்கள்
அன் பாலக்காடுக்கு ஏஜண்டு :
B. பாலபட்டாபி
(Estd. 1933)
த. பெ. நெ. 182, கோயமுத்தூர்

மதராஸ் டிப்போ :
157, லாயிட்ஸ் ரோடு,
ராயப்பேட்டை, சென்னை

ஆகாரத்திற்கு பின்

வயிற்று நோயா ?

இதுதான்
நான் சிபார்சு
செய்வது



உங்களுக்கு வேண்டியது

BISMAG

எல்லா கெமிஸ்டுகளிடமும், ஸ்டோர்களிலும் பவுடராகவும் மாத்திரையாகவும் கிடைக்கும்.

இந்தியாவிற்கு பூரண விநியோகஸ்தர்கள் :
ஜியாப்ரே மானர்ஸ் & கோ., லிட்.
பம்பாய் - கல்கத்தா - டெல்லி - மதராஸ்

REGD. NO. M. 4392

